

**ஜூன்-157** **2012**

## பொருளடக்கம்


| வ. எண் | கட்டுரை | பக்கம் |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 1-6 |
| 2. | துணுக்குத் தோரணம் பக்கம் 78இன் தொடர்ச்சி | 7-8 |
| 3. | இராமானுசர் ஆயிரம் - இரா. அரங்கராஜனின் அணிந்துரை | 9-16 |
| 4. | ஹரிதாஸரின் ‘இருசமயவிளக்கம்’ | 17-20 |
| 5. | விலக்ஷணமோக்ஷாதிகாரி நிர்ணயம் | 21-24 |
| 6. | சார்ங்கவர்ஷம் ‘வேதநாயகன் விஷ்ணுவே’ | 25-28 |
| 7. | ‘மாறன் பாப்பாவினம்’ | 29-32 |
| 8. | இராமானுசர் ஆயிரம் - அ.வெ. ரங்காசாரியரின் அணிந்துரை | 33-46 |
| 9. | ஹரிதாஸரின் ‘இருசமயவிளக்கம்’ தொடர்ச்சி | 47-48 |
| 10. | சொல்லும் பொருளும் | 49-52 |
| 11. | துணுக்குத் தோரணம் - I | 53-56 |
| 12. | திருவிருத்தத்தில் அகஇலக்கியக் கோட்பாடுகள் | 57-60 |
| 13. | பன்னிரு பாட்டியலும் ஆழ்வார்கள் அருளிச்செய்த அந்தாதி மற்றும் மடல் இலக்கியங்களுக்கான இலக்கணங்களும் | 61-64 |
| 14. | திருமங்கையாழ்வார் பாசுரங்களின் விளக்கவுரையில் எடுத்தாளப்பட்டுள்ள உவமைகள் | 65-68 |
| 15. | துணுக்குத் தோரணம் II | 69-78 |
| 16. | “The song sung by some individual" -என்று திருமங்கை-யாழ்வாரைக் குறிப்பிட்டோரைக் குறித்த ஓர் அடியவரின் மனக் குமுறல் | 79-82 |
| 17. | "Daylight Robbery Committed by the Tamilnadu HR&CE Department proven with facts and figures - How Hindus are cheated - A detailed study." | 83-96 |
| 18. | பின்அட்டை - செய்திகள் | |



Editor : SriVaishnavaSri **A.KRISHNAMACHARI,**
Printed at: *Sri Ranganachiyar Achagam, 214, East Uthara St., Srirangam, Trichy-6. 98842 89887. www.srivaishnavasri.com*


## செய்திகள்

**1.** திருமணஞ்சேரி என்ற சிற்றூர், கீழ்த்தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை தாலுக்காவில் உள்ளது. இங்குள்ள கல்யாண சுந்தரேஸ்வரர் - கோகிலாம்பாள் ஆலயம், திருமண பிரார்த்தனை ஸ்தலமாக மிகவும் சிறப்படைந்துள்ளது. இதே ஊரில் திருலக்ஷ்மி நாராயணப் பெருமாள் கோயிலும் உள்ளது என்பது ஒரு சிலருக்கே தெரியும். இந்தப் பெருமாளும் திருமாலிருஞ்சோலை அழகரைப் போல் மிகவும் சிறப்பானவர். தற்சமயம் இந்தக்கோயில் வருமானம் இல்லாமையால், பராமரிப்பின்றி சிதிலமடைந்துள்ளது. விக்ரகங்கள் சிவன் கோயிலில் வைக்கப்பட்டுள்ளன. பெருமாள் கோயிலை புனருத்தாரணம் செய்ய அன்பர்களும் பக்தர்களும் நிதி அளிக்க வேண்டுகிறோம். காசோலை / D.D. அனுப்ப வேண்டிய முகவரி. Thirumanancheri Lakshminarayanaperumal Trust, Sri. T. Srinivasan. D.122. P.V. Rajamannar Salai, K.K. Nagar, Chennai. 600 078. Phone: 23663888/9940176878.

2. அகில பாரதீய துறவியர் சங்கம் சார்பில் கடலூர் மாவட்டம், கடலூர் நகரில் ஆடி மாதம் 27,28 சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை (11-8-2012, 12-08-2012) தேதிகளில் அகில இந்திய அளவில் உள்ள மடங்களை சார்ந்த துறவியர்களை ஒருங்கிணைத்து துறவியர்கள் மகாநாடு நடைபெறவுள்ளது. இரு நாட்கள் நடைபெறும் இம்மகாநாட்டில் சமயச் சொற்பொழிவுகள் மற்றும் உலக மக்கள் நன்மை வேண்டி சுனாமி, தானே புயல் போன்ற இயற்கை சீற்றங்களிலிருந்து மக்கள் பாதுகாப்பாக வாழ இறைவனை வேண்டி வேள்விகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

3. விருத்தாசலம், ஸ்ரீஆண்டாள் ரங்கமன்னார் ஸ்ரீவைஷ்ணவ சபையின் ஆதரவில் திருமங்கையாழ்வார் அருளிச்செய்த பெரிய திருமொழி உரைவிளக்க வகுப்புகள் 29.4.2012 ஞாயிற்றுக்கிழமை யன்று வாசவி மஹாலில் நடைபெற்றன. அறிஞர்கள் பலர் பங்கு கொண்டு உரையாற்றினர்.

4. 16.4.2012 காலைக்கதிர் தினஇதழில் வெளிவந்துள்ள செய்தி. “ஸ்ரீரங்கம் கோவிலில் நடக்கும் புதிய திட்டப்பணிகளை, இந்து சமய அறநிலையத்துறை கமிஷனர் சந்திரகுமார் நேற்று ஆய்வு செய்தார். ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் முழுநேர அன்னதானத் திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது. மேலும், காட்டழகிய

சிங்கர் கோவிலில் கலையரங்கம், கொள்ளிடம் பஞ்சன் சாலையில் (பஞ்சக்கரை) 'யாத்ரீக நிவாஸ்' ஆகியவை கட்டும் பணி நடக்கிறது.

இப்பணிகளை இந்து சமய அறநிலையத்துறை கமிஷனர் சந்திரகுமார், நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடையவர் சன்னதி அருகே அன்னதான நடக்கும் கூடத்தை உடனடியாக விரிவாக்கம் செய்ய உத்தரவிட்டார். 'யாத்ரீக நிவாஸ்', கலையரங்கம் கட்டும் இடங்களை பார்வையிட்டு, துரிதமாக பணிகள் நடக்க ஆலோசனைகளை வழங்கினார்.

ஸ்ரீரங்கம் கோவிலில் நம்பெருமாள் தீர்த்தவாரி கண்டருளும், சந்திர புஷ்கரிணி குளம் பராமரிப்பின்றி கடும் துர்நாற்றம் வீசுகிறது. ஐந்து லட்ச ரூபாய் செலவில் இக்குளத்தை தூர்வார நன்கொடையாளர் ஒருவர் முன்வந்தார். மூன்று மாதத்துக்கு முன்பே சந்திரபுஷ்கரணி தூர்வார கமிஷனர் உத்தரவிட்டும், கோவில் நிர்வாகிகள் கண்டு கொள்ளவில்லை. நேற்று சந்திர புஷ்கரணியை பார்வையிட்ட கமிஷனர், இணை கமிஷனர் ஜெயராமன் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு **'டோஸ்'** விட்டார். அதேபோல, மடப்பள்ளி அருகே சிறுநீர் துர்நாற்றமும், குப்பையும் குவிந்து கிடந்ததை கண்டு அதிகாரிகளை கண்டித்தார். **(ஆசிரியர் குறிப்பு:** ஏகாதசி திருச்சுற்று என்று பெயர் பெற்ற மூன்றாம் திருச்சுற்றான குலசேகரன் திருச்சுற்றின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ளது திருமடைப்பள்ளி. விரஜாநதி (கிணற்றை)யைத்தாண்டி சென்றால் துர்நாற்றம் வீசிக்கொண்டே இருக்கும். ஆங்காங்கே விறகு கட்டைகளுக்கடியில் காலி மதுபான பாட்டில்களையும் காணலாம். ராஜமகேந்திரன் திருச்சுற்றின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள குடிநீர் குழாய்களிலிருந்து வெளிப்படும் எச்சில் கலந்த நீர் விரஜாநதிக்கிணற்றைத் தாண்டி சந்திரபுஷ்கரிணியில் கலக்கிறது. நம் முன்னோர்கள் ப்ரணவாகார விமானத்தில் விழும் மழைநீர் சந்திரபுஷ்கரிணியில் கலப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். தற்போது எச்சில்நீர் சந்திரபுஷ்கரிணியில் கலக்கிறது. இந்த நீரில்தான் நம்பெருமாள் தீர்த்தவாரி கண்டருளுகிறார். ஸ்ரீபராசர பட்டர் தம்முடைய ஸ்ரீரங்கராஜஸ்தவம் பூர்வசதகத்தில் பெரியபிராட்டியாரும், பெரிய பெருமாளும் சந்திரபுஷ்கரிணியில் இரவு நேரங்களில் ஜலக்கிரீடை செய்வதாக வர்ணித்துள்ளார். இனிவரும் காலங்களிலாவது சந்திரபுஷ்கரிணியின் புனிதத் தன்மை காக்கப்படுமா? எத்தனை கமிஷனர்கள் வந்து எத்தனை டோஸ் விட்டாலும் யாரும் கண்டு கொள்ளப்போவதில்லை. ✱✱✱

Registration No.TNTAM/2000/5374, Registered as a Newspaper
Registered Newspaper - Posted at Srirangam H.P.O.

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத் வரவர முநயே நம:

# பாஞ்சஜன்யம்

**இதழ் எண். 157, ஜூன் - 2012**

**இலக்கியம், வரலாறு, கல்வெட்டுகள், ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தக் கோட்பாடுகள், மற்றும் மரபு மீறல்களைக் கண்டித்து எழுதப்படும் கட்டுரை களைக் கொண்ட ஒரு புரட்சிகர பல்சுவை மாத இதழ்.**

**ஆசிரியர்:ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.**

**தனிப்பிரதி ரூ.15/-**

**ஆயுள் சந்தா 1500/-** **ஆண்டு சந்தா 150/-**

**கிடைக்குமிடம்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ,**
**214, கீழை உத்தரவீதி, திருவரங்கம், திருச்சி-6.**
**☎: 0431-2434398. www.srivaishnavasri.com**

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:


# ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ

| முழக்கம்-20 | பாஞ்சஜன்யம் ஜூன் 2012-157 | ஒலி 6 |
|---|---|---|


## I. அஞ்சல் துறையின் நிர்வாகச் சீர்கேடும், பத்திரிகையாளர்கள் எதிர்கொள்ளும் துன்பங்களும்

'பதிவு செய்யப்பட்ட பத்திரிகைகள்' என்று வகைப்படுத்தப்பட்ட பாஞ்சஜன்யம் மாத இதழ். அஞ்சல் துறை குறிப்பிடும் ஒரு தேதியில் ஒவ்வொரு இதழுக்கும் 50பைசா தபால் கட்டணமாகவும் மேலும் 50 பைசா நிர்வாகக் கட்டணமாகவும் செலுத்தி ஒவ்வொரு மாதமும் 800 இதழ்கள் தபால்துறை மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது. சென்ற 6 மாதங்களாக இவ்வாறு தபால் துறையிடம் ஒப்புவிக்கப்படும் மாத இதழ்களில் 50 இதழ்கள் பல்வேறு ஊர்களில் உள்ள வாசகர்களைச் சென்றடைவதில்லை. அவற்றின் கதி என்ன என்பதை அறிந்துகொள்ளவும் முடியவில்லை. இவ்வாறு இதழ் கிடைக்கப்பெறாத வாசகர்கள் 15 நாட்கள் கழித்து எங்களுடன் தொடர்பு கொள்கிறார்கள். நாங்கள் இன்னதேதியில் அனுப்பி விட்டோமே என்று கூறுகிறோம். சில நாட்கள் கழித்து இதழ் கிடைக்கப்பெறாத வாசகர் மீண்டும் எங்களுடன் தொடர்பு

கொள்கிறார். நாங்கள் வேறுவழியில்லாமல் 2ரூபாய் தபால் தலையொட்டி 25 ரூபாய் பெறுமான இதழை (இதனை அதிக அளவில் வாசகர்கள் வாங்க வேண்டும் என்பதற்காக ரூ.15க்கு விற்பனை செய்கிறோம்.) மீண்டும் அனுப்புகிறோம். இதனால் எங்களுக்கு அதிகப்படி செலவு ரூபாய் 1250(25X50) + 100(50X2)= 1350. இந்த நஷ்டத்தை தவிர வாசகர்களுடைய அதிருப்தியையும் சம்பாதித்துக் கொள்கிறோம். வாசகர்களால் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்படுகிறோம்.

'குறைதீர் கூட்டமென்று' ஒரு கண்துடைப்பு நாடகம் அஞ்சல் துறையால் அவ்வப்போது அரங்கேற்றப்படும். அங்கே கூடும் பத்திரிகையாளர்கள் அனைவரும் தாங்கள் எதிர்கொள்ளும் இன்னல்களை விவரித்திடுவர். 'வாளேறு காணத் தேளேறு மாயுமாப்போலே' என்று ஈட்டில் ஒரு உவமை எடுத்தாளப்படுகிறது. இதன் பொருளாவது, ஒருவனுக்குத் தேள் கொட்டி விட்டது. வலி தாங்க முடியாமல் அழுதுக்கொண்டு வைத்தியர் வீட்டை நோக்கி தெருவிலே நடந்து போகிறான். அப்போது ஒரு கை வெட்டப்பட்டு தொங்கிய நிலையில் இரத்தம் சொட்டச் சொட்ட ஒருவன் வருவதைக் காண்கின்றான். உடனே தேள் கொட்டியவன் வலி பறந்தோடி விடுகிறது. 'பாஞ்சஜன்யம்' ஆசிரியர் 50இதழ்களைத் காணவில்லையென்று முறையிட்டால், 'தத்துவவாதா' பத்திரிகை ஆசிரியர் 1000 இதழ்கள் வாசகர்களைச் சென்றடைவதில்லை என்று ஓலமிடுவார். அஞ்சல் துறை நிர்வாக அதிகாரிகளோ இதற்கு எந்த உருப்படியான பதிலையும் தரமாட்டார்கள். அந்த நிர்வாகம் ஆள்பற்றாக்குறையினால் தவித்துக் கொண்டிருக்கிறது. அரசாங் கத்தின் ஒரு அங்கமாகப் பணிபுரிந்து வருவது, அஞ்சல் துறை.

நாங்கள் ஒவ்வொரு மாதமும் 3ஆம் தேதி இதழ்களை திருவரங்கம் தலைமை அஞ்சல் அலுவலகத்தில் சேர்ப்பிக்க வேண்டும். சில மாதங்கள் சிறப்பு அனுமதி பெற்று, 5 அல்லது 8 தேதிகளில் சேர்ப்பிக்கிறோம். இவ்வாறு சேர்ப்பிக்கப்பட்ட இதழ்கள் சென்னை, மதுரை, திருநெல்வேலி, காஞ்சிபுரம் போன்ற முக்கிய நகரங்களுக்கே 20 அல்லது 25 நாட்கள் கழித்துத் தான் செல்கின்றன. மற்றைய மாநிலங்களுக்கு 35 நாட்களுக்குக்குப் பிறகே சென்றடைகின்றன. சில சமயம் சென்றடைவதும் இல்லை.



தற்போது யாருக்கும் யாரிடம் எந்த, பயமும் இல்லை. தண்டனைக்குப் பயந்து வேலை செய்த காலம் எல்லாம் மலையேறி விட்டது. அஞ்சல் துறையில் ஒழுங்கின்மை அதிகரித்து விட்டது. அதிகாரிகள் கீழ்நிலை ஊழியர்களைக் கண்டு பயப்படுகிறார்கள். 'நடந்த வரையிலும் நாராயணன் செயல்' என்ற நிலையில்தான் அந்தத்துறை இயங்கிக்கொண்டிருக்கிறது. இத்தகைய சூழலில் இனியும் அஞ்சல்துறையை நம்பி, வெளியூர் அன்பர்களுக்கு பாஞ்சஜன்யம் பத்திரிகை அனுப்ப இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

ஆகவே வருகின்ற 2012 ஜூலை முதல் Courier service மூலம் அனுப்ப எண்ணம் கொண்டுள்ளோம். ஆகவே தமிழ்நாட்டில் வசிக்கும் அன்பர்கள் இனி ரூ.250ஐ சந்தா தொகையாக அனுப்ப வேண்டும். குறிப்பாக 2012 ஜூனுடன் முடிவடையும் சந்தா தொகையை புதுப்பிப்பவர்கள் ரூ. 250ஐ புதிய சந்தாத் தொகையாக அனுப்ப வேண்டும். 2012 டிசம்பர் வரை சந்தா செலுத்தியவர்கள் ரூ. 50ஐ அதிகப்படி சந்தாத்தொகையாக மணியார்டர் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யத் தவறியவர்களுக்கு எப்போதும் போல் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். ஆனால் இதழ் வந்து சேரவில்லையென்றால் மாற்று இதழ் எக்காரணங்கொண்டும் அனுப்பி வைக்க இயலாது. ஆகவே அதிக சந்தா செலுத்தி Courier மூலம் பெற்றுக் கொள்வதும், பெற்றுக் கொள்ளாததும் உங்கள் விருப்பம்.

தமிழ்நாடு தவிர மற்றைய மாநிலங்களுக்கு Courier கட்டணமாக ஆண்டொன்றுக்கு 180ரூபாய் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்த விருப்பப்படாதவர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். எக்காரணங்கொண்டும் மாற்று இதழ் அனுப்பி வைக்கப்பட மாட்டாது.

விலைவாசி கட்டுக்குள் அடங்காமல் உயர்ந்து கொண்டே போகிறது. தற்போதைய சூழலில் எந்தவித விளம்பரங்களையும் எதிர்பாராமல் செய்திகளை முழுமையாக வெளியிடுவதும், பல போராட்டங்களை எதிர் கொள்வதும் பாஞ்சஜன்யத்தின் தனித் தன்மையாகும். அறிந்துகொள்ள வேண்டிய செய்திகள் ஆயிரக் கணக்கில் உள்ளன. ஆசிரியரின் வாழ்நாள் என்பது ஒரு

வரையறைக்கு உட்பட்டதாகும். எத்துணை பயனுள்ள கட்டுரைகளைத் தரமுடியுமோ அத்துணை கட்டுரைகளைத் தர வேண்டுமென்பதால்தான் 96 பக்கங்கள் கொண்ட இதழாக பாஞ்சஜன்யம் வெளிவருகிறது. புதுப்புது கோணங்களில் கட்டுரைகள் வெளிவருவதை அன்பர்கள் அறிவார்கள். ஆகவே பொருளாதார ரீதியில் சமாளிக்கமுடியாத நிலை ஏற்படுமானால் ஆசிரியரின் காலத்திலேயே இந்தப் பத்திரிகைக்கு மூடுவிழா நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை. நல்ல உள்ளம் படைத்த பலர் இடர் நீக்கும் நிதியாக ரூ. 50,000 வரை தந்து உதவியுள்ளனர். அவர்களுக்கு என் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன். பாஞ்சஜன்யம் மற்றைய பத்திரிகைகளைப்போல் அல்லாமல் சமுதாயம் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்குக் குரல் கொடுக்கிறது, என்பதை அன்பர்கள் நன்கு அறிவர். ✱✱✱

## 2. இராமானுசர் ஆயிரம்

இராமானுசர் ஆயிரம் மூன்று பாகங்கள் (இரண்டரை கிலோ எடை கொண்ட இந்தநூல்) ரூ.500 முன்பணம் செலுத்தி பதிவு செய்து கொண்டவர்களுக்கு Courier மூலம் அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. அத்துடன் Courier Charge குறித்து கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் பெரும்பாலானோர் இன்றுவரை Courier கட்டணத்தை அனுப்பவில்லை. 800ரூபாய் மதிப்புள்ள இந்தப் புத்தகங்கள் ஒரு அன்பரின் உதவி கொண்டு ரூ.500க்கு விற்பனை செய்துள்ளோம். ஆகவே இந்த நூலைப் பெற்றுக் கொண்டவர்கள் Courier கட்டணத்தை உடன் அனுப்பி வைத்திட வேண்டுகிறேன். பெரும்பாலான வாசகர்களுடைய சந்தா 2012 ஜூன் மாதத்துடன் முடிவடைகிறது. ஆகவே அவர்களையும் சந்தாத்தொகையைப் புதுப்பிக்க வேண்டுகிறேன்.

## 3. எம்பெருமானார் அருளிச் செய்த நவரத்தினங்கள்

கீழ்க்கண்ட க்ரந்தங்கள் எமது அலுவலகத்தில் விற்பனைக்குக் கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| 1. Sribhashyam Vol I (Sanskrit) | 1 | 160-00 |
| 2. Sribhashyam Vol II (Sanskrit) | 1 | 180-00 |
| 3. Sribhashyam Vol III (Sanskrit) | 1 | 95-00 |
| 4. Sribhashyam Vol IV (Sanskrit) | 1 | 160-00 |
| 5. Vedartha Sangraham (Sanskrit) | 1 | 105-00 |
| 6. Vedanta Saram (Sanskrit) | 1 | 30-00 |
| 7. Vedanta deepa (Sanskrit) | 1 | 360-00 |
| 8. Gitabhasya Vol I,II,III (Sanskrit) | 1set | 1890-00 |
| | Total | 2980-00 |

'நித்ய க்ரந்தம்' தற்போது அச்சில் உள்ளது. விரைவில் விற்பனைக்குக் கிடைக்கும். எம்பெருமானாருடைய ஆயிரமாவது ஆண்டை நோக்கிச் செல்லும் நாம் நம்முடைய கோயில் ஆழ்வாரில் எம்பெருமானாருடைய நவரத்தினங்களையும் எழுந்தருளப்பண்ணி தினந்தோறும் ஆராதிக்க வேண்டும். அதன் வழி அந்த க்ரந்தங்களின் பொருள் ஆசார்ய அனுக்ரஹத்தால் புலப்படும். மிக உயர்ந்த பதிப்பான இந்த நவரத்தினங்களை வேண்டுவோர் எமது அலுவலகத்தில் உரிய தொகையை நேரில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். வெளியூர் அன்பர்களுக்கு அவர்கள் குறிப்பிடும் லாரி சர்வீஸில் Topay பார்சலாகத் தான் அனுப்ப முடியும். Courier மூலம் அனுப்ப இயலாது.

## 4. காரைக்கால் வித்வான் வரிச்சுக்குடி விஞ்சமூர் சுதர்சனம் ஸ்ரீ.உ.வே.கு. அரங்கநாதாசாரியர் ஸ்வாமியின் சதாபிஷேக மஹோத்ஸவம்.

வரிச்சுக்குடி ஸ்வாமியின் சதாபிஷேக மஹோத்ஸவம் வரிச்சுக்குடி பெருமாள் கோயில் வீதியில் அமைந்துள்ள ஸ்வாமி திருமாளிகையில் நந்தன வருஷம் சித்திரை 28 தொடங்கி சித்திரை 30 ஈறாக அருளிச்செயல் வேதபாராயண கோஷ்டியுடன் இனிதே நடைபெற்றது. 12.5.2012 அன்று மாலை திருக்கோவலூர் எம்பெருமானார் ஜீயர் மடாதிபதி ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி தலைமையில் வித்வத் ஸதஸ் ஒன்று நடைபெற்றது. தில்லை திருச்சித்ரகூடம் அ.வெ.ரங்காசார்யர் ஸ்வாமி, ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர், தேரெழுந்தூர் ஸ்ரீ.உ.வே. இராமன் பட்டாசார்யர் ஆகியோர் பங்குகொண்டு ஸ்வாமிக்கு பாராட்டுரை வழங்கினர். அன்று மாலை காரைக்கால் J.B.S.M. திருமணமஹாலில் உதகசாந்தி ஜபம் நடைபெற்றது. 13.5.2012 ஞாயிற்றுக்கிழமை பல்வேறு

ஹோமங்கள் நடைபெற்றன. திவ்ய தேச பஹுமானங்கள் ஸமர்ப்பிக்கப்பெற்றன. ஸ்ரீமத் பரமஹம் ஸேத்யாதி ஸ்ரீரங்கநாராயண ஜீயர் ஸ்வாமி திருவரங்கத்திலிருந்து எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தருளினார். சதாபிஷேகத்தை ஒட்டி காரைக்கால் ஸ்ரீ நித்ய கல்யாணப் பெருமாள் பக்த ஜன சபை ஆதரவில் கீழ்க்கண்ட நூல்களை ஜீயர் ஸ்வாமி வெளியிட்டருளினார்.

1. இராமாநுச நூற்றந்தாதி விளக்கவுரை, பின்னிணைப்பு, கோயில் கந்தாடை அண்ணன் அருளிச்செய்த, மணவாள மாமுனிகள் கண்ணிநுண்சிறுத்தாம்பு. (விலை ரூ. 70.)

2. ஸ்ரீ.உ.வே.கு. அரங்கநாதாசாரியர் ஸ்வாமியின் கட்டுரை மணிகள். (விலை ரூ. 70.)

3. ஸ்ரீ.உ.வே.கு. அரங்கநாதாசாரியர் ஸ்வாமியின் சதாபிஷேக அபிநந்தன விழா மலர். (மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு புத்தகங்களை வாங்குவோருக்கு இந்த நூல் இலவசமாக அளிக்கப்படும்.)

ஸ்வாமி ஆற்றிவரும் தொண்டைப் பாராட்டி ஆலய தரிசனம் ஆசிரியர் கைங்கர்ய ஸ்ரீமான் கோகுலாசாரியர், பாஞ்சஜன்னியம் ஆசிரியர் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசாரியர் மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கினர். காரைக்காலில் பல ஆண்டுகளாக ஸ்ரீவைஷ்ணவப் பயிரை உரமிட்டு வளர்த்து வருபவர் வரிச்சுக்குடி ஸ்வாமி. அன்றைய தினம் பல்வேறு துறைகளைச் சார்ந்த, மதத்தைச் சார்ந்த, தொழிலைச் சார்ந்த நூற்றுக்கணக்கானோர் வருகை தந்து ஸ்வாமியிடம் ஆசி பெற்றுச் சென்றனர்.

தமிழில் ஆழ்ந்த புலமை பெற்றவர். பல பத்திரிகைகளில் அவர் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு சிறப்புடையதாகும். அடக்கமே உருவானவர். எல்லாவற்றிற்கும் மேல் அருளாளப் பெருமாள் எம்பெருமானார் வம்சத்தில் தோன்றிய ஆசார்ய புருஷர். எம்பெருமானாரைப்போல ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயோடு மேலும் பல ஆண்டுகள் எழுந்தருளியிருந்து வைணவ சமூகத்திற்கு மேலும் மேலும் பல தொண்டுகள் புரிந்திட திருவரங்கம் திவ்ய தம்பதிகளின் திருவடிகளில் இறைஞ்சி நிற்கிறேன். ★★★



**துணுக்குத்தோரணம். பக்கம் 78இன் தொடர்ச்சி.**

மாண்புமிகு நிதி அமைச்சரோ, நாங்கள் வெளியிட மாட்டோம் என்று உறுதிபடக் கூறுகிறார் ஏன்? அனைவருக்கும் அதற்கான காரணங்கள் தெரியும். வரப்போகின்ற பொதுத்தேர்தலில் பாரதீயஜனதா கட்சி பெரும்பான்மை பெற்று ஆட்சியமைத்தாலும் அப்போது பதவி வகிக்கும் நிதி அமைச்சர் தற்போது பிரணாப் முகர்ஜி சொல்லும் அதே பதிலைத்தான் சொல்வார். தமிழ் நாட்டிலும் கோயில் நிலங்களைக் கொள்ளையடிப்பதில் எந்தக் கட்சியினரும் சளைத்தவர்கள் அல்லர். ஆகவே அவர்கள் பெயர்களை நீங்கள் அறிந்து கொள்ளவே முடியாது. ஆட்சியில் இருப்பவர்களில் தயவில் வாழ்பவர்கள்தான் அதிகாரிகள். அவர்கள் என்றும் ஆட்சியில் அமர்ந்துள்ளவர்களையோ அவர்களுக்கு நெருக்கமானவர்களையோ காட்டிக் கொடுக்க மாட்டார்கள்.

**தீர்மானம் எண்: 52.**

This Conference resolves to requests the Govt. of Tamil Nadu to utilize the service oriented persons (even retired officials) who volunteer their services for the Administration of the temples.

தற்போது ஓய்வு பெற்று பணிபுரிய விருப்பம் தெரிவித்தவர்கள் திருக்கோயில் மற்றும் அலுவலகங்களில் பணிபுரிந்து வருகின்றனர்.

**தீர்மானம் எண்: 55.**

This Conference requests the Government of Tamil Nadu and the Department of HR&CE to construct Arches at the border of every Thirumal Thirupathis in Tamil Nadu with the following information both in Tamil and English 1. Name of the Thirukoil. 2. Name of the Thirupathi & History etc.

பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**தீர்மானம் எண்: 57.**

This Conference requests the Govt. of Tamil Nadu and the

Tamil Nadu, Iyal. Isai Nataka Mandram to conduct Dramas, Dance and Hari Kathas depicting the importance and significance of respective places and temples, during Temple festivals.

தற்போது திருக்கோயில்களில் சிவராத்திரி மற்றும் பங்குனி உற்சவம் போன்ற விழாக்களில் இயல், இசை, நாடக மன்றத்தின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

**தீர்மானம் எண்: 59.**

This Conference resolves & request the Govt. of Tamil Nadu to immediately nullify the existing Tamil Nadu Hindu Religious & Charitable endowments Act and to bring forth a new relevant modified Act which can given more importance for religious persons more than officials.

பரிசீலிக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

**தீர்மானம் எண்: 93.**

This Conference places on record its displeasure on stopping the reading of panchangam at the temples on first of "Chithirai Month".

பெரிய திருக்கோயில்களில் சித்திரை மாதம்-1ஆம் தேதி பஞ்சாங்கம் வாசிக்கப்படுகிறது.

ஆணையருக்காக,

பெறுநர்

திரு.வி.ராஜ நாராயணன்,
செயலர்,
''நாராயணதனம்''
43, அண்ணாநகர்,
சென்னை - 600 040.

★★★



ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

## ''இராமாநுசர் ஆயிரம்'' அணிந்துரை

**மதுரைப் பேராசிரியர், முனைவர்**
**இரா.அரங்கராஜன்,** M.A.,Ph.D.

''இராமானுசர் ஆயிரம்'' ஓர் அரிய தொகுப்பு நூல்; செய்திக் களஞ்சியம், ஆய்வு அடங்கல்; மேலும் ஓராயிரம் நூல்களின் பிறப்பிடம்; அவாவில் அந்தாதி ஆயிரத்துக்கு நேர் நிற்கும் புகழாயிரம். பல சொல்லி என்? திருப்புகின்ற பக்கங்களில் எல்லாம் இராமானுசன் திருநாமம்; தொடுகின்ற பத்திகளில் எல்லாம் வரலாற்றுச் செறிவுகள்; அறிமுகப் படுத்தப்பெறும் ஆசாரியப் பெருந்தகைகள்; அவர்கள் உதிர்த்த அறிவுக் கனிகள் என்று இத்தகைய பாங்குகளை எண்ணுங்கால் ''யதி$_3$ஹாஸ்தி தத$_3$ந்யத்ர யந்நேஹாஸ்தி ந தத் க்வசித்'' என்று புகழப் பெற்ற மஹாபாரதமே நெஞ்சில் இழையோடுகிறது. பாரதப் பெருநூலில் சொல்லப்பெற்ற விஷயங்களே மற்றெங்கும் பேசப்படுகின்றன; இதில் இல்லாத விஷயம் வேறு எங்கும் இல்லை என்பது இத்தொகுப்பு நூலுக்கும் ஏற்கும் பெரும் புகழாகும்.

சாஸ்த்ரஜ்ஞர்கள், தார்க்கிகர்கள்; நையாயிகர்கள்; பௌரா ணிகர்கள்; தமிழ்ப் பெரும் புலவர்கள்; ஆராய்ச்சி வல்லுநர்கள் பலர் கூடிச் செய்யத்தக்க பெரும்பணியை இன்று நம் மதிப்பிற்கும் போற்றுதற்கும் உரிய ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ கிருஷ்ணமாசார்யர் தோலாத தனிவீரனாக இருந்து தொகுத்தும் வகுத்தும் விளக்கியும் Magnum Opus பதிப்பு ஒன்றை ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீமான்களுக்கு அர்ப் பணித்துள்ளார். இந்த நூற்றாண்டின் பெரும் படைப்பாகவும், எதிர்வரும் நூற்றாண்டின் வழிகாட்டியாகவும் இந்த நூல் அமைந்துள்ளது.

முதல் பாகத்தில் இராமாநுசரின் வாழ்வும் வாக்கும் ஆற்றிய பணிகளும் ஐந்து நூறு தலைப்புகளில் ஆறு நூறு பக்கங்களில் விரிவுக்கு அஞ்சாமல் வருணிக்கப்படுகின்றன. பின்பழகிய

பெருமாள் சீயரும் பிள்ளைலோகம்சீயரும் நம்மோடு பேசுவதை உணரலாம். இத்துணை நிகழ்ச்சிகள்; இத்துணை சந்திப்புகள்; இத் துணை சொற்போர்கள்; இத்துணை சமுதாயச் சிந்தனைகள்; இத் துணை வழிநடைப் பயணங்கள்; இத்துணை படைப்புகள்! உலகச் சமய வரலாற்றில் வேறு எங்கும் காண முடியாத பரிமாணங்கள். ஆயிரம் ஆண்டுகட்கு ஒருமுறை தான் ஒரு கம்பன் தோன்றுவான் என்பார்கள்; ஆயிரம் ஆண்டுகட்கு ஒரே முறை தான் எம்பெரு மானார் தோன்றுவார்; இன்று ஆயிரம் செய்தித் தொகுப்பில் எம்பெருமானாரை மீட்டெடுத்துள்ளார் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ கிருஷ்ணமாசார்யர்.

நம்பிள்ளை செப்பு நெறியில்தான் இராமானுசரை எங்கு எங்கெல்லாம் காணச் செய்திருக்கிறார் ஆயிரம் படைத்த ஆசிரியர்!

உடையார் சுப்பிரமணிய பட்டரின் ஐயப்பாட்டை அகற்றியது, திருவாய்மொழியை வடுகநம்பிக்கு சந்தை சொல்லிக் கொடுக்கும்போது எம்பெருமானார் விம்மல் பொருமலாகக் கண்ணீர் பெருக்கியது; பிள்ளை உறங்கா வில்லிதாஸருக்கு அபயம் அருளிய போது ஸ்ரீராம கோஷ்டிக்கும் ஸ்ரீராமாநுஜ கோஷ்டிக்கும் உள்ள வேறு பாட்டை உபதேசித்தது, ஈரங்கொல்லியான ஒரு வண்ணானின் மனக்குறையைப் போக்கியது;

பெரிய நம்பிக்கும் எம்பெருமானார்க்கும் இடையே நடந்த உரையாடல்கள், என்று இவ்வாறு அடுக்கிக் கொண்டே போகலாம். அறிவுத்திறனும் ஆளுமைத்திறனும் அன்பின் பெருக்கும் ஜ்ஞான பக்தி வைராக்யங்களும் ஒன்றாகச் சமைந்த ஓர் ஆசாரியரை இனிப்பார்க்க முடியுமோ மனிதர்களைத்தாண்டி மாடுகள் பக்கலிலும் அவருடைய கரஸ்பர்சம் சென்றது என்றால் அவர் உயிர்களை நேசித்த உத்தமராகவும் விளங்கினார்!

இராமானுசரின் நிர்வாகத்திறமை, தலைமைப் பண்புகள், (Leadership Qualities) அயராத உழைப்பு; அறுபது நாழிகைகளும் மேற்கொண்ட ஆலயத்தொண்டு - இவற்றை முதல் பாகத்தின் வழி அறிந்து கொள்ளலாம்.

எம்பெருமானாரின் திக் விஜயத்தைப் பிள்ளைலோகம் ஜீயரின் சொல்வழி நின்று விளக்கியுள்ளார் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ.



எம்பெருமானார் அறுபது பிராயத்தை எட்டிய நிலையில் திவ்யதேசப் பயணத்தை மேற்கொண்டார். அதற்குமுன் அமுதனார் இயற்றிய இராமாநுச நூற்றந் தாதியைத் திருச்செவி சாற்றி மகிழ்ந்தார். நம்பெருமாளும் ஓர் ஸப்தாவரணத்தன்று எம்பெருமா னாரை மடத்திலே நிறுத்திவிட்டுத் தாமும் இராமாநுச நூற்றந்தாதியை இயல் கோஷ்டியினரோடு சேர்ந்து ஸேவித்தார் என்ற நிகழ்ச்சி நெஞ்சை நிகழ வைக்கின்றது. இராமானுச நூற்றந்தாதியின் உயர்வு கருதி அதனை இயற்பாவின் ஒரு பகுதியாக சேர்த்தருளினர் நம் பூர்வர்கள்; நூற்றெட்டுப் பாசுரங்களும் உடையவர் நெஞ்சிற்பட்டு நூற்றெட்டு திவ்ய தேசங்களையும் நினைவூட்டின போலும்;

மேலும் திருவத்யயன உத்ஸவத்துக்கு திருநகரியி லிருந்து நம்மாழ்வார் எழுந்தருள இயலாதபடி தடைகள் ஏற்படவே ஆழ்வார் திருமேனியைத் திருவரங்கம் பெரிய கோயிலிலேயே திருப்ர திஷ்டை செய்து மாறன் அடிபணிந்து உய்ந்தவராக இராமானுசர் திகழ்கிறார். ஸ்வாமி நம்மாழ் வாரைத் திருப்புளிக்கீழ் திருவடி தொழப் பேரார்வம் கிளர்ந்தது. 'கலியும்கெடும்' என்று தம்மை ஆழ்வார் எதிர் பார்த்த குறிப்புகள் நாதமுனிகள் வழியாகியும் ஆளவந்தார் மூலமாகவும் வந்த வரலாறு நெஞ்சில் இடம் கொண்டன.

அதற்கு மேலாக ஆண்டாள் நாச்சியாரின் பாசுரத்தில் தமக்கு ஒரு குறிப்பைப் பதியவைத்திருந்ததும் ஒரு காலக்ஷேப கோஷ்டியில் ஆண்டாள் திருவுள்ளப் பாரிப்பை நிறைவேற்றி வைக்கத் தாம் கொண்ட ஸங்கல்பத்தையும் நினைவு கூர்ந்தார். பொதுவாக அக்காலத்தில் ராஜாக்கள் விஜயயாத்திரையை வடதிசை நோக்கியே தொடங்கி மேற்கொள்பர். ஆனால் இராமானுசர் தம் திக்விஜய யாத்ரையை தென்திசை நோக்கி மேற்கொண்டார். பெரிய பெருமாள் தென்திசை நோக்கியன்றோ திருக்கண் செலுத்துகிறார்! அதனோடு மட்டுமின்றி வேறோர் வலுவான காரணமும் இருந்தது.

முதன் முதலாக ஒரு திவ்ய தேசத்தைக் குறித்துப் பதிகம் பாடியவர் ஸ்வாமி நம்மாழ்வார்! அப்பதிகமும் திருமாலிருஞ் சோலை! அதிலும் நமக்கோர் குறிப்பு பதிந்திருப்பதாக

எம்பெருமானார் எண்ணங்கொண்டார். ''கிளரொளியிளமை கெடுவதன் முன்னம் வளரொளி மாயோன் மருவியகோயில் வளரிளம்பொழில் சூழ் மாலிருஞ் சோலை தளர்விலராகில் சார்வதுசதிரே'' (திருவாய் மொழி. 2-10-1) என்ற பாசுரக்குறிப்புத் தமக்காக வைக்கப்பட்டி ருப்பதை உணர்ந்தார் சதிருடை விரகரான ஸ்வாமி எம்பெருமானார். அதனால் முதற்கண் திருமாலிருஞ் சோலைக்கு எழுந் தருளினார். அப்போது மிகவும் வயதுமுதிர்ந் திருந்த திருமாலையாண்டானை அவருடைய திருமாளி கைக்குச் சென்று தண்டனிட்டார். பரமஸ்வாமியை மங்களா சாஸனம் செய்தார். திருவரங்கத்திலிருந்து கொண்டு சென்ற திரவியங் களைக் கொண்டு நூறு தடா வெண்ணெயும் நூறு தடா அக்கார அடிசிலும் பக்குவம் செய்து ஸமர்ப்பித்து ஆண்டாளின் குறையைப் போக்கினார்.

திருமாலிருஞ்சோலையில் சில காலம் தங்கி யிருந்தார்; இளையாழ்வார் திருத்தோப்பு என்ற நந்தவனத்தை நிர்மாணித்தார்; இராமாநுசமடம் ஒன்றை நிறுவினார்; திருக்கோயிலுக்கு முன்புறம் யதிராஜன் திருமுற்றத்தை எழுப்பினார். திருமாலிருஞ்சோலை அழகர் திருமால் அடியார் அனைவரையும் 'இராமாநுசனுடையார்' என்று அபி மானித்தார்.

திருமாலிருஞ்சோலியிலிருந்து கூடல் அழகரை மங்களா சாஸனம் செய்ய எழுந்தருளினார். அங்கே மதுரை தமிழ்ச் சங்க சைவப்புலவர்கள் அவரை எதிர்த்து 'சிவபரத்வத்தை' நிறுவிட வாதத்திற்கு அழைத்தனர். எம்பெருமானார் அவர்களோடு சொற்போர் செய்து அவர்களுடைய துர்வாதங்களைக் கண்டனம் செய்து வெற்றிக்கொடி ஏற்றினார். ''இராமாநுசன் மிக்க பண்டி தனே'' என்ற அமுதனார் திருவாக்கு மெய்ப்பிக்கப்பட்டது. அப்போது மதுரையை ஆட்சி செய்த பாண்டியப் பேரரசன் யார்? என்பதை எல்லாம் இனி ஆராய்ந்து பார்க்க வேண்டும். கூடலழகர் மங்களாசாஸனம் நிறைவு பெற்றது, எம் பெருமானார் திருப்பல் லாண்டை அநுஸந்தானம் செய்தார்.

அப்போது தம்மைச்சார்ந்து வந்த திருமாலடி யார்களைத் திரட்டி திருமதுரையின் ஸ்தல புராணத்தை விரித்து உரை நிகழ்த் தினார். ஸ்தலபுராண ச்லோகங்கள் பல பிள்ளைலோகம் சீயரின் ஸ்ரீராமாநுஜார்ய திவ்ய சரிதையில் எடுத்தாளப்பட்டிருக்கின்றன.



பிள்ளைலோகம் சீயரின் ராமாநுஜார்ய திவ்ய சரிதையில் எம்பெருமானார் தம் திருவடி பதித்த திவ்ய தேசங்களின் ஸ்தல குறிப்புகளைச் சேர்த்து உடன்வந்த அடியார்களுக்கு உரையாற்றிக் கொண்டு யாத்ரை செய்தது குறிப்பிடப்படுகிறது. அக்குறிப்புகளே 'விஷ்ணு ஸ்தலா தர்சம்' என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டன. மூலவர் திருநாமம், திருமுகமண்டலம், நாச்சிமார்கள், புஷ்கரிணி முதலிய பல செய்திகள் வழிவழியாகப் போற்றப்பட்டு வந்தன. அவையே இன்றுவரை 'நூற்றெட்டு திவ்யதேசங்கள்' வெளியீடுகள்வழி பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ***(பல ஆண்டுகளுக்கு முன்னர் திருநாங்கூர் ப்ரதிவாதிபயங்கரம் ஸ்ரீ.உ.வே ஸ்ரீநிவாஸா சாரியர் ஸ்வாமி மிகப்பழமையாய் சிதிலமாயிருந்த ஏட்டுச் சுவடி களிலிருந்து 'விஷ்ணு ஸ்தலாதர்சம்' என்ற ஸம்ஸ்க்ருத ச்லோகங்களை அச்சிட்டுப் ப்ரகடனப்படுத்தினார்.)***

கூடல் மாநகரிலிருந்து திருமோகூர் சென்று வழித் துணையாக காளமேகத்தை மங்களாசாஸனம் செய்து; அங்கிருந்து திருத்தண்கல் திவ்யதேசத்தை அடைந்து பயணச் சோர்வை தண்ணிய காற்றில் ஆற்றிக்கொண்டு திருத்தண்கல் அப்பனிடமிருந்து விடைபெற்று, ஸ்ரீவில்லி புத்தூர் நோக்கிப் பயணப்பட்டார். அப்போது உடன்வந்த அடியார்களின் களைப்பு மற்றும் ஐயப்பாடுகளை அகற்ற எம்பெருமானார் ஆசுகவியாக அழகிய தமிழ்ப் பாசுரங்களைச் சொல்லிக் கொண்டே பயணப்பட்டார் அவை தமிழின் அகப்பாடல்களாக அழகுற அமைந்தன. அவற்றுள் கீழ்க் கண்ட பாடல் ஒன்று ராமானுஜார்ய திவ்ய சரிதையில் இடம் பெற்றுள்ளது.

''முத்தூரும் வெண்ணகையாய் கடந்தோம் முதுபாலை நிலம்
எத்தூரம் போரும் முன்செல்கின்ற தூரமெனில் இரண்டு
செய்த்தூரம் போகும் திருமல்லி நாட்டுறைந்த வில்லி
புத்தூரும் பச்சைத் துழாய் மணம்நாறிய பொய்கையுமே''

'சொல்லார் தமிழ் ஒரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா அறநெறியாவும் தெரிந்தவன்' என்று அமுதனார் திருவாக்கில் எம்பெருமானாரின் தமிழ்ப்பற்று காட்டப்பெற்றது நினைவுக்கு வரும்!

ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாள் சோதிவாய் திறந்து 'கோயில் அண்ணரே!' என்று அன்புடன் அழைத்துச் செந்தமிழில் 'கோயில் அண்ணன்' என்ற திருநாமத்தைச் சூட்டி மகிழ்ந்தார். அங்கே சிலகாலம் தங்கி நேராக ஆழ்வாரைச் ஸேவிக்கப் புறப்பட்டு முதற்கண் திருப் புளிங்குடி சேர்ந்தபோது அர்ச்சககுமாரத்தியிடம் திருக் குருகூரின் தொலைவு எவ்வளவு என்று கேட்டு 'கூப்பிடு தூரம்' என்று அப்பெண்பிள்ளை நினைவு படுத்தினாள். 'கொடு வினையேனும் பிடிக்க நீ ஒரு நாள் கூவுதல் வருதல் செய்யாயே' (திருவாய்மொழி. 9-2-10) என்ற திருவாய் மொழித் தொடர் உடையவர் உள்ளத்தில் ஆழப்பதிந்து ஒலித்துக் கொண்டேயிருந்தது.

எம்பெருமானார் திருக்குருகூரில் எழுந்தருளியிருந்த போது நிகழ்ந்த ஸம்பவங்களை இத் தொகுப்பில் ஆங்காங்கு காணலாம்.

(அ) ஸ்வாமி நம்மாழ்வார் தம்முடைய திருவடி நிலைகளுக்குப் பெயர் மாற்றம் செய்துகொண்டார். அதுவரை 'மதுரகவிகள்' என்று விளங்கியதை 'இராமாநுசன்' என்று மாற்றி ஏற்றுக் கொண்டருளினார்.

(ஆ) எம்பெருமானார் தம்முடைய மருமகனாரை மிகவும் ஆதரித்து அபிமான புத்திரராக ஸ்வீகாரம் செய்து கொண்டு அருளினார்.

(இ) அதற்கும் மேலாக ஆழ்வார் திருமுன்பே அவருக்கு 'திருக்குருகைப்பிரான் பிள்ளான்' என்று நாம கரணமும் செய்தருளினார். அந்தத் திருப்பெயரில் நம்மாழ் வார் திருப்பெயர் மட்டுமன்றித் திருக்கோட்டியூர் நம்பியின் திருநாமமும் சேர்ந்ததால் பெருமகிழ்ச்சியுற்றார். பின்னால், திருவாய்மொழிக்கு முதன்முதலானப் பேருரை வரைவ தற்கான ஓர் ஆசாரியரை அங்கு எம்பெருமானார் அறிமுகப் படுத்தினார்.

(ஈ) மதுரகவியாழ்வாருக்கு நம்மாழ்வார் திருவருளால் கிடைக்கப்பெற்றிருந்த பவிஷ்யதாசார்யரின் திருமேனி பூமியில் புதைந்து பட்டது போலும்! பிற்காலத்தில் எம் பெருமானாரின் அபராவதாரமாய் வந்தருளிய மன்னுபுகழ் மணவாளமாமுனிகளின் திருக்கரங்களுக்கே அத்திருமேனி திருவாய்மொழிப் பிள்ளையால்



கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப் பெற்று திருக் கோயில் கொண்டிருந்தது.

(உ) தாமிரபரணி நதியில் எம்பெருமானார் நீராட்டம் கண்டருளி திருமண்காப்பு சாற்றிக் கொள்ளும் போது ஆழ்வார் திருக்கோயில் வண்ணான் தன்னுடைய குழந்தை களுக்கு ஆழ்வார் திருநாமங்களைச் சாற்றி அழைத்தது கேட்டு, அவனைப் பாராட்டி அவனுடைய குடிச்சீர்மையைக் கண்டு வியந்தார். இச்செய்தி அங்கு செவிவழியாக இன்றும் கேட்கப்படுகிறது.

எம்பெருமானார் திருக்குருகூரில் தங்கி ஆழ்வார்க்கு ஏகாந்தமான பணிவிடைகள் செய்து 'மாறன் அடிபணிந்து உய்ந்தார்! நவதிருப்பதிகளுக்கும் திருக்குருகூர் திருப்புளி யடியாழ்வாரையே ஒரே ஸந்நிதியாக அமைத்தார்.

நம்பெருமாள் திருவடி நிலைகள் சடகோபன் என்று அபிமானிக்கப்பட்டிருந்தது; சடகோபன் திருவடி நிலைகள் 'இராமாநுசன்' என்று அபிமானிக்கப்பட்டது!

எம்பெருமானார் நவதிருப்பதிகளையும் மங்களா சாஸனம் செய்தருளினார். இடையில் திருக்கோளூர் பெண்பிள்ளை அவர் சந்தித்த வரலாறு நெஞ்சை நெகிழ வைக்கிறது. இந்நூலில் பக்கம் 157இல் இதன் விரிவினைக் காணலாம். திருக்குறுங்குடியில் குறுங்குடிநின்றநம்பிக்கு த்வய உபதேசம் பண்ணி ஸ்ரீவைஷ்ணவநம்பி என்று திருநாமம் சாற்றியருளினார். (பக்கம் 161)

அதற்கு மேல் மலைநாட்டுத் திருப்பதிகளுக்கும் வட நாட்டுத்திருப்பதிகளுக்கும் கால்நடையாகவே எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தார். அதனாலேதான் அங்கு ஆழ்வார் ஸந்நிதிகளோ தீர்த்தம் ஸ்ரீசடகோபனோ இல்லாதுபோயினும் எம்பெருமானார் திருப்பாதம்பட்ட புனிததேசங்கள் என்று பின்புள்ள ஆசாரியர்கள் கொண்டாடி மகிழ்ந்தனர்.

எம்பெருமானார் திருவடிகள்பட்ட புனிதத் தலங்களை இந்திய தேசப்படத்தில் குறித்துப்பாருங்கள்! அது ஒரு பிரணவம் போலே அமைந்திருக்கும். பாரதப்பெருங் கண்டத்தை வலம் வந்தவர் ஸ்வாமி; திவ்யதேச யாத்திரை முற்றுப்பெற 25 வருஷங்கள்

ஆயிற்று என்று பிள்ளைலோகம் சீயர் குறிப்பிட்டுள்ளார். இந்தப் புனிதப்பயணத்தின்போது நிகழ்ந்த பல அற்புதங்களையும், இடர்ப்பாடுகளையும் அறிந்து கொள்ள இந்த நூலின் பக்கங்களைப் புரட்டுங்கள் ஆங்கே காணலாம்!

இராமாநுசர் ஆயிரம் பாகம்(2) அரிய பெட்டகம்! பழைமைச் செல்வங்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன.

யதிராஜவிம்சதி, தாடீபஞ்சகம், இராமாநுச நூற்றந் தாதி, ஆர்த்திப்பிரபந்தம், யதிராஜஸப்ததி, யதிராஜவைபவம், ஸ்ரீராமாநுஜ சதுச்லோகீ மற்றும் பல உதிரிப் பூக்களான ச்லோகங்கள் ஆகியன சேமிக்கப்பட்டுள்ளன;

அடுத்தபடியாக, ஆசாரியப் பெருமக்கள் அவ்வப் போது அருளிய நல்வார்த்தைகள், திருவாய்மொழிப் பேருரைகள், ரஹஸ்யக்ரந்தங்கள் ஆகியவற்றிலிருந்து தொகுக்கப்பட்ட மாலை, மணம் கமழ்வதை நுகர முடிகிறது. தொடர்ந்து மாமுனிகளுக்குப் பிற்பட்ட ஆசாரியர்களின் உரைநடை நூல்களும், கோயிலொழுகுச் செய்திகளும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

இத்தொகுப்பில், வேதாந்த ஸாரம் தமிழாக்கம் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. வேதாந்தம் பரிமளிக்கும் இப்பகுதியை அன்பர்கள் நின்று நிதானமாகக் கற்று விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை அறிந்து கொள்ள வேண்டுகிறேன்.

இத்தொகுப்பு நூலில் அடியேனை மனம் கவர்ந்த பகுதிகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டன என்பதை எம்பெருமானார் திருவுள்ளமே அறியும். ஒவ்வொரு ஸ்ரீவைஷ்ணவருடைய திருமாளிகையிலும் இந்த மூன்று புத்தகங்களும் கோயிலாழ்வார் எழுந்தருளப் பண்ணப் படக்கூடிய தகுதி பெற்றவை.

**ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயின் தொண்டு வாழிய வாழியவே!**

**மதுரை**
**16.5.2012.**

***

# ஹரிதாஸரின்
# இருசமய விளக்கம்

*இதழ் 156இன் தொடர்ச்சி. விளக்கவுரை:புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜதாஸர்.*

**பாடல் 11இன் பொருள்:**

பவுண்டரிகன் கேட்டபடியே சிவனும் வரமளித்தனன். உடனே இவனுடைய சரீரம் மேகநிறம் போல் விளங்கியது. நான்கு கைகளோடு கூடிய தோளும் உண்டாயின. கருடக் கொடியும் தோன்றியது. நான்கு கரங்களில் திருவாழி சங்கு, பத்மம், கதை முதலிய ஆயுதங்களு முண்டாயின; ஆடையும் பீதாம்பரமாயிற்று. இவன் இவற்றையெல்லாம் கண்டு மனமகிழ்ச்சியுற்றுத் தன் இருப் பிடமான காசி மாநகரத்திலுள்ள தன்னுடைய அரச மாளிகைக்கு வந்து சேர்ந்தான்;

*12.* *ஏனைநீள் குறியால் அரவிற்றுயில் ஏக*
*நாயகன் நான்மறை யிற்பொருள்*
*ஆனடே ரொளிநானி பமுற்சொலும் ஆதி*
*மூலமும் நானழி வற்றுயர்*
*வானோளோர் பதிநான் மகிமைப் பரவாசு*
*தேவனும் நானென மற்றவன்*
*ஞான யோகியர் மாதரு முட்பட ஞால*
*மேலுறை வாரை மயக்கவே*

**பொருள்:** துவாபரயுகத்தில் பவுண்டரிகன் என்னும் அசுரன் காசியம்பதியை ஆண்டு வந்தான். அவன் (அந்தக் கண்ணனைப் போன்ற) நீண்ட அடையாளத்தால் அகங்காரமுடையவனாய், அரவணையிற்றுயிலும் ஏக நாராயணனும் யானே; வேதப்பொரு ளாய் விளங்குபவனும் யானே; கஜேந்திரன் என்ற யானையின் முன்சென்ற ஆதிமூலமும் யானே; அழிவற்ற தேவருக்கு நாயகனும் யானே; மகிமை பொருந்திய பரவாசுதேவனும் யானே; என்று தன்னை உயர்வாக மதித்துரைத்து, உலகிலுள்ள ஞானயோகியர் மாதர்களுமுட்பட யாவரும் மருளும்படி மயக்கினான், அந்த பவுண்டரீகன்;

*13.* *காசி ராசனை நெஞ்சில் வியப்பொடு*
*கானநா ரதன்வந்து பழித்துயர்*
*வாசுதே வனெனும் பெயர்பெற் றினிவாழ*
*வேமனம் உண்டெனின் மற்றைய*
*தேசு கூருமு குந்தனை மெய்ப்புகழ்*
*சேர்துவா ரகைசென்று செருக்கொடு*
*பூசலாடி விரைந்து செயித்திடு போதி*
*போதிநீ என்று முடுக்கவே.*

**பொருள்:** இங்ஙனம் சிவனுடைய வரத்தால் திருமாலின் வடிவைப்பெற்று யாவரையும் மயக்கிக் கொண்டிருந்த பவுண்ட ரீகனைக் காண்பதற்கு நெஞ்சில் வியப்பொடு கானத்தில் - இசையில் வல்லவரான நாரதமுனி அங்கு வந்து சேர்ந்தனர். அப்பொழுது இவனை நோக்கி அப்பா! உனது கீர்த்தியைக் கண்டு மெச்சினேன்; ஆகிலும் நின்னிடத்தில் குறை ஒன்றுளது; அதனை அகற்றிக் கொண்டாலன்றி உனது புகழ் நிலைபெறாது; ஆதலால் அதனை நீக்கிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றாய். அது யாதெனின், 'நீ இனி வாசுதேவன் என்ற பெயருடன் வாழ வேண்டும் என்ற எண்ணம் உனக்கிருக்குமேல் துவாரகாபுரியில் புகழ்பெற்று வாழ்கின்ற வாசுதேவனை வெல்ல வேண்டும் அன்றோ! அவனுமிருக்க உனக்கிப்பெயர் எவ்வாறு நிலைபெறும்? இனியொரு கணமேனும் தங்காது போருக்குப் புறப்படு; புறப்படு என்று ஏவினர்;

*14.* *ஆயதேர் நிரையா டல்மிகும் பரியானை*
*ஆளணி யாழி நெடும்புவி*
*தேயவீ றுடனே செலவிஞ்சை யர்தேவர்*
*தானவர் மாலுற விந்திறை*
*நேய மாயன் விரும்பி யமர்ந்திடு*
*நீள்துவா ரையூரின் நெடுங்கொடி*
*வாயின் மேயினனீ டுபவுண் டரவாசு*
*தேவ மகிதல துங்கனே.*

**பொருள்:** உடனே பவுண்டரிகன் இரதம், யானை, குதிரை, காலாட்படை என்ற நால்வகைச் சேனையுடன் இந்த நீண்ட பூமி அதிரும்படி புறப்பட்டுத் தேவர், தானவர் எல்லாம் மயக்கம் அடையும்படி இலக்குமி பிராட்டியார் விரும்பும் மாயன், விரும்பி அமர்ந்திருக்கும் நீண்ட



கட்டுங்காவலுமாயுள்ள துவாரகாபுரியைக் கிட்டினான், பவுண்டரிக வாசுதேவன் என்பவன்.

*15.* *வாசுதே வனெனத் திகழ்பேர் விடுமார்*
*பின்மேவு கவுத்துவ மேவிடு*
*தேசுகூர் கதைபற்ப முலாவிடு சேம*
*வாள்வளை சக்கர மேவிடு*
*வீசு நீள்கருடக் கொடிநீ விடுவீறு*
*பீதக முற்றொளி தாவிய*
*தூசுதான் விடெனச் சொலவே றொருதூத*
*னான வனைக்கடி தேவவே.*

**(இ.பொருள்)** இங்ஙனம் அவ்வரசனான பவுண்டரீகன் துவார கையை அடைந்தவுடன், அங்கு ஓர் தூதனை அழைத்து, 'நீ கிருஷ்ணனிடத்திற் சென்று 'இனிமேல் வாசுதேவன் என்ற பெயரையும், மார்பிலணிந்துள்ள கௌஸ்துபமணியையும், சங்கு சக்கரம் முதலிய ஆயுதங்களையும் கருடக்கொடியையும், பீதக வாடையையும், விட்டொழிப்பாய்' என்று கூறிவருவாய் என்று ஏவினன்;

*16.* *வாய்மைதூ தனுரைக்க நகைத்தொளிர் மாலும்*
*நாலு வகைப்படை சொற்படி*
*ஏமறா தமருக் கொருமித்தனம் ஏகு*
*நீயிது செப்பென விட்டுயர்*
*சேமமார் கருடப் புயமுற் றெழில்சேர்*
*துவாரகை யைப்பிற கிட்டொளிர்*
*காமர் நாண்மலர் நொச்சி தரித்தடர்*
*காசிரா சனைமுட்டி நெருக்கவே.*

**(இ.பொருள்)** அந்த தூதுவனும் கண்ணபிரானிடத்தில் அங்ஙனமே தெரிவித்தான். இவ்வுரையினைக்கேட்ட எம்பெருமானும் புன் முறுவல் கொண்டு நோக்கி, 'நாமும் நால்வகைப் படையுடன் போருக்கெழுவோம் என்று சொல்வாய்' என்று அத்தூதனை அனுப்பினார். அதன் பின் கண்ணபிரான் நொச்சி தரித்து உயர்ந்த அடியார்க்குக் காவலாயுள்ள கருடன்மேல் ஏறி அந்தப் பவுண்டரிக வாசுதேவனை நெருக்கிப் போருக்கு ஆயத்தமானார்;

17. வாதுகூற மலைத்த பவுண்டர வாசு
தேவன் எடுத்த நெடுங்கதை
நாதவால் வளைசக் கரம்அம் புயம்நாலு
தோளோ டறக்கணை தொட்டபின்
நிதியாழி சுழற்றி யெறிந்திட நேரி
லாமகு டத்தலை யும்பல
காதமோடி நிலத்தவன் முன்புறை காசி
மாளிகை புக்கு மறிந்ததே.

**பொருள்:** இங்ஙனம் தன்னிடம் வாதுகூறிப் போருக்கு வந்த பவுண்டரிகனைக் கண்ணபிரான் நெருக்கித் தனது அம்பினால் அவன் ஏந்திய சங்கம், சக்கரம் தண்டு முதலிய ஆயுதங்களையும், நான்கு தோள்களையும் துணித்துப் பின் சக்கரப்படையை எறிய, அது அவ்வரசனது மகுடன் ஏந்திய தலையைப் பலகாத தூரம் ஓடி அவன் மாளிகைபுக்கு மரிக்கும்படி செய்தது.

**சாதனையோகஞ்செய்த சங்கரசிவன் கதை.**
**(வேறு)**
**எண்சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்**

18. தாரணியி லிதனையெலாந் தவறி லாமல்
தக்கபுகழ் பதுமத்துத் தரகாண் டத்துச்
சீரியவே தப்பொருளைத் தழுவுஞ் செஞ்சொல்
திகழைம்பத் தேழாமத் தியாயத் துள்ளும்
ஏரமர்பா கவதத்து மியம்பா நிற்கும்
இவ்வளவோ வின்னமுமொ ன்றியம்பக் கேளாய்
வேரிமல ராசனனைச் சிவனை மற்றும்
வெவ்வேறு பேர்பெறும்விண் ணவரை யெல்லாம்;

**பொருள்:** பூமியில் இந்த வரலாற்றினையெல்லாம் பிழையின்றிச் சிறந்த புகழினையுடைய பத்மபுராணம் உத்தரகாண்டத்தில் வேதப்பொருளைத் தழுவியுரைக்கின்ற ஐம்பத்தேழாம் அத்தியாயத் திலும் அழகுமிக்க பாகவதத்திலும் பரக்கக் காணலாம். இவ்வளவு மாத்திரமோ; ஆகமப்பெண்ணே! இன்னமும் உரைப்பேன் அவற் றைக்கேள். மணம்மிக்க தாமரைமலரை ஆசனமாகவுடைய பிரமனையும், சிவனையும் மற்றும் வெவ்வேறு பெயர்களையுடைய தேவர்களை யெல்லாம்;

(தொடர்ச்சி பக்கம். 47)



# எறும்பியப்பாவின் விலக்ஷண மோக்ஷாதிகாரி நிர்ணயம்

இதழ் 154இன் தொடர்ச்சி. விளக்கவுரை:புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜதாஸர்.

**விளக்கம்: அதிகாரி அல்லாதவர் வெறுப்பரென சிறிதும் அச்சமில்லாமல் அகங்காரமில்லாத தாழ்சாதியில் பிறந்த பகவத் பக்தியால் உயர்ந்த வைஷ்ணவரைப் பின்பற்றித் தீர்த்த பிரஸா தங்களை அங்கீகரிக்க வேண்டுமென்று தம் நூலில் விதித்த அதிகாரிகள் இதுவும் சொன்னால், அதிகாரி வேற்றுமையால் மேற்சொன்னவை கூடுமென்று தோற்றுமல்லவா? இன்னமும் இந்த ஆசாரம் புறமதத்தவரால் கற்பிக்கப்பட்ட ஆகம நூலிலும் உண்டு.**

---

**மூலம்:**

பகவத் ப்ரவ்ருத்தி விரோதி ஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தி விதித்ததே ஹேதுவாக்கித் தன்னடையே சொல்லிற்றாகாதோ? என்ன, அப்போது சாஸ்த்ர பரிக்ரஹமானாலும், பகவதுக்தியானாலும், ப்ராக்தந (பழமையான) சிஷ்டாசாரங்களானாலும் ஒன்றுமின்றிக்கேயிருக்க, பௌத்தரைப் போலே ஆபாஸ உத்திகளாலே விபரீதார்த்தங்களைச் சொல்லிக் கொண்டு, பகவந் மாயாகல்பிதங்களான சில ப்ரத்ய க்ஷங்களைக் காட்டி ப்ரமித்துத் திரியா நிற்கிற சில அப்ராமாணிகருடைய உக்த்யாநுஷ்டாநங்கள், உஜ்ஜீவ நேச்சையுடையவர்களுக்கு ப்ரமாண மாகக் கொள்ளப் போகாது. அது என்? அவர்கள் தாம் ஸ்வதந்த்ரமாய் ஓரநுஷ்டாநம் கல்பிக்கிறதில்லையே, (264) தர்மஜ்ஞ ஸமய: ப்ரமாணம் (ஆபஸ். தர். 1-1-1) (265) யத்யதாசரதி ச்ரேஷ்டஸ் தத்ததே வேதரே ஜந: (கீதா. 3-21) என்கிறபடியே சிஷ்டாசாரமே ப்ரமாணமாக அங்கீகரித்து, ஆசார்யஸ்ய ப்ரஸாதேநே மம ஸர்வம பீப்ஸிதம்-ப்ராப்நுயாமீதிவிச்வாஸோ யஸ்யாஸ் தி ஸ ஸுகீபவேத ( ) என்று, ஸ்வாசார்ய விச்வாஸத்தாலே ததாஜ்ஞநு வர்த்தநம் பண்ணினால் நர்த்தகரமாமோ? என்னில், ஸ்வாசார்யாஜ்ஞை என்று அங்கீகரிக் கலாவது, அவர் தல்லக்ஷண லக்ஷிதராய் சாஸ்த்ர பாணியாய்

ப்ரபலப்ரமாண பரதந்த்ரராய் ஸ்ரீவசனபூஷணாதி திவ்ய சாஸ்த்ரோக்த ரீத்யா சிக்ஷித்தாலிறே.

**விளக்கவுரை:**

**பகவான் நம்மைக் காக்கச் செயற்படும்போது அதற்கு விரோதமாக நாம் நம்மைக் காக்கச் செயற்படுதலாகிற இதனை விட வேண்டும் என்று சரமச்லோகத்திலே விதித்தால், அதனையே காரணமாக்கித் தீயவொழுக்கத்தை மேற்கொள்ளுதல் என்று பொருளாற்றலால் தன்னடையே சொல்லிற்றாகாதோ? என்ன, அக்காலை அத்தீயவொழுக்கத்தை மேற்கொள்ளலா மென்று சாத்திரங்களும் கண்ணனும் தொன்மையாய் நிகழ்ந்து வரும் நல்ல ஆசாரங்களையுடைய சிட்டர்களாலும் கூறுதல் ஒன்றுமின்றிக்கே யிருக்க, நாத்திகரான புத்தரைப் போலே ஆபாசவார்த்தைகளாலே மக்களை மயக்கி முரண்பட்ட பொருள் களைக் கூறிக் கொண்டு, தீயோரைத் தண்டிப்பதற்காக இறை வனால் உண்டாக்கப்பட்ட மாயையால், சில கண்ணால் காணக்கூடியவைகளைக் காட்டி மயக்கமுடைய அறிவினை உடையராய்த் திரியா நிற்கின்ற சில பிரமாணமாகிய உண்மை நூலிற் கூறியவற்றை ஏற்காதவர்களது சொல்லும் செயலும், உயர்வடைய விருப்பமுடையோர்க்கு அவை சான்றாகாது. அதுவென்? விபரீதப் பொருளைப் போதிப்பவர்கள்தாம் சுவதந்திரமாகவொரு ஒழுக்கத்தைப் படைப்பதில்லையே? (264) தருமத்தை அறிந்தவர்களின் ஒழுக்கமே பிரமாணம் ஆகும் என்றும், (265) ஞானம் அனுட்டானம் இவற்றால் சிறந்தவன் எந்தக் கருமங்களை அநுட்டிகிறானோ அந்தக் கருமங்களையே சாமானிய மக்களும் செய்கின்றனர் என்கிறபடி,சிட்டா சாரத்தையே பிரமாணமாக அங்கீகரித்து ஆசாரியனுடைய அருளாலே நான் எல்லாவிருப்பங்களையும் பெறுவேன்? என்று எந்தச் சீடனுக்கு நம்பிக்கையிருக்கிறதோ அவனே இன்பம் அடை வான் என்று தன்னுடைய ஆசார்யனிடத்திலுள்ள நம்பிக்கையாலே அவ்வாசாரியனது கட்டளையை ஏற்று நடந்தால் அழிவுவருமோ? எனின் தனது ஆசாரியன் கட்டளை என்று அங்கீகரிக்கலாவது, அவர் ஆசாரியனுக்கேற்ற சிறப்பினையுடையராய் சாத்திரங் களையே கையாகக் கொண்டவராய் மிக்க பெருமைபெற்ற பிரமாணங்களுக்கு வசப்பட்டவராய் ஸ்ரீவசனபூஷணம் ஆசாரிய**



**ஹ்ருதயம் முமுக்ஷுப்படி போன்ற திவ்ய சாத்திரங்களிற் கூறப் பட்ட முறையில் பரிட்சை செய்து சீடனுக்கு உபதேசித்தா லன்றோ சீர்மையுடையனவாகும்.**

**மூலம்:** அப்படிச் சொல்லாதே 'தன்னெஞ்சில் தோற்றினதே சொல்லி இது சுத்தவுபதேச வரவாற்றது' என்று சில விபரீதார்த்தங்களை கல்பித்து, ''அணங்குக் கருமருந் தென்றுஅங் கோராடும் கள்ளும்பராய்'' என்கிறபடியே, இந்த நிஷித்தாஷ்டாநமே ஸித்தோ பாயமென்று சிஷ்டஜநங்களறியாதபடி, ஒருவருக்கொருவர் ஸாங்கேத்ய பாஷணங்களாலே சொல்லிக் கொண்டு, 'சதாந்த' ந்யாயத்தாலே கூபத்திலே விழுகிற அப்ரமாணிகரைப் பற்றி ததாஜ்ஞா பரிபாலநம் பண்ணினால், ஓட்டை ஓடத்தோடு ஒழுக லோடமாய், இருவரும் மூழ்கிப் போவார் ஆகையாலே அவர்களுடைய ஸஹவாஸம் தூரத: பரிவர்ஜநீயமிறே.

ஆசார்யனானவன், அஹங்காரார்த்த காமோபஹத னன்றிக்கே லோக பரிக்ரஹமுடையவனாய், (266) ஸாக்ஷாந் நாராய ணோதேவ: க்ருத்வா மர்த்யமயீம்தநும்-மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாச்சாஸ்த்ர பாணிநா (ஜயாக்-ஸம்) என்கிறபடியே, சாஸ்த்ர பாணியாய் ரக்ஷிக்குமவனிறே. அந்த சாஸ்த்ரமும் குணாநு குணமாக பஹுவிதமாயிருக்கை யாலே, (267) அஸாரம் அல்ப ஸாரஞ்ச ஸாரம் ஸாரதரம் த்யஜேத்பஜேத் ஸாரதமம் சாஸ்த்ரம் ரத்நாகர இவாம் ருதம் ( ) என்கிறபடியே,

**விளக்கவுரை: அவ்வாறு செய்யாமல் ''தன்னெஞ்சில் தோற்றி னதே சொல்லி இது சுத்தவுபதேசவர வாற்றது'' என்று, சில விபரீத அர்த்தங்களைக் கற்பித்து, ''அணங்குக்கு அருமருந் தென்று அங்கோராடும் கள்ளும்பராய்'' என்கிறபடி, இந்த தீயவொழுக்கமே சித்தோபாய மென்று சிட்டர்கள் அறியாத படி ஒருவருக்கொருவர் (ஆசாரியனும் சீடனும்) இணைந்து கெட்ட நடத்தை பற்றியே பேசிக் கொண்டு ''நூறு குருடர்கள் சேர்ந்து இதுதான் வழியென்று ஒரு கிணற்றிலே விழுந்தார் கள்'' என்ற வழக்கின்படி, பாழுங்கிணற்றிலே விழுகிற பிரமாணத்தைப் பற்றாதாரைப் பற்றி அவர் கட்டளைப்படி நடந்து கொண்டால், ஓட்டை ஓடத்தோடு ஒழுகலோடமாய் சீடனும் ஆசாரியனும் ஆகிய இருவரும் பிறவிக் கடலில்**

**மூழ்குவராகையாலே, அப்படிப்பட்டவர்களது சேர்த்தி சேய்மையில் விடத்தக்கதன்றோ.**

**ஆசாரியனானவன், அகங்காரம் பொருள் இன்பங் களில் ஈடுபாடு கொண்டவனாயிராமல் உலகோர் ஆசாரிய குணங்களுக்கு ஏற்றவன் இவன் என்று இசையும்படியான நல்லொழுக்கமுடையனாய் (266) நேரே பரம் பொருளான இறைவன் தனது கருணையாலே மனித உருவை எடுத்துக் கொண்டு சாத்திரங்களாம் கைகளாலே பிறவிக் கடலில் மூழ்கியிருக்கும் உலகங்களை (மக்களை) கைதூக்கி விடு கிறான் என்றபடி, ஆசாரியன் சாத்திரமாகிய கையைக் கொண்டு உலகோரைக் காப்பவனல்லவா. அந்தச் சாத்திரங் களும் குணங்களுக்கேற்றவாறு பலவிதமாயிருக்கையாலே, (267) சாத்திரங்களில் ஸாரமற்றதாயும், குறைந்த ஸாரமுள்ள தாயும், ஸாரமுள்ளதாயும், அதைக் காட்டிலும் மிக்க ஸார முள்ளதாயிருக்கும் இவற்றைவிட்டு எல்லாவற்றைக் காட்டி லும் மிக அதிக ஸாரமுள்ளதையே கடலில் அமுதத்தைப் போலே கைக்கொள்ள வேண்டியது என்கிறபடி,**

---

**மூலம்:** அஸாரமான பாஹ்ய சாஸ்த்ரமும், அல்பஸாரமான பூர்வ பாகமும் ஸாரமான உத்தர பாகமுமாகப் பரக்கச் சொல்லுகிறவை யெல்லாம் விட்டு, ஸாரதரமான விஷ்ணு காயத்ரியில் ஸாரதமமாக முதலிலே சொல்லப்பட்ட ஸம்ஸார நிவர்த்தகமான பெரிய திருமந்த்ரத்தை உத்தேசித்து, ததநுரூபாநுஷ்டாநங்களை விதித்து, ஆழ்வார்களும் ஆசார்யர்களும் க்ரந்தஸ்தங்களாகவருளிச் செய்தும் தாமாசரித்தும் போருகிறபடிகளொன்றும் தப்பாதபடி தானுமாசரித்து இவனையும் ஆசரிப்பிக்குவனாகிலிறே, இருவருக்கும் உஜ்ஜீவனம் ஸித்திப்பது. நீச ஸ்பரிசமுடைய குருமந்திரதேவதைகள் பரித் யாஜ்யங்கள் என்று ஆச்சான்பிள்ளை அருளிச் செய்தாரிறே. (மாணிக்கமாலை) அர்த்த ஸ்துதியிதுவாயிருக்க ஸம்ஸார நிவர்த்தக மூலமந்த்ர உபதேஷ்டாவே ஆசார்யனென்று வாங்மாத்ரஞ் சொல்லிக் கொண்டு (268) ''த்ருஷ்ணாதோயே மதநபவநோத்தூத மோஹோர்மிமாலே தாராவர்த்ததே தநய ஸஹஜ க்ராஹ ஸாங்காகுலேச'' ( ) என்கிறபடியே ஸம்ஸார ஸாகரத்திலே அழுந்தித் தானும் கரையேற மாட்டாதே தன்னைப் பற்றினவனையும் பத்த ஸம்ஸாரியாம்படி பண்ணி; (தொடரும்)



# வேதநாயகன் விஷ்ணுவே

இதழ் 156இன் தொடர்ச்சி. ஆசிரியர்: இரும்பாநாடு ஸ்ரீ.உ.வே.சே.பத்மநாபன்.

இந்த அடிப்படையில்தான் சூரியன் பிரகாசமாக இருப்பதும், உலகைப் பிரகாசிக்கச் செய்யும் சூரியஒளி சூரியனுடையது மட்டுமன்று. பிரபஞ்சத்தில் உள்ள பல ஒளிப்பொருள்களின் கலவையாகும் அது ('சித்ரம் தேவானாம்' என்ற மந்திரத்தில் இது விளக்கப்படுகிறது) சூரியனுக்கு ஒளி வழங்கும் மற்ற ஆதித்யர்களான மித்ரா வருணர்களும் தங்களுடைய சக்திக்கும் ஒளிக்கும் வேறு மூலத்தைக் கொண்டுள்ளார்கள் என்பதையும் வேதம் விளக்குகிறது. பிரபஞ்ச நியதி என்னும் ஒரு நிரந்தர மூலத்திலிருந்தே அவர்கள் சக்தியைப் பெறுகிறார்கள் (ரிக்- 2 - 27-8). நிரந்தர நியதி என்றாலே அதை ஏற்படுத்திய மூலம் ஒன்று இருந்தே ஆகவேண்டும் அந்த மூலத்திலிருந்தே ஆதித்யர்கள் உள்ளிட்ட எல்லா தேவர்களுமே சக்தியைப் பெறுகிறார்கள் என்பதே இங்கு அறியப்படவேண்டிய விஷயம்.

அபய ஜோதியை அடைவதற்காக மக்கள் ஆதித்யர்களை நோக்கிப் பிரார்த்தனை செய்வதாக (ரிக்-2-27-11, 14) வேதம் கூறுகிறது. இதிலிருந்து ஆதித்யர்களுக்கும் மேலே உத்தமமான உயர்ந்த ஒளி ஒன்று உண்டு என்பதும் ஒளிவடிவமான ஆதித்யர்களின் உதவியைக் கொண்டே மக்கள் அதை அடைய முயற்சிக்கிறார்கள் என்பதும் தெளிவாகத் தெரியவருகிறது.

இங்கு ஒரு விஷயத்தைத் தெளிவாக்க வேண்டியுள்ளது. நம் வேதங்களை ஆராய்ச்சி செய்து மொழிபெயர்க்க வந்த மேலை நாட்டவர்கள், நம் நாட்டில் தோன்றிய வேத இலக்கியங்களில் முழுமையான பரிச்சயமில்லாதவர்கள். வெறும் மொழி அறிவை மட்டும் வைத்துக் கொண்டு வேதத்தை விளக்க முற்பட்டவர்கள். பரம்பொருளைப்போல் வேதமும் நித்யமானது என்கிறார்கள் நம் பூர்வ ரிஷிகள். ஆனால் மேற்கத்தியர்களோ மற்ற நூல்களைப் போல் வேதமும் யாரோ சிலரால் எழுதப்பட்டதுதான் என்ற கருத்தைக் கொண்டவர்கள். இப்படிப் பட்டவர்கள் வேதத்தை விளக்க

முற்பட்டால் அவர்களின் விளக்கம் எவ்வாறு இருக்கும் என்பதை நாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. வேதத்தை விளக்க வெறும் மொழி இலக்கண அறிவு மாத்திரம் போதாது. ஒரு சொல்லுக்குப் பல பொருள்கள் இருக்கலாம். ஆனால் மந்திரங் களைக் கண்ட ரிஷி அந்தச் சொல்லை எப்பொருளில் பயன் படுத்தியுள்ளார் என்பதை ஆய்ந்து தெரிவிப்பதுதான் சிறப்பு. அதற்கு சீரிய சிந்தனை அவசியம். நம் நாட்டில் வேதத்திற்கு உரை செய்தவர்களில் முக்கியமானவராகக் கருதப்படும் சாயனர் கூட மொழி இலக்கணத்தை வறட்டுப் பிடியாகப் பிடித்துக்கொண்டு, எளிமையாக உரை செய்ய வழியுள்ள சில இடங்களில்கூட பொருந்தாத உரைகளைக் கூறியுள்ளார்.

மேலும் அன்னிய நாட்டினர் நம்வேதத்தை உள் நோக்கத்தோடு விளக்க வந்தவர்கள். தங்களின் மதத்தை நம் வேத மதத்திற்கு முன்பு தோன்றியதாகக் காட்டவும் நம் மதத்தை விமர்சனம் செய்யவுமே அவர்கள் வேதங்களை ஆராய்ச்சி செய்ய வந்தனர்.

தங்களுடைய எண்ணங்களுக்கு அநுகூலமாகவே சில வேத மந்திரங்களுக்கு உரை எழுதினர். வேதங்களை விமர்சனம் செய்யத்தான் நான் வேதங்களுக்கு உரை எழுத முற்பட்டேன் என்று வெளிப்படையாகவே ஒரு மேற்கத்தியர் பிரகடனப் படுத்திக் கொண்டார். வேதமந்திரங்கள் சிலவற்றுக்கு அவர்கள் கொடுத் துள்ள அபத்த விளக்கங்கள் நம் நாட்டில் ஆன்மீகப் போர்வையில் இருக்கும் சில குள்ளநரிகளுக்குச் சாதகமாகப் போய்விட்டன.

வேதம் முழுக்க இயற்கை நிகழ்வுகளைத் துதிக்கும் மந்திரங்கள் கொண்டதுதான் என்றும், காட்டில் வாழ்ந்த காட்டுமிராண்டிகளான, வேதகால ரிஷிகள் இயற்கை நிகழ்ச்சி களைக் கண்டு பயந்தே இயற்கையை வழிபட்டார்கள் என்றும் ப்ரத்யக்ஷத்தில் காணும் சூரியனையே அவர்கள் எல்லா தேவர்களின் பெயர்களாலும் வழிபட்டார்கள் என்றும் வேதமந்திரங்கள் அனைத்தும் சூரியனைக் குறித்துச் சொல்லப்பட்டவையே என்றும் விளக்கம் எழுதி வைத்துள்ளனர் நம் வேதத்தை ஆராய்ந்த அந்நிய நாட்டவர்கள். இந்த நாட்டில் பசுத்தோல் போர்த்திய புலியாக, வைதிக வேஷத்தில் இருந்துகொண்டு வேதநெறிக்குப் புறம்பாகப்



பேசி வரும் சில அயோக்யர்களுக்கும் வேத நெறிகளுக்குப் புறம்பாக இங்கு தோன்றிய சில அவைதிக மதத்தவருக்கும், நம் வேதத்தைப் பற்றி அந்நியன் சொன்ன மேற்படி கருத்து மிகவும் பிடித்து விட்டது. அந்நியன் சொன்ன கருத்துக்களை அப்படியே வழிமொழிந்து புத்தகங்களும் எழுதி விட்டார்கள் இங்குள்ள சில மூடர்கள். வெள்ளைக்காரன் சொன்ன கருத்தை மேற்கோளாகக் காட்டி மேடைகளில் பேசுவோரும், புத்தகங்கள் எழுதுவோரும் தான் இன்று வேத ஆராய்ச்சியில் ''தலை சிறந்த பேரறிஞர்கள்''என்று வானளாவப் புகழப்படுகிறார்கள். மேற்கத்தியனின் மலத்தைத் தின்னும் நாய்கள் இவர்கள்.

வேதத்தில் இயற்கை வழிபாடு சொல்லப்படுகிறது என்பது உண்மைதான். ஆனால் நான் முன்பே கூறியது போல் ஒவ்வொரு இயற்கை சக்தியையும் இயக்கும் அந்த சக்தியின் அபிமானி தேவதை கை, கால்கள் முதலியவற்றைக் கொண்டும் உருவத்தோடும், ஆபரணங்களோடும் ஆயுதத்தோடும், வாகநத்தோடும் காணப் படுவதாக வேதத்தில் சொல்லப்படுகிறது. அந்த தேவதா ரூபத்தை அந்த தேவதையைத் துதிக்கும் ரிஷி தன் கண்ணால் கண்டிருக்கிறார் என்றும் வேதம் கூறுகிறது. (ரிக்-1-25-18). ப்ரத்யக்ஷத்தில் நாம் காணும் சூரியனை வேதரிஷிகள் உருவத்தோடு காண முடிந்தி ருக்கிறது. எல்லா தேவதைகளின் விஷயத்திலும் இது பொருந்தும். அதனால் இயற்கையில் நிகழும் நிகழ்வுகளை அவற்றை இயக்கும் தேவதையின் சக்தியாகவே நினைத்தும், அந்த சக்திகளையுடைய தேவதைகளை உருவமுள்ளவர்களாகவே நேரில் கண்டும் ரிஷிகள் உபாஸித்திருக்கிறார்கள் என்பதை நாம் வேதத்திலிருந்து அறிய முடிகிறது.

மேலும் வேதத்தில் பல தேவதைகளைப் பற்றிய துதிகள் வந்தாலும் தேவதைகளுக்குள் உள்ள தாரதம்யங்களை நன்றாகவே உணர்ந்த ரிஷிகள், ஒவ்வொரு தேவதையின் சக்திக்கும் ஆதாரம் எது என்பதை வெளிப்படுத்துவதோடு, எல்லா தேவதைகளையும் படைத்த அந்த மூலப்பொருள் பற்றியும் குறிப்பிடுகிறார்கள்.

வேதத்தில் அதிகப்படியான மந்திரங்களைக் கொண்ட தேவதை இந்திரன், அதற்கடுத்தபடியாக அதிகமான மந்திரங் களைக் கொண்ட தேவதை அக்நி, ஆனால் சூரியனுக்கு விரல் விட்டு எண்ணக்கூடிய சில 'ஸூக்தங்களே' காணப்படுகின்றன.

அந்தக் குறைந்த அளவிலான ஸூக்தங்களிலும் பரம்பொருளுக் குரிய லக்ஷணங்கள் எதுவும் சூரியன் விஷயத்தில் சொல்லப்பட வில்லை ஒளி தருபவன், ஒளியாலும் வெப்பத்தாலும் உலகை இயக்குகிறான்; மக்களுக்கு கண் நோய் வராமல் தடுக்கிறான்; ஆயுளைத் தருகிறான்; உதிக்கிறான் அஸ்தமிக்கிறான் - முதலிய விஷயங்கள்தான் சூரிய ஸூக்தங்களில் சொல்லப்படுகின்றன. மற்ற தேவதைகளின் ஒளிதான் இவனுடைய ஒளி என்றும் சொல்லப்படுகிறது. இவனையும் இவனுடைய செயல்பாட்டையும் கட்டுப்படுத்தும் தேவர்களையும் வேதம் நமக்குத் தெரிவிக்கிறது. இந்திரனை தேவராஜா என்று குறிப்பிடுகிறது வேதம். தேவர்களுள் ஒருவனான சூரியனும் இந்திரனின் கட்டுப் பாட்டுக்குள்தான் இருக்கிறான். (ரிக்-10-92-8) சூரியன் படைக்கப்பட்டவன் என்றே வேதம் கூறுகிறது.

சூரியனுக்கு மிகக் குறைவான ஸூக்தங்களே காணப் பட்டாலும் அவனுக்குரிய மந்திரங்களில், பரம்பொருளுக்குரிய லட்சணங்களில் ஒன்றாவது சொல்லப்பட்டிருந்தால் கூட சூரியனைப் பற்றி மேற்கத்தியர்கள் சொல்லும் கருத்தை ஆதரிக்க இடம் இருக்கிறது என்று சொல்லலாம். அப்படி ஒரு லட்சணமும் அவனுக்குரிய மந்திரங்களில் காணப்படவில்லையே! சூரியன் உலகைப் படைத்தவனாகவோ, பிறப்பற்றவனாகவோ, மற்ற தேவர்களைத் தன் வசத்தில் வைத்திருப்பவனாகவோ, அழிவில்லாத வனாகவோ அவனுக்குரிய மந்திரங்களில் சொல்லப்பட்டிருந்தால், அதிகப்படியான மந்திரங்களையுடையவர்களாயிருந்தாலும் மற்ற தேவர்களின் துதிகளும் இவனைப்பற்றித் தான் சொல்லப்படுகிறது என்று சொல்வது பொருத்தமாக இருக்கும். ஆனால் அப்படிப்பட்ட பரமாத்ம லக்ஷணங்களில் ஒன்று கூட சூரியனுக்குரிய மந்திரங் களில் சொல்லப்படவில்லை.

அப்படியிருக்கும்போது, எப்படி எல்லா மந்திரங்களும் சூரியனைத்தான் குறிப்பிடுகின்றன என்று சொல்லமுடியும்? பலரின் கட்டுப்பாட்டில் இயங்குபவன் எப்படித் தலைவனாக முடியும்? படைக்கப்பட்டவன் எப்படி பரம்பொருள் ஆகமுடியும்? ஆராய்ச்சி அறிவற்றவர்களும், வேண்டுமென்றே ஒருவிஷயத்தில் விபரீத ஆராய்ச்சி செய்பவர்களும் எதை வேண்டுமாயினும் கூறுவார்கள். (தொடர்ச்சி)



# மாறன் பாப்பாவினம்

இதழ் 156இன் தொடர்ச்சி. டாக்டர். அருட்கவி அரங்க சீனிவாசன்.

ஏழ்வகை-தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. நால்வகைத் தோற்றம்-அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பன. அவை முட்டை, வியர்வை, விதை, கருப்பை எனப்படும். இழைத்துள-முன் செய்த, அலம் போதும்-சுழன்று சுழன்று பிறக்கும் துன்பம் அடைந்த. அங்கங்கங்கு -இடம் தோறும்.

பேதைமையார்-அறிவில்லார். மூதறிவார்-அறிஞர்கள். சாபம் - சான்றோர் சினந்து கூறும்மொழி. சாபம்-வில். அடைதரும் ஆங்கு - அடைந்த காலத்தில்.

அறிவரிய-அறிய இயலாத அறிவெளிய-அறிய எளிதான. வெளிநிற்பாய்-எதிரே தோன்றுவாய். வியப்புற்று ஆசிபகர்தல்-பல்லாண்டு பாடுதல். பொற்பாய்-அழகுடையவனே.

திகிரி-சக்கரம். வலம்-வலப்புறம். வளை-சங்கம். இடம்-இடப்பக்கம். பரித்துளாய்-தாங்கியுள்ளனை. புகர்முகம் - புள்ளியுடைய முகம். மதமலை-யானை. சொலச்செல்வாய் - ஆதிமூலமே என்று சொன்னபோது செல்லுவாய். செல-அழியும்படி. அரண் இயல்-அரண்போலச் சுற்றியமைந்த. ஆர்கலி-கடல். அதனிடை ஏழ் மதின்-இலங்கை. புடைத்தல்-அழித்தல்.

தேன்இமிர்-வண்டுபாடுகின்ற. உளபத்தாய்-பத்து உள்ள வனே! எய்தாய்-அடைய மாட்டாய். எழுமரம்-மராமரம். எய்தாய்-(அம்பு) ஏவினாய். அலகை-பூதனைப்பேய். அறன் அலது- தீமை. அருகு ஒன்றாய்-அருகில் சேரமாட்டாய். துப்பாய்-பவளம் போன்ற உதடுகள் உடையவனே. துப்பு-பவளம். அடர்தல்-செறிதல்; கட்டுதல். துப்பாய்-வலிமையுடையவனே. துப்பு - வலிமை. எட்டாய் - எட்டமாட்டாய். பொருளுரை- திருமந்திரம்; எட்டெழுத்து. எட்டாய்-எட்டு உடையவனே. கட்டாய்-திருடினாய். கட்டாய்-கட்ட முடியாதவனே.

கட்டுதல்- பிணைத்தல். கவிகையுளாய்-குடையாக உள்ளவனே. அழல் பெருகு- வேள்வியில் பெருகுகின்ற. அவி-ஆகுதி. கையுள்ளாய்-கையில் உள்ளவனே. மைந்தாய்-வலியுடையவனே. மைந்து வலிமை. தகவினர்-அடியவர். உள் அமைந்தாய்-மனத்தில் பொருந்தினாய்.

பரத்துவ முதலாம் ஐந்து-பரம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை. மூவுரு-பிரமன், திருமால், சிவன். குருகூரன்-ஆதிநாதப் பெருமாள். மகிழ் மார்பினன்-நம்மாழ்வார்.

இயல்தமிழ் ஊழிதோறுஊழி வாழியதாக நீவளர்க்க எனவே நின் திருவடி வழுத்துதும் என்று கூட்டுக!

உலகங்கள் படைத்து அவற்றைத் தன்னுள் அடக்கிக் கொண்டு மூலப் பிரகிருதிக்கு அருகில் விரசைக்கு அப்புறத்ததாய் உள்ள பரமபதத்தில் இந்திரையுடன் பரமாக வீற்றிருப்பவனே.

ஒரு நால்வர் என்று கூறும்படி ஏழுதீவினுள் ஒரு தீவாகிய புட்கரம் என்னும் திருப்பாற்கடலில் வியூக வடிவாகத் துயில் உவந்த ஒருமுதலாக,

மீன் முதல் பத்து அவதாரம் செய்து, உனக்கும் ஒரு தந்தை தாயர் உளர் என்று கூறும்படி. உடல் தரித்து யுகந்தோறும் விபவமாக அவதாரம் செய்பவனாக,

தாம் முன்பு செய்த வினைப்பயனால் துயர் உறும் உயிர்கள்தோறும் அந்தர்யாமியாக,

நீர்சொரிந்து மலர்தூவி வழிபடுவதற்கு, இடங்கள் தோறும் அர்ச்சையாக இருந்து அருள்பவனே!

பிறஉயிர்களைப்போல் நீயும் பிறந்து இறந்து உழல்பவன் என்று அன்பர்கள் கூறினாலும் மூதறிஞர் நீயே அழியாத முதல்வன் என்று தெளியும்படி உள்ளாய்! சான்றோர்கள் சினந்து இடும் சாப மொழியால் இழுக்கம் உறாதவனே! சாபம் எனும் வில்லைத் தரித்து துன்புற்றோர் அடைக்கலம் என்று அடையும் காலத்து அவர்க்கு அருள்பவனே!

வேதனும் உணர்வதற்கரிய மேன்மையும் அன்புடையார் அறிதற்கு எளிய சௌலப்யமும் உள்ளவனே. அடியார் எவ்வுருவாய்



நினைப்பினும் அந்த உருவுடன் எதிர் நிற்பவனே! யார் கண்டாலும் தம் நிலை மறந்து அதிசயித்து மங்களாசாசனம் செய்வதற்கு இடமான அழகுடையவனே.

திகிரி தரித்தல் முதல் தகவினர்உள் அமைதல்வரையுள்ள பெருமைகள் உடையவனே!

இவ்வாறு பரத்துவமுதல் ஐந்துநிலைகளும் முத்தேவரும் ஆகியவரதனே! நம்மாழ்வாரின் திருவாய்மொழி ஊழிதோறும் வாழியதாக நீ வளர்க்க வேண்டும் என்று உன் திருவடி வழுத்து கின்றோம் என்பது இப்பாடலின் பொருட் சுருக்கம்.

இப்பாடல் தரவில் பரத்துவமும் தாழிசைகளில் முறையே வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம் அர்ச்சை நிலைகளும் குறிப்பாகக் கூறியதை ஞாபகமாகச் சுரிதகத்தில் ''பரத்துவம் முதலாப் பரந்துள ஐந்தாய்'' என்று வெளிப்படையாக விளக்கி யுள்ளமை காண்க. குறிப்பாக முதலில் எங்கோ கூறிய ஒன்றைப் பின்னர் நினைவு கொண்டு விளக்கம் தருவது ஞாபகம் எனப்படும் உத்தி என்பர்.

இருசீர் ஓரடிச் சிற்றெண்ணில் மடக்கு (யமகம்) அணி வந்துள்ளது.

*பூமாது நிழல்மணிப்பூண் பொதியவிழ்பொன் இதழ்ப்புனிதத்*
*தேமாலை நறுங்களபம் செறிமார்பத் திடைமுயங்க*
*அளப்பரிதாம் பகிரண்டத்து அப்புறமும் அகத்தடக்கி*
*உளப்பில்இளங் கதிர்உதயத்து ஒளிகிளர்பே ருருவாயும்*
*நன்னர்அங்கத்து அணுக்கள்தொறும் நயந்து அணுவாகியும் எழில்கூர்*
*தென் அரங்கத்து அரவணைமேல் தெளிந்திருகண் வளர்ந்துளாய்*
(பாடபேதம்): 1. சிறந்திருகண்.

**(இஃது ஆறடித் தரவு)**

**ஒருசுடராம் சொரூபமுடன் உருபம்அமைந்து ஒருசுடரோடு**
**இருசுடராய்க் குணம்ஒருமூன்று எனலாகி முறைமுறையே**
**படைப்பதையும் அழிப்பதையும் புறம்போக்கிப் பழிபிறங்காது**
**இடைப்படுகா வலைநினதென்று[2] எடுத்ததுவென் அருளுதியே.**
(பாடபேதம்): 2. எனதென்று.

நின்றனவாய் இயங்கினவாய் நீடியபல் உருவளித்தோன்[3]
பொன்றியநாள் எழுந்தபெரும் புனல்படிந்த உயிர்களைநீ
எம்மானே! திருவுதரத்து இருத்தியகா வற்குஅவற்றால்
கைம்மாறுஅங் கெவனோமுன்[4] கைக்கொண்டது அருளுதியே.
(பாடபேதம்): 3. இயங்குனவாய் நீடியபல் உருவமைத்தோன், 4. நீ.

புறம்பயின்ற வினைவழிசார் போக்குவர வினும்பிரியாது
அறம்பயின்றது அணுவுளதேல் அதற்குஅவற்றை எடுத்தனையாய்!
உள்நீர்மை அற்றனமாய்ந்து உறுநரகில் புகுவது உறீஇக்
கண்ணீர்கொண்டு அகன்று அகலாக் காவல்எவன் அருளுதியே.

*(இவை மூன்றும் ஒரு பொருள்மேல் மூன்று அடுக்கி நான்கடித்தாய் இரண்டு விகற்பத்தான் வந்த தாழிசைகள்.)*

தரணியுள் எவரொடும் முரணிய பெருவிறல்
இரணியன் வரன்எனும் அரண்அற இகலினை

ஒருபது சிரமுடன் இருபது கரமுள
நிருதனது உயிர்மிசை பொருகணை சிதறினை

மறையவர் இறையவர் உரைவயின் வடுவுரை
பறைபவன் உயிர்புகும் அறைகழ லிணையினை

முதலையின் இடர்உறு மதமலை மடுவினுள்
உதவுக எனும்உரை யதனொடும் உதவினை

*(இவை நான்கும் அராகம். என்னை?*
*''உருட்டு வண்ணம் அராகம் தொடுக்கும்''*
*(தொல்.செய்.233)*
என்பதனால் குறிலிணைந்து உருட்டி வந்தது உணர்க.)

வஞ்சனைஓர் வடிவெடுத்து மாதுலனா மறைபயின்ற
கஞ்சனைக்கொன்று உரகேசன் கடும்பொறையைத் தவிர்த்தனையே

குருகுலத்தார் நூற்றுவரைக் கூற்றுவன்நாட்டினில் இருத்தித்
தருமன்முத லவர்க்குஅவனி தனியாளக் கொடுத்தனையே
*(இவை நாற்சீர் ஈரடி இரண்டு அம்போதரங்கம். இவை பேரெண்.)*

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

## ''இராமாநுசர் ஆயிரம்''
## அணிந்துரை
## திருச்சித்ரகூடம். ஸ்ரீ.உ.வே. அ.வெ. ரங்காசார்யர் ஸ்வாமி.

உலகத்திலேயே ஸ்ரீவைஷ்ணவம்தான் அநாதியான ஸித்தாந்தமாகும். இவ்வைணவத்தை வளர்த்த பெருமைக் குரியவர்கள் ஸ்ரீமந்நாராயணன், அவதார எம்பெருமான்கள், வால்மீகி, வேதவ்யாஸர், பராசரர் முதலிய ரிஷிகள், ஆழ்வார்கள், ஸ்ரீமந்நாதமுனிகள், ஆளவந்தார் அவரை அடுத்து இராமாநுசர், அவர் பின் வந்த ஆசார்யர்கள் ஆகியோர். லக்ஷ்மிநாதனிடமிருந்து ஆரம்பமாகி, நம் ஆசார்யர் வரையிலான குருபரம்பரையாகிற ஆசார்ய ரத்னஹாரத்தில் நடு நாயகமாக விளங்குபவர் இராமாநுசரே ஆவார்.

அனைத்து மக்களும் வாழப்பிறந்த இராமாநுசர் மனிதகுல வரலாற்றில் காணப்படும் ஒரு வியப்பூட்டும் தத்துவ மேதை. சமூகப் புரட்சியாளர், மனிதப்பண்புகளின் களஞ்சியம், மாசுமரு வற்ற ஆத்ம குணச் செம்மல். பூவுலகில் வைகுந்தத்தைக் காட்டிய வித்தகர். மனிதாபிமானம் மிக்க சமுதாயச் சிந்தனையாளர், சம நோக்கும் சமூக நோக்கும் கொண்டவர்.

இராமாநுசர் தாம் ஒரு வேதாந்தியாக மட்டும் வாழ்ந் திடாமல், சமுதாயநலனில் அக்கரை கொண்ட ஒரு மாமனிதராக விளங்கினார். வைணவத் திருக்கோயில்களின் செயல்பாடுகளை தாம் அறிந்த மேலாண்மைக் கோட்பாடுகளின் அடிப்படையில் நிர்வாகச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு, திருக்கோயில்களை மனிதகுல மேம்பாட்டின் முன்னேற்றத்திற்கான பண்பாட்டு மையங்களாக மாற்றி அமைத்தார். எம்பெருமானிடத்தும் அவனடியார் திறத்தும் அன்பு கொண்டு, அனைவரும் நற்பேற்றினை அடைவதற்கு வழிவகுத்த சீர்திருத்த செம்மல். பாரதநாடு முழுதும் கால் நடையாகவே சென்று, விசிஷ்டாத்வைதக் கொள்கைகளையும், வைணவ சமய நெறிகளையும் மக்கள்

நெறியாக்கியவர். மனிதகுல மேம்பாட்டுக்காவே தன்னுடைய வாழ்வை அர்ப்பணித்த, ஒத்தாரும் மிக்காரும் இல்லாத ஸ்ரீவைஷ்ணவ ஆசாரியராகத் திகழ்ந்தவர்.

இவ்வனைத்து கோணங்களிலும் இராமாநுசர் ஆற்றிய அருந்தொண்டினையும், அவர்தம் வைபவத்தையும் அனைவரும் அறிந்து கொள்ளும் வண்ணம் 'இராமாநுசர் ஆயிரம்' என்னும் தலை சிறந்த நூலைப் படைத்துள்ளார், ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமா சார்யர். இவர் சென்ற பல ஆண்டுகளாகத் திருவரங்கம் கோயிலைப் பற்றிய அனைத்துச் செய்திகளின் தொகுப்பாக 7100 பக்கங்களில் 'கோயில் ஒழுகு' என்ற களஞ்சியத்தை 7 பாகங்களில் வெளியிட்டு வரலாறு படைத்துள்ளார். ஸ்ரீவைணவ ஸம்ப்ரதாயத்தைச் சார்ந்த நூல்கள் பலவற்றைப் பதிப்பித்து நாடும் நகரமும் நன்கறியச் செய்துள்ளார். இராமாநுசர் பற்றியே "Ramanuja A Reality - Not A Myth" என்ற வரலாற்று நூலைப்படைத்து, இராமாநுசர் மீது சிறுமதியாளர்கள் சுமற்றிய களங்கங்களைக் களைந்து இராமாநுச ரின் சிறப்புகளை உலக மயமாக்கியுள்ளார். இராமாநுசரின் ஆயிரமாவது ஆண்டினைக் கொண்டாடும் முறையில் இராமாநு சரைப் பற்றிய அனைத்து நூல்களையும், இராமாநுசர் வடமொழியில் இயற்றிய நவரத்னங்களான நூல்களையும் எளிய தமிழில் எழுதி அளித்திடப் பாரிப்புக் கொண்டுள்ளார்.

வைணவப் பெட்டகமாக விளங்கும் இந்நூல் (1) இராமாநுசரின் முழு வைபவம் (2) இராமாநுசரின் ஐதிஹ்ய நிர்வாஹங்கள் (3) இராமாநுசர் பற்றிய வடமொழிக் தோத்திரங் களான கூரத்தாழ்வான் அருளிய ச்லோகங்கள் மற்றும் 'தாடீ பஞ்சகம்' உரையுடன். (4) வடுக நம்பி அருளிய 'யதிராஜ வைபவம்' மற்றும் 'ராமாநுஜ அஷ்டோத்தர சத நாம ஸ்தோத்ரம்' (5) அனந்தாழ்வான் அருளிய 'ராமாநுஜசதுச்லோகி' (6) சோமாஸியாண்டான் அருளிய 'ப்ரார்த்தனா பஞ்சகம்', (7) பெரியவாச்சான் பிள்ளை அருளிய 'கத்யத்ரய வ்யாக்யானத்தில் இராமாநுசர் பற்றிய செய்திகள்' (8) நாலூராச்சான்பிள்ளை அருளிய 'சரமோபாயதாத்பர்யம்', (9) நாயனாராச்சான் பிள்ளை அருளிய 'சதுச்லோகி வ்யாக்யானத்தில் இராமாநுசரைப் பற்றிய குறிப்புகள்'



(10) ஸ்வாமி தேசிகனின் 'யதிராஜ ஸப்ததி', (11) ''ஸ்ரீமந் மணவாள மாமுனிகள் அருளிய 'யதிராஜ விம்சதி' மற்றும் 'ஆர்த்தி பிரபந்தம்' (12) ஒன்றான வானமாமலை ஜீயர் அருளிய உடையவரின் 'அவயவ ப்ரபாவம்' (13) 'ஸ்ரீ ராமாநுஜ ஸுப்ரபாதம்' - மற்றும் 'முக்தக ச்லோகங்கள்' (14) எறும்பியப்பா அருளிய 'சரமகுரு நிர்ணயம்' (15) பிள்ளை லோகம் ஜீயர் அருளிச் செய்த 'யதீந்தர ப்ரவண ப்ரபாவத்தில்' இராமாநுசர் பற்றிய குறிப்புகள். (16) திருமழிசை அண்ணாவப்பங்கார் அருளிய 'பழநடை விளக்கத்தில்' எம்பெருமானார் வைபவம் (17) 'சரமோபாய நிர்ணயம்' (18) சுதர்சன பட்டர் அருளிய 'கத்யவ்யாக்யானத்தில்' இராமாநுசர் பற்றிய குறிப்புகள் (19) பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் 'எதிராசர் அந்தாதி' (20) 'ரஹஸ்ய க்ரந்தங்களில்' இராமாநுசர் பற்றிய குறிப்புகள் - 'முமுக்ஷுப்படி வ்யாக்யானம்' (21) 'தத்வத்ரய வ்யாக்யானம்' (22) 'ஸ்ரீவசனபூஷண வ்யாக்யானம்' (23) 'தனித்வயம்' (24) 'ச்ரியப்பதிப்படி' (25) 'ஆசார்ய ஹ்ருதயம்' (26) ஸ்ரீவேதாந்த தேசிகனின் 'குருபரம்பராசாரம்' (27) 'ரஹஸ்யத்ரய ஸாரம்' (28) 'ஸம்ப்ரதாய பரிசுத்தி' (29) 'ரஹஸ்ய ரத்னாவளி' (30) 'ந்யாய ஸித்தாஞ்சனம்' (31) 'வார்த்தாமலை' (32) வடமொழி நாடகமான 'ஸ்ரீ யதிராஜ விஜயம்' (33) கருட வாகன பண்டிதர் அருளிச் செய்த 'திவ்யஸூரி சரிதத்தில் 17,18 ஸர்க்கங்கள்' (34) 'ப்ரபந்நாம்ருதம்' (35) எம்பெருமானார் வரலாற்றைப் பறை சாற்றும் தமிழ் நூல்களான வடிவழகிய நம்பிதாஸரின் 'ஸ்ரீ ராமாநுஜ வைபவம்' (36) கோழியாலம் கோயில் சப்தம் வங்கிபுரம் ஸ்ரீனிவாஸாசாரியர் இயற்றிய தமிழ் 'திவ்யஸூரி சரிதம்' (37) ஸ்ரீராமாநுசர் அருளிய 'தனியன்கள்' (38) திருநக்ஷத்ர தனியன்கள் (39) வாழித் திருநாமம் (40) மங்கள ச்லோகங்கள் (41) யதிராஜ மங்களம் ஆகிய க்ரந்தங்களின் விவரம் அனைத்தும் வெகு அழகாகத் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இவற்றோடு, (42) கிருமி கண்ட சோழன் யார்? (43) இராமாநுசர் திருவரங்கத்தை விட்டு நீங்கி திருநாராயணபுரத்திற்கு சென்ற வழித்தடம் பற்றிய ஓர் ஆய்வு (44) உள் ஆண்டாள் ஸந்நிதி உடையவர் திருமேனிபற்றிய குறிப்புகள். (45) இராமாநுசரின் சமுதாயச் சிந்தனைகள் (46) இராமாநுசரின் கோயில் நிர்வாஹ

முறைகள் (47) திருவரங்கம் கோயிலில் காணப்படும் கல்வெட்டுக்களில் இராமாநுசர் பற்றிய செய்திகள் (48) திருமலையும் இராமாநுசரும் (49) காஞ்சிப் பேரருளாளனும் இராமாநுசரும் (50) திருநாராயணபுரமும் இராமாநுசரும் (51) ராமப்பிரியரை மீட்டு வந்தது (52) திருப்பாவை ஜீயர் (53) திருவரங்கத்தில் இராமாநுசரின் அர்ச்சா திருமேனிக்கு ஏற்பட்ட வைபவங்கள் (54) திருமலை ஒழுகு தரும் இராமாநுசர் பற்றிய செய்திகள், (55) சாளக்ராமத்தில் இராமாநுசர்.

மூன்றாம் பாகத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச் செய்த வேதாந்தஸாரத்தின் எளிய தமிழ்மொழிபெயர்ப்பு இடம் பெற்றுள்ளது.

இந்நூலின் முதல் பகுதி ஸ்ரீ இராமாநுசரின் அவதார ரஹஸ்யத்தை விவரிக்கிறது. பரமபதநாதன் ஸ்ரீவைகுண்டத்திலே ஆதிசேஷனை, தொன்று தொட்டு நிலை பெற்று வந்துள்ள ஸ்ரீவைஷ்ணவ நெறிமுறைகளை மக்களிடையே பரப்பிட பூலோகத்தில் போய்ப் பிறக்குமாறு பணித்தபடி ஆதிசேஷனே இராமாநுசனாக அவதரித்தார். பார்த்தஸாரதியே இராமாநுசராக அவதரித்தார் என்று பிள்ளைலோகம் ஜீயர் ராமாநுஜார்ய திவ்யசரிதையில் குறிப்பிட்டுள்ளார்.

இராமாநுச நூற்றந்தாதியில் அமுதனார், எம்பெருமான் திருக்கரங்களில் எழுந்தருளியுள்ள பஞ்சாயுதங்கள் இராமாநுசராக இவ்வுலகைக் காக்க அவதரித்தன என்று குறிப்பிட்டுள்ளார். ஐந்து திவ்யாயுதங்களின் ஆவேச அவதாரமாகவே எம்பெருமானாரைக் கொள்வது ஸ்ரீமந்மணவாளமாமுனிகளின் திருவுள்ளம் என்று அவதார ரஹஸ்யம் விளக்கப்பட்டுள்ளது. சேனை முதலிகளின் அம்சம் என்று வேதாந்த தேசிகரும், ஸ்ரீயப்பதியான ஸர்வேச்வரனே எம்பெருமானாரே அவதரித்தார் என்று ஐந்து வகையான அவதார ரஹஸ்யங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

**இவர் திருநாமங்கள்**

அமுதனார் இராமாநுச நூற்றந்தாதியில் 'சொல்லுவோம் அவன் நாமங்களே' என்று அருளிச் செய்துள்ளார். அந்த நாமங்கள்



ஏற்பட்ட விபரத்தை நூலாசிரியர் விவரித்துள்ளார். இவன் மங்கள வடிவுடையவன், 'ஸர்வ லக்ஷண ஸம்பந்ந: லக்ஷ்மணோ லக்ஷ்மி வர்தந:' என்றபடி ஸகல சாஸ்திரங்களையும் கற்றுப் பிரகாசிப்பான் என்று இளைய பெருமாளின் திருநாமத்திற்குத் தகுதியாக இளையாழ்வார் என்று திருமலைநம்பிகள் திருநாமம் சாற்றியருளினார். (பக்கம் 8)

பேரருளாளர் த்ரிதண்ட காஷாயம் முதலியவைகளை ஸாதித்து, 'ஸ்ரீராமாநுஜன்' என்ற திருநாமம் ப்ரஸாதித்து, நம் இராமாநுசனை மடத்திலே விட்டு வருவீர் என்று நியமனம் செய்தார் (பக்கம் 53)

நம்பெருமாள் ''உபயவிபூதி ஐச்வர்ய கைங்கர்ய ஸ்ரீயையும், உமக்குத் தந்தோம்; நீர் உபய விபூதியையும் உடையவர் என்று உடையவர் திருநாமத்தை வழங்கி, நம்முடைய கோயில் கார்யத்தை எல்லாம் ஆராய்ந்து நடத்தும் என்று அருளினார். (பக்கம் 71).

திருக்கோட்டியூர் நம்பிகள் ''நம் பெருமாள் நமக்காவாரை நாமே தேடிக் கொள்கிறோம் என்று சேர பாண்டியனில் அருளிச் செய்த அவரோ நீர் என்று வியந்து எம்பெருமானார் என்று திருநாமம் சாற்றினார்.'' (பக்கம் 89)

உடையவருக்கு ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையரிடம் ஆளவந்தார் அருளிச் செய்த ஸ்தோத்ரங்களுக்கு அர்த்தங்களை அருளிச்செய்து 'லக்ஷ்மண முநி' என்ற திருநாமத்தைச் சாற்றினார். (பக்கம் 98)

காஷ்மீரத்தில் சரஸ்வதிதேவி ஸ்ரீபாஷ்ய ஸ்ரீகோசத்தை தன்முடிமேற்கொண்டு, பாராட்டி உடையவருக்கு ஸ்ரீபாஷ்யகாரர் என்ற திருநாமம் சாற்றி மகிழ்ந்தார். (பக்கம் 257)

**ஸித்தாந்த ஸம்ரக்ஷணம்**

விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தையும் ஸ்ரீவைஷ்ணவ நெறிமுறைகளையும் பிரகாசப்படுத்துவதற்காக அவதரித்த உடையவர் எட்டாவது வயதில் உபநயனம் செய்விக்கப் பெற்று,

முதலாமாண்டு உபாகர்மம் நிறைவேறியதும் அங்க உபாங்கங்க ளோடு கூடிய 'நான்கு வேதங்களையும் எல்லையில்லா அறநெறி யாவும் தெரிந்தவன்' என்னும்படி திருத்தகப்பனாரிடத்திலே அதிகரித்தார். (பக்கம் 12)

பிறகு, பெருமாள் கோயிலுக்கு அண்மையில் யாதவ பிரகாசன் என்ற ஏகதண்டியிடம் வேதாந்த விசாரம் செய்தார். பின்பு அவன் வேதவாக்யங்களுக்கு அபார்த்தம் செய்தபோது, அதனை மறுத்து மறுபடியும் அவரிடம் வேதாந்த விசாரம் செய்தவர். இளையாழ்வார் விசிஷ்டாத்வைத பரமாக விளக்கம் அளிக்க, யாதவ ப்ரகாசன் வெறுப்புற்றதால், இராமானுசர் அவரிடமிருந்து விலகி பெருமாளுக்குத் திருமஞ்சனம் கொண்டு வந்து ஸமர்ப்பித்தார்.

ஆளவந்தாரின் விமல சரம திருமேனியை ஸேவித்து, மடங்கியிருந்த மூன்று விரல்களின் விபரம் அறிந்து, அதன்படி ப்ரம்மஸூத்ரத்திற்கு விசிஷ்டாத்வைத பரமாக வ்யாக்யானம் செய்ய உறுதி எடுத்துக் கொண்டார்.

தேவப் பெருமாளிடமிருந்து திருக்கச்சி நம்பிகள் மூலமாக ஆறு வார்த்தைகள் பெற்றது (பக்கம். 46) பெரியநம்பியிடம் திருவிலச்சினை பெற்று த்வயத்தின் ப்ரமாணம், ப்ரமேயம் ப்ரமாணங்களின் அரும் பொருளை உபதேசிக்கப் பெற்றது. (49)

யாதவனுக்கு ஊர்த்தவ புண்ட்ரம் தரித்துக் கொள்வதற்கு உரிய ப்ரமாணங்களைத் தெரிவித்தது (பக்கம் 58), காளஹஸ் தியிலிருந்து கோவிந்தபட்டரை திருமலைநம்பி மூலமாகப் பெற்றது, பெரியநம்பிகள் நியமனப்படி திருக்கோட்டியூர் நம்பியிடத்தில் ரஹஸ்யார்த்தங்களைக் கேட்டது, திருவரங்கப் பெருமாள் அரையரிடம் திருவாய்மொழி ஸந்தை பயின்றது. (83-92) திருக்கோட்டியூர் நம்பிகளின் நியமனப்படி திருமாலையாண்டானிடம் திருவாய்மொழிக்கு அர்த்தம் கேட்டது. (95-97) கொங்குப் பிராட்டிக்கு த்வயத்தை உபதேசித்தது. யஜ்ஞ மூர்த்தியோடு வாதம் செய்து வெற்றிக்கொண்டு, அவர் அருளாளப் பெருமாள் எம்பெருமானார் ஆனது (102-105) பெரிய நம்பிகளிடம் ஸ்ரீராமாயணத்தை த்வயபரமாக உபதேசம் பெற்றது. (122) காஷ்மீர்



சரஸ்வதி பண்டாரத்திலிருந்த போதாயன வ்ருத்தி க்ரந்தத்தைக் கண்டு அதிலுள்ள சீரிய அர்த்தங்களை உடையவர் தேக்கிக் கொண்டது. (173-178) பின் கூரத்தாழ்வானைக் கொண்டு ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யம் எழுதியது. காஷ்மீர் சாராதா பீடத்தில் வைத்து, ஸ்ரீபாஷ்யம் என்ற பெயர் இடம்பெற்றது, திருக்குருகைப்பிரான் பிள்ளானைக் கொண்டு திருவாய்மொழிக்கு 'ஆறாயிரப்படி' எழுதச் செய்தது. பங்குனிஉத்தர சேர்த்தியில் கத்யத்ரயத்தை விண்ணப் பித்தது (259) திருவாராதன க்ரமமானநித்யக்ரந்தம் அருளிச் செய்தது, சோழ மன்னன் சபைக்குச் சென்று ஆழ்வான் பெரிய நம்பிகள் மூலமாக ''சிவாத் பரதரம் நாஸ்தி'' என்ற வார்த்தையைத் தக்க ப்ரமாணங்களால் முறியடிக்கச் செய்தது; ஆகிய இவை யனைத்தும் வரலாற்று நோக்கோடு விளக்கமாகக் கொடுக் கப்பட்டுள்ளது.

மலைநாட்டுப் திருப்பதிகளில் அனுபவம் கொண்டபோது அங்குள்ள மஹா வித்வான்கள் வந்து எதிர்க்க அவர்களை வாதப் போரில் வெற்றி கொண்டார். அப்போது தக்ஷிணாமூர்த்தி என்ற மஹாவித்வான் இராமாநுசரைச் சிறப்பித்த விவரம் முதற்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது.

காஷ்மீர் தேச ராஜாவை மத்யஸ்தராகக் கொண்டு அங்குள்ள அத்வைதிகளோடு வாதம் செய்து விசிஷ்டாத்வைத்தை ஸ்தாபித்து இராமாநுசர் அருளிய மேற்கோள்கள், சாரதாபீடத்தி லுள்ள வேதாந்த க்ரந்தங்களில் இருப்பது கண்டு அரசன் அவற்றை ஆதரித்தது.

இராமாநுசர் அரவணைத்துயிலும் பெரிய பெருமாள் முன்பு சென்று ஸ்ரீபாஷ்யத்தில் நிலைநாட்டப்பட்ட அறுதிப் பெரும் பொருள் அரங்கனே என்று உபந்யசித்தார். பெரிய பெருமாளும் திருச்செவி சாத்தி உகந்தருளினார்.

**திவ்யதேச ஸம்ரக்ஷணம்**

இராமாநுசர் மற்ற மதாசாரியர்களைப் போல சுத்த வேதாந்தியாக மட்டும் இராமல், வேதாந்தத்திற்கு விஷயம் ஸ்ரீமந் நாராயணனே. அவனே உலகைப் படைத்து, உலகைக்காத்து

அளிக்க திவ்யதேசங்களில் எழுந்தருளியுள்ளான் என்பதற்குச் சேர திவ்யதேசரக்ஷணம் செய்துள்ள விபரங்கள் கண்டு படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது.

வித்யாப்யாஸ காலத்திலேயே காஞ்சி வரதராஜப் பெருமாளுக்கு நாள்தோறும் சாலைக் கிணற்றிலிருந்து திருமஞ் சனம் கொண்டு வந்து ஸமர்ப்பித்தது (ப.21) ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளி திருவரங்கம் பெரியகோயில் கார்யங்களை நிர்வ ஹிக்கும்படி நம்பெருமாள் நியமனம் செய்தது கோயில் நிர்வாகத்தை ஏற்று அருளிச் செயலில் கண்டுள்ளபடி நடத்தி தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்தியது (ப. 74-80) நடுவில் ஒரு காலத்திலே வைகாநஸ ரீதியில் நடந்த பெரியபெருமாள் திருவாராதனத்தை நீக்கி, முன்போலவே பாஞ்சராத்ர விதிப்படி நடத்தியது (ப.82) ஸ்தலத்தாரை பெரிய பெருமாளுடைய பெருமைக்கு ஏற்ப உபசரிக்கும்படி கட்டளையிட்டதைப் பொறுத்துக் கொள்ள இயலாத ஒருவர் உடையவருக்கு விஷம் கலந்த பிக்ஷையை அளிக்கச் செய்து அதன் காரணமாக ஒரு மாத காலம் அன்ன ஆகாரம் இன்றி இருந்தது (ப.101) அனந்தாழ்வானை திருமலைக்கு அனுப்பி நந்தவனம் அமைத்துப் புஷ்ப கைங்கர்யம் செய்யச் செய்தது. திருமலைக்கு விடைகொண்டு மங்களாசாஸனம் செய்தது. (திருமலையில் இராமாநுசர் மேற்கொண்ட கோயில் சீர்திருத்தங்கள் திருமலை ஒழுகிலும், வேங்கடாசல இதிஹாஸ மாலாவிலும் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன). மீண்டும் திருவரங்கத்திற்கு எழுந்தருளும்போது, திருக்கடிகை, திருப்புட் குழி, பெருமாள் கோயில், மதுராந்தகம், ஸ்ரீமுஷ்ணம், திருவாலி திருநகரி, திருவிந்தளூர், திருக்குடந்தை ஆகிய திவ்யதேசங்களை மங்களாசாஸனம் செய்தபிறகு திருவரங்கம் சேர்ந்தது.

அதன்பின் சிலகாலம் கழிந்து, திருமாலிருஞ்சோலை, மதுரை கூடலழகர், ஸ்ரீவில்லிபுத்தூர், திருப்புளிங்குடி முதலிய திருப்பதிகள். ஆழ்வார் திருநகரி, வானமாமலை, திருக்குறுங்குடி திருவண்பரிசாரம், திருவாட்டாறு, திருவனந்தபுரம், திருமூழிக்களம் முதலிய மலைநாட்டுத் திருப்பதிகள். வடநாட்டுத் திருப்பதிகளில்



த்வாரகை, வடமதுரை, காஷ்மீரம், அயோத்தி, மிதிலை, வதரி, திருப்பிரிதி, சாளக்ராமம், காசி, பூரிஜகந்நாதம், கலிங்க தேசத்தில் கடகம், ஸ்ரீகூர்மம், சிம்ஹாசலம், ஸ்ரீகாகுளம், அஹோபிலம், திருமலை, காஞ்சி, திருவயிந்திரபுரம், திருச்சித்ரகூடம், காழிச்சீராம விண்ணகரம், திருநாங்கூர் 11 திவ்யதேசங்கள், கிருஷ்ணாரண்ய க்ஷேத்ரங்கள், திருநறையூர், திருக்கோட்டியூர், திருவணை வழியாகத் திருவரங்கம் சேர்ந்தது.

திருவரங்கத்தில் இராமாநுசர் மேற்கொண்ட சீர்திருத் தங்களின் விபரம் (பக்கம் 74 முதல் 78 - பாகம்-1) வரையிலும், 216-251 (பாகம்-1) தலைப்பு 664லிலும் (பாகம்-2) முழுமையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இதனை நோக்கும்போது இராமாநுசரின் மேலாண்மைத் திறன் நன்கு வெளிப்படுகிறது. மேலும் ஆழ்வார் அருளிச்செயல் அடிப்படையில் பெரிய பெருமாள் திருவாராத னங்கள், திருவிழாக்கள், அருளிச்செயல் ஸேவாக்ரமங்கள் ஆகியவற்றை ஏற்பாடு செய்தமையை ஆசிரியர் அழகாகத் தொகுத்து கொடுத்துள்ளார்.

இராமாநுசர் திருமலையில் பாஷண்டிகள் தங்கள் நாயனார் என்று விவாதம் செய்திட இராமாநுசர் திருமலையில் எழுந்தருளி யிருப்பவன் ஸ்ரீமந்நாராயணனே என்று நிலை நாட்டிய விவரங் களை பக்கம் 195-இல் (பாகம்-1) கொடுக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் குலோத்துங்க சோழன் தில்லைச் திருச்சித்ர கூடத் திருக்கோயிலைக் குலைத்தலும், திருப்பதியில் கோயில் கட்டுவித்து அதில் தில்லை கோவிந்தராஜனை ப்ரதிஷ்டை செய்த விவரம் விளக்கமாக இந்த நூலில் விவரிக்கப்பட்டுள்ளது.

இராமாநுசர் திருநாராயணப் பெருமாள் காட்டிய கனவுப்படி காடு திருத்தி, யதுகிரிமலை ஏறி, திருப்புற்றின் அடியில் ஸேவை ஸாதித்த திருநாராயணப் பெருமாளை ப்ரதிஷ்டை செய்து, டில்லியில் இருந்த உத்ஸவர் ராமப்ரியரை எழுந்தருள பண்ணிக் கொண்டு வந்த விவரங்கள் தலைப்பு (666 பாகம் -2இல்) கொடுக்கப்பட்டுள்ளது.

திருமலையில் செய்த சீர்திருத்தங்களை திருமலை ஒழுகுப் பகுதியிலும், திருமலையும் இராமாநுசரும் என்ற பகுதியிலும் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

இராமாநுசரின் அருளிச் செயல் நிர்வாஹங்களும், அவரைப் பற்றிய ஐதிஹ்யங்களும் முழுமையாக சேகரிக்கப்பட்டு விரிவாக தரப்பட்டுள்ளன.

இராமாநுசரின் பெருமையை முதல் பகுதி 462 முதல் 481 வரையில் விவரிக்கப்பட்டு இதற்கான காரணங்களை இந்நூலாசிரியர் படம் பிடித்து சாரமாகக் காட்டியுள்ளார். அனைவரும் படித்துக் குறிக்கொள்ள வேண்டியதாகும்.

ஆறாவது நூறில், இராமாநுசரைப் பற்றிய வரலாற்று நூல்கள், துதிநூல்கள், வடமொழி நாடகம், ரஹஸ்ய நூல்களில் உள்ள அனைத்து விபரங்களையும் ஆசிரியர் கொடுத்துள்ளது படிப்போரை வியக்க வைக்கும். இத்தனை நூல்கள், தமிழ் வடமொழியில் இருந்ததே முழுமையாகக் யாருக்கும் தெரியாத நிலையில் இந்நூலாசிரியர் அவற்றையெல்லாம் **உ.வே.சா** போலக் கண்டுபிடித்துத் கொடுத்து, அவற்றை விளக்கத்தோடு கொடுத்துள்ளது மிகப் பெரிய அரிய சாதனை ஆகும்.

ஏழாவது நூறில், யஞ்ஜமூர்த்தியுடன் இராமாநுசர் வாதம் செய்தபோது இராமாநுசருடைய கனவில் அரங்கன் தோன்றி, அவருக்கு ஆறுதல் சொல்லி நாளைக்கு அவர் இப்படிச் சொல்லுவீர் நீர். இவ்வாறு ஸ்ரீராமாநுஜ வைபவத்தில் கூறப்பட்டுள்ள தாஸரின் புதிய செய்தியைப் பக்கம் 268இல் காணலாம்.

அனந்தாழ்வான் வைபவத்திலும் பல அரிய செய்திகள் வடிவழகியநம்பிதாஸரால் அளிக்கப்பட்டுள்ளன. (ப. 269)

சரஸ்வதி தேவியை துவாரகையில் இராமாநுசர் தரிசித்ததாகவும் ஸ்ரீபாஷ்யத்தை உகந்து தன் கூந்தலுக்குள் மறைத்து வைத்தாள் என்பது பற்றிய நிகழ்ச்சியில் பல புதிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. பக்கம் 274-276.



திருப்பதியில் கோவிந்தராஜருக்கு கி.பி.1130இல் கோயில் கட்டி பிரதிஷ்டை செய்த இராமாநுசரே தில்லைத் திருச்சித்ர கூடத்திற்கு எழுந்தருளி சோழன் இடித்த கோயில் கவினுறக் கட்டி திருவரங்கம் திரும்பினார். (ப. 279 - பாகம்.2), என்பதும்;

கூரத்தாழ்வானுக்கு வரதராஜர் கண் ஒளி அளித்த செய்தியை வடிவழகிய நம்பிதாஸர் பெரியபெருமாள் அருள் பாடிட்டு, ஆழ்வானைக் கேட்டதாகவும், அதற்கு ஆழ்வான் நாலூரானுக்கு நற்கதி அருள வேண்டும் என்று தெரிவித்துள்ளதும் தாஸர் கூறும் புதிய செய்தியாகும்.

வாத்ஸயவரதாசார்யர் அருளிய யதிராஜ வைபவத்தில் திருவாய்மொழி அத்வைத பரமாக உள்ளது என்று சங்கரர் கூற, நம்மாழ்வார் அதனை மறுத்துப் பேசுகிறார் - (ப. 303 - பாகம்.2இல்) என்பதும்;

கருடவாஹனபண்டிதர் அருளிச்செய்த திவ்யஸூரி சரிதத்தின் மொழிபெயர்ப்பில் ஸ்ரீரங்கராஜனுக்கு நாவல் பழத் தையும் தத்யோதனத்தையும் ஒன்றுசேர அமுதுபடியாக ஸமர்பித்ததால் விஷமான அந்த அமுதுபடிக்கு முறிவாக கஷா யத்தை (குடிநீர்) ஸமர்ப்பித்திட கருடவாஹனபண்டிதரை நியமித்ததைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. (பக்கம் 333இல் - பாகம்.2)

நாயனாராச்சான்பிள்ளை அருளிய சரமோபாய நிர்ண யத்தில் இராமாநுசரே உத்தாரக ஆசார்யர் என்பது நிலைநாட்டப் பட்டிருப்பது அனைவரும் படித்து, அறிந்து உகந்து அநுஷ்டிக் கப்பட வேண்டியதாகும்.

எம்பெருமான் ஸ்வரூபம் ஆறுவகை என்றும் அவை. 1) பர நிலை, 2. வ்யூஹ நிலை, 3. விபவ நிலை, 4. அந்தர்யாமி நிலை, 5. அர்ச்சை நிலை, 6. ஆசார்ய அவதார நிலை என்று விஷ்வக்ஸேன ஸம்ஹிதை தெரிவிப்பதை (பக்கம் 455-இல் -பாகம்.2) நோக்கத் தக்கது.

பகுதி 6-இல் ‘இராமாநுசரும் சமுதாயச் சிந்தனைகளும்’ என்ற பகுதி ஒப்பற்ற பகுதியாகும். இராமாநுசரின் சமுதாய சிந்தனைக்கு வித்திட்ட சூழல், அவர்தம் கண்ணோட்டத்தில் சமுதாயமும் அதன் நடைமுறைகளும், பொருளாதாரக் கோட்பாடுகள், விவசாய முன்னேற்றம், வறட்சியின் போது பூமிவளம் பெறச் செய்வது, கட்டுக் கோப்பான சமுதாய சிந்தனையைச் சாத்திரங்கள் கொண்டு நிலைநாட்டிய பெருமை ஆகியவற்றை இந்நூலாசிரியர் விளக்கியிருப்பது இந்நூலாசிரியரின் நுண் மாண் நுழைபுலத் திற்குச் சான்று பகர்கின்றது.

‘கல்வெட்டுகள் கூறும் இராமாநுசரைப் பற்றிய செய்திகள்’ இதுவரை யாரும் அறிந்திராத, விளக்கம் அளித்திடாத பகுதியை இந்நூலாசிரியர் ஒப்பற்ற பல்துறை வித்தகராக இருப்பதோடு கல்வெட்டுத்துறை அறிஞராகவும் இருப்பதால், பற்பல அரிய செய்திகளைத் தத்துள்ளார். திருவரங்கம், திருவேங்கடம், காஞ்சிபுரம், திருநாராயணபுரம் ஆகிய தலங்கள் பற்றிய கல்வெட்டுச் செய்திகளும், இராமாநுசர் செய்த சீர்திருத்தங்களும் சுவையாக அமைந்துள்ளன. நிறைவான பகுதியில் - இராமாநுசரின் ஒன்பது நூல்களில் ஒன்றான வேதாந்தஸாரத்தின் விளக்கவுரை எளிய தமிழில் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

**வேதாந்தஸாரம் - பாகம் 3**

இராமாநுசர் காஷ்மீரத்தில் அந்த தேசத்து ராஜாவை மத்யஸ்தராக வைத்துக்கொண்டு அங்குள்ள அத்வைதிகளோடு வாதம் செய்து விசிஷ்டாத்வைதத்தை ஸ்தாபித்தவுடன் அரசனும் வித்வான்களும் இராமாநுசரைப் பார்த்து உம்முடைய ஸித்தாந்தத்தை பிரமாணங்களால் நிரூபித்ததுபோல ப்ரத்யக்ஷத்தாலும் நிரூபித்துக்க காட்ட வேண்டும் என்று வேண்டி நின்றனர். அதன் படியே இராமாநுசர் வேதாந்தஸாரத்தை எழுதி, அரசன் கையிலே கொடுத்தார். அரசனும் வேதாந்தஸார சுவடியை சரஸ்வதியின் கையிலே வைத்துக் கோயில் கதவை மூடி முத்திரை வைத்தான். பொழுது விடிந்ததும் வேந்தரும் மாந்தரும் வந்து கதவைத் திறந்து பார்த்த போது சரஸ்வதியின் கையிலே வைத்த வேதாந்தஸாரம்



சரஸ்வதியின் திருமுடியிலே ஆபரணமாக விளங்கக் கண்டு, வித்வான்கள் அனைவரும் வியந்து பாராட்டினர் என்று ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

அப்படிப்பட்ட வேதாந்தஸாரம் என்கிற க்ரந்தம் ப்ரஹ்ம ஸூத்ரங்களின் விளக்கங்களின் மிக எளியதும் சுருக்கமும் ஆகும். ப்ரபஞ்சத்திற்கும் ப்ரஹ்மத்துக்குள்ள தொடர்பை சரீர சரீரி பாவத்தின் அடிப்படையில் விளக்கி, சித்து, அசித்து ஆகியவற்றைக் தன்னுள்ளே கொண்டவனே பிரஹ்மம். அவன் தீய குணம் ஏதும் இல்லாதவன். கல்யாண குணங்கள் அனைத்தையும் உடையவன். அவனே நாராயணன் பிராட்டியோடு கூடியவன். ச்ரியப்பதி கருணையே வடிவெடுத்தவன் என்று மங்கள ச்லோகத்திலேயே தெரிவிக்கிறார். இராமாநுசர் இவ்வாறு நான்கு பாகங்களில் உள்ள 545 ப்ரஹ்மஸூத்ரங்களுக்கும் அருளியுள்ள வேதாந்தஸாரத்தின் பிழிவை இந்நூலாசிரியர் நீரோடை போன்ற நடையில் தமிழில் வெகு அழகாக அளித்துள்ளார். இப்பகுதியில் படிக்கப்படிக்க உயர்ந்த வேதாந்த கருத்துக்களை இவ்வளவு எளிமைாகவும் படித்து அனுபவிக்கும் படியும் அமைந்துள்ளதை அனைவரும் அறிந்து கொள்ளலாம். நூலாசிரியர் மேற்கொண்டுள்ள வைணவத் தொண்டு இதன்மூலம் வெளிப்படுகிறது.

மற்றைய சமய ஆசாரியர்களுக்கு இல்லாததும் இராமாநுசருக்கே அமைந்துள்ள தனிப்பெருமையாவது, எல்லா வைணவ ஆலயங்களிலும் திருமாளிகைகளிலும், ராமாநுஜ கூடங்களிலும், பஜனை மடங்களில் இராமாநுசரின் விக்ரஹ வழிபாடு இராமாநுசர் காலம் முதல் நடந்து வருவதே ஆகும். வைணவர்கள் ஒவ்வொருவரும் இனம், மொழி, ஆண், பெண் பேதமில்லாமல் ‘‘அடியேன் ராமாநுஜதாஸன்’’ என்றே தன்னைச் சொல்லி வணங்குவதும், எதை எழுத ஆரம்பித்தாலும் ‘‘ஸ்ரீமதே ராமாநுஜாய நம:’’ என்று ஆரம்பித்தே எழுதுவதும், பேசுவதும் ஆகிய மரபுகள் வழிவழியாக மேற்கொண்டு வரப்படுகிறது. இதற்கான காரணங்களை இந்நூலாசிரியர் கீழ்க்கண்டவாறு விளக்கியுள்ளது, நெஞ்சை நெகிழ வைக்கிறது.

''பெருமாள் அருளிச் செய்த அபயப்ரதானத்தை விசத மாக்கியது, கீதாசார்யன் செய்த சரமச்லோக அர்த்தத்தை ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்யப்பிரபந்தங்களை அங்கமாக உடைய திருவாய்மொழிக்கு உரை எழுதச் செய்து ப்ரகாசப்படுத்தியது. ஸ்ரீமந்நாதமுனிகள் ஸ்ரீஆளவந்தார் க்ரந்தங்களைக் கொண்டு ப்ரஹ்மஸூத்திரத்திற்கு விரிவுரை வழங்கியது. ஸ்ரீபாஷ்யம் முதலான 9 க்ரந்தங்கள் அருளிச்செய்தது. பெரியகோயில் நிர்வாகத்தினை சீர்திருத்தியது. அகில பாரதத்திலும் கால் நடையாக பாதயாத்ரை செய்து வைணவத்தையும் திருக்கோயில்களையும் வைணவ சமுதாயத்தையும் விளங்கச் செய்தது. வைணவ ஸித்தாந்தத்தை வளர்த்து எங்கும் பரவச் செய்தது''.

இப்படிப்பட்ட பலவகையில், பற்பல தொண்டுகள் மூலம் வைணவத் திருக்கோயில்களையும், வைணவ சமுதாயத்தின ரையும் வளர்த்த இராமாநுசருக்கு நம்பெருமாள் 1008 கலச அபிஷேகம் செய்து, திருவீதி வலம் வரச் செய்து உபய விபூதி நாதர் என்று பட்டாபிஷேகமும், பட்டருக்கு யுவராஜ பட்டாபிஷேகமும் செய்தார் நம்பெருமாள். இவ்வாறு இராமாநுசரைப் பற்றி அளவிட முடியாத அனைத்து நூல்கள், அவை கூறும் செய்திகள் ஆகியவற்றை - 1800 பக்கங்களில் முதல் மூன்று பாகங்களில் இந்த ஆண்டு தொகுத்து வெளியிடும் ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ. கிருஷ்ண மாசார்யருக்கு வைணவ உலகம் மட்டுமின்றி அகில உலகமே மிகவும் கடமைப்பட்டுள்ளது. இந்தப் பயனுள்ள நூலை அனைவரும் வாங்கித் தாங்களும் படித்து, மற்றவர்களையும் படிக்கச் செய்வதே இந்நூலாசிரியருக்கு நாம் செய்யும் கைம்மாறும் கடமையுமாகும்.

**வாழ்க ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ ஸ்வாமி.**
**வளர்க அவர் தம் வைணவத்தொண்டு.**
**எம்பெருமானார் திருவடிகளே சரணம்.**

**அன்பன்**
**அ.வெ.ரங்காசார்யன்,**
**தில்லை திருச்சித்ரகூடம்,**
**22.4.2012.**



**பக்கம் 20இன் தொடர்ச்சி (ஹரிதாஸரின் இருசமய விளக்கம்)**

*19.* தெரிந்துணரும் ஞானியர்கள் சேவை செய்யார்
செயத்தக்க காலத்திற் றேவர் யெல்லாம்
பரிந்தன்ப ருக்குதவும் பலன்க ளெல்லாம்
பருமிதமன் றென்பதனைப் பகரா நிற்கும்
செருந்திநிறைந் திலங்குகுழல் கலசக் கொங்கை
திங்கள் முகச்செவ்வாய்ச் சிற்றிடைப்பே ரல்குல்
முருந்துநகை யாயைந்தாம் வேத மென்ன
மொழிகின்ற பாரதத்துள் மோக்க தன்மம்;

**(இ. பொ.)** ஆராய்ந்தறிந்த ஞானிகள் (அத்தேவர்களை) வணங்க மாட்டார்கள். இத்தேவர்கள் தம்மை வழிபட்ட அன்பருக்கு உகந்து கொடுக்கும் பயன்களெல்லாம் நிலையுடையன ஆகா என்று,செருந்திக் பூக்கள் நிறைந்து விளங்கும் குழலையும் கோபுரக் கலசத்தையொத்த ஸ்தனங்களையும், நிலவை ஒத்த முகத்தினையும் பவளம்போன்ற இதழையும், சிற்றிடையும், அகன்ற அல்குலையும் உடைய முத்துப் போன்ற சிரிப்பொலியையும் உடையவளே! வேதத்தினை ஒத்து மொழிகின்ற பாரதத்திலுள்ள மோக்ஷதர்மம் இவ்வாறு இயம்பா நிற்கும்.

*20.* ஆரமொடு நவமணியைக் கொழித்து வீசி
அதன்கரையை அழகுசெய் யுமணித் தரங்க
வாரிதியின் இடையெழுந்த ஆல கால
மைவளருங் கண்டத்தான் மகிழ்ந்து நல்கும்
ஏரமரும் வரங்களெல்லாம் திரமன் றென்னும்
இயல்புதனை விரித்துரைத் தேனினிய வன்றன்
பேரியலாம் சிவபதமும் அநித்த மென்னும்
பிரமாணம் பலவுளவும் பேசக் கேள்நீ.

**(இ.பொ.)** பல ஆரங்களுடன் நவமணிகளையும் கொழித்து வீசி, கடற்கரையை அழகுசெய்யும் அலைகளுடன் கூடிய சமுத்திரத்தின் இடையில் எழுந்த ஆலகால விஷத்தைத் திருமாலருளால் எடுத்து உண்ட நீலகண்டனாகிய சிவன் மனமகிழ்ந்து ஈயும் வரமெல்லாம் நிலைபெற்றனவாகாது என்று உரைத்தேன். இனி உங்கள் சிவன்

அளிக்கும் பதமும் (அநித்யமாம்) அழிந்துபோகும் என்பதற்குப் பிரமாணம் பலவுள; அவற்றையும் சொல்லுவேன் நீ கேட்பாயாக.

*21.* *தூயமக ரக்குழையைப் பொருது சேலைச்*
*சுடர்வேலை வடுவகிரைத் துள்ளும் மானைச்*
*சாயகங்க டமைநீலோற் பலத்தை வண்டைத்*
*தாமரைப்போ தைப்பழித்த தடங்கண் மாதே!*
*காயகர்வா தகர்நட வரிவர் கடங்கள்*
*கருத்தெல்லாம் ஒருநிலையே கருது மாப்போல்*
*ஏயபுலன் ஓரைந்தும் ஒருமைத் தாக*
*இருப்பதுவே யோகத்தின் இயற்கை யென்றும்;*

**(இ.பொ.)** தூய மகரக்குழையை ஒத்த அசோகு, ஒளிபொருந்திய வேல், பலபுள்ளிகளையுடை மான், அம்பு, நீலோற்பலம், அதனுள் மொய்க்கும் வண்டு, தாமரைப்பூ ஆகியவற்றைப் பழித்த அகன்ற கண்களையுடைய பெண்ணே! சங்கீதம் பாடுவோர், இரசவாதம் செய்வோர், நடிப்போர் என்ற இவர்களுடைய கருத்தெல்லாம் ஒரு நிலையே கருதுமாப்போலே, ஐம்புலனும் ஒருவழிப்பட்டிருப்பதுவே யோகத்தின் இயற்கையாகும் என்றும்;

*22.* *அப்படியா கியயோகம் சித்தி யானோர்*
*அம்புயத் தோனுலகத் துக்கப்பா லான*
*ஒப்பறுசீர் முத்திபதந் தன்னின் மேவி*
*ஓங்கியவா னந்தம்பெற் றுறைவர் என்றும்*
*செப்பரிய தாமந்த மாயோ கந்தான்*
*சித்தியா முனந்தேகம் சிதைந்த தானால்*
*மைப்பயிலும் மணிமிடற்றான் பதத்தை மன்னி*
*மற்றவனுக் கனுசராய் வாழ்வா ரென்றும்;*

**(இ.பொ.)** அங்ஙனமாகிய யோகம் சித்தியடைந்தோர், பிரம்மனு டைய உலகத்துக்கு அப்பாலுள்ள ஒப்பற்ற மோக்ஷபதத்தை அடைந்து, சிறந்த ஆனந்தமுற்று வாழ்வார்கள். சொல்லுதற்கரிய அந்தப் பெரியயோகம் சித்திப்பதற்கு முன்னர் தேகம் ஒழிந்து விடுமாயின், அவர்கள் நீலகண்டனான சிவனுடைய பதத்தை யடைந்து அவனுக்கு அநுகூலராய் வாழ்வார்கள்; (தொடரும்)

# சொல்லும் பொருளும்

இதழ் 156இன் தொடர்ச்சி. ஆசிரியர்: மு. அருணாசலம்

**நாகசுரம்**

நாகசுரம் என்ற இசைக்கருவி நாதசுரம் என்றும் வழங்கப் படுகிறது. நாகசுரம் என்பதே சரியான வடிவம். பண்டை இலக்கியங்களில் இப்பெயர் காணப்படாவிட்டாலும் கூட, இசை நூல்களில் சொல்லப்படும் குழல் என்பது இதுவே என்றும், கண்ணன் ஊதுகின்ற புல்லாங்குழல் என்பது வேறு என்றும் ஆன்றோர் சொல்வர். அன்றியும், நாகசுரம் என்பது நாயக சின்னம், என்பதன் திரிபாகிய நாயனம் என்றும் வழங்கப்படும். நாயனம் என்பதே அதிக வழக்கு. நாயகச் சின்னம் என்பதன் தோற்றுவாய் விளங்கவில்லை. வாத்தியங்களில் தலைமையுடையது நாயனம். நாயன்-தலைவன், இதிலிருந்து நாயனம் என்ற பெயர் வந்ததா? குழல் வங்கியம் என்று சிலப்பதிகாரம் கூறும்; பெருவங்கியம் என்றால் நாகசுரம் என்று கூறுவர். நாகசுரம் ஆச்சாமரத்தால் செய்யப்படும் இதில் திமிரி என்பது சிறியது, பாரி என்பது பெரியது.

**நாயனார்**

பொதுவாக அறுபத்து மூன்று நாயன்மார் என்ற பெயரில் ‘நாயனார்’ என்றே ஒவ்வொருவரையும் பெயரிட்டிருப்பதால் சிவனடியார் என்று நாயனார் என்ற சொல்லின் பொருளை நாம் அறிவோம். பிற்காலத்தில் உய்யவந்த தேவநாயனார் மெய்கண்ட தேவ நாயனார் என்று, அடியார் அனைவருக்குமே இச்சொல் கொள்ளப்பட்டுள்ளது கடவுள் என்ற பொருளில் சேக்கிழார் இச்சொல்லைப் பலமுறை உபயோகிக்கிறார்; உறையூர் ஸ்ரீ கோயில் நாயனார் என்று சிலப்பதிகார அரும் பதவுரைகாரரும் குறிப்பிடுவார்.

நாயன் என்ற சொல் வடமொழி; நீ - நய என்ற வேர்ச் சொல் தலைமை தாங்கி நடத்துதல் என்று பொருளாகும்; நாயன் - தலைவனாகிய கடவுள். (நாயகன் என்ற வடிவத்தையும் நோக்குக).

ஆர் என்ற உபசார விகுதி பெற்று இது நாயனார் ஆயிற்று. நாயன்தே என்ற வடிவத்தில் இது வைணவ உரை நூல்களில் விளியாகப் பயில்கிறது. நாயன் (தலைவனாகிய) ஆசாரியன் (கடவுள்) என்பது பொருள். நாயந்தே என்று இதை எழுதுவதும் உண்டு. இது திரிந்து நயிந்தே (விளி) என்றும் ஆகியிருக்கிறது. பின்னும் இது பல வகையில் திரிந்திருக்கிறது. நயினார்-சுவாமி; நயினாத்தை என்று பண்ணைத் தலைவனைக் குறிப்பிடப் பள்ளுப் பிரபந்தங்களில் வரவும் காணலாம். நயினார்-சிலர் பட்டப்பெயர். முக்கியமாகச் சைனர்களிடையே ‘சித்திரகுப்தன் நோன்பு நயினார் நோன்பு’ என்று பெயர் பெற்றிருக்கவும் காண்கிறோம். இங்ஙனம் இது தலைவன் என்ற கருத்தை மையமாக வைத்து இலக்கியத்திலும் பேச்சிலும் பல்வேறு வடிவம் பெற்றிருக்கக் காண்கிறோம்.

வைணவ ஆசார்யர்களில் அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் என்றும், நாயனாராச்சான்பிள்ளை என்றும் பெயர் கொண்டவர்கள் உளர். இங்கு இந்தச்சொல் தலைவன் என்ற பொருளில் கொள்ளப்படுகிறது.

**நொண்டிச் சிந்து**

சிந்து என்பது இசைப்பாவில் ஒரு வகை என்று அடியார்க்கு நல்லார் கூறுவர். பிற்காலத்தில் புதிய பாவினங்கள் பல தோன்றிய போது, பலவகைச் சிந்துகளும் எழுந்தன. அவற்றுள் ஒன்று நொண்டிச் சிந்து. நொண்டி நாடகம் என்ற பிரபந்தத்தின் மூலம் இவ்வகைப் பாட்டு பிரசித்தியடைந்தது. இச்சிந்தில் முதலடியும் மூன்றாமடியும் ஒருசீர் குறைந்தும், இரண்டாமடியும் நாலாமடியும் நாலுசீர் பெற்றும் வருவதால், நொண்டிச் சிந்து என்று பெயர் பெற்றது போலும். அன்றி, நொண்டி நாடகத்தில், தாசிக்குக் கொடுக்கக் காசின்றிக் குதிரை திருடிப் போய்ப் பிடிபட்டுக் கால் வெட்டப்பெற்று நொண்டியாகி, அவன் தன் வரலாற்றைப் பாடும் சிந்து ஆனபடியால் நொண்டி பாடும் சிந்து நொண்டிச் சிந்து ஆகியிருக்கவும் கூடும். நந்தனார் சரித்திரக் கீர்த்தனையில் கோபால கிருஷ்ண பாரதியார் பாடிய ‘ஐய ஒரு சேதி கேளும்’ என்ற நொண்டிச் சிந்து மிக்க பிரசித்தி வாய்ந்தது.

**பகர்தல்**

பல பொருளைக் கொண்டு ஒரு சாமானியச் சொல்.



சொல்லுதல் என்பதே இதன் இன்றைய பொருள். சிலப்பதிகாரத்தில், விற்றல் என்ற பொருளிலேயே இச்சொல் வருகிறது; சிலம்பு பகர்தல் வேண்டி என்பது காண்க. இதற்குள்ள வேறு பொருள்களை இங்கு கருதவில்லை. புதிய எழுத்தாளர் சிலர், இச்சொல் இறந்த காலப் பெயரெச்சமாக வரும்போது பகர்ந்த என்ற வடிவம் பெறும் என்பது அறியாமல், பகன்ற (பகன்றார்) என்று எழுதக் காண்கிறோம். இது மொழியறிவின்மையால் வந்த குறைபாடு. பகர்தல்-புகலுதல் என்ற இருசொற்களையும் ஒன்றாய்க் குழப்பி, பகர்ந்தார், புகன்றார் என வரும் இரு வேறு சொற்களை அறியாமல் பகன்றார் என்று இரண்டையும் ஒன்றாய்க் குழப்பிய நிலை.

**பட்டிணம், பட்டினம்**

இரண்டும் வெவ்வேறு சொற்கள், பட்டணம் என்பது நகரம்; வடமொழியில் பட்டணம் என்பது. (கடற்கரையூர் என்று பேரகராதி சொல்கிறது; ஆதாரம் விளங்கவில்லை. தவறாக வழங்கும் வழக்கைக் கொண்டு சொல்கிறது போலும்.) ஆனால் பட்டினம் என்பது நெய்தல் நிலத்தூர்; கடற்கரையோரமுள்ள ஊர். இவ்வடிவம் சங்க இலக்கியங்களிலும் பொருளிலக்கணங்களிலும் அதிகம் பயில்கிறது. பட்டினமும் பாக்கமும் நெய்தலுக்கு ஊர் என்று தொல்காப்பிய உரைகள் சொல்லும். இவ்வூர் சிற்றூராயு மிருக்கலாம், பேரூராயுமிருக்கலாம். பெருநகராயிருந்த புகார், காவிரிப் பூம்பட்டினமென்று மிகவும் பிரசித்தி பெற்றிருக்கிறது. கடற்கரையிலிருந்தமையால் இது பட்டினம்; பேரூராகவும் நகராகவும் இருந்தமையால் இதுவே பட்டணம் என்பது பொருந்துகிறது. இவ்விரு காரணங்களாலும் இவ்வூரில் பிறந்து பெருந்துறவியாய்ப் பல பாடல்கள் பாடிய திருவெண்காடரை இருவகையால், சொன்னாலும் பொருந்தும். பட்டினத்தார் என்றாலும் பட்டணத்தார் என்றாலும் பிழையில்லை; ஏடுகளில் இவர் பெயர் பட்டணம் சுவாமிகள் என்று எழுதியிருக்கக் காணலாம். ஆனால் உள் நாட்டு நகரொன்றைப் பட்டினம் எனல் பொருந்தாது. எடுத்துக்காட்டாக திரிசிராப்பள்ளியும் மதுரையும் பட்டினமல்ல, பட்டணம்; பட்டினம் என்பது பிழை. நாகைப்பட்டினம் இரு வகை ஆட்சிக்கும் பொருந்தும். பட்டணம் என்ற சொல்லுக்குப் பண்டைய இலக்கிய ஆட்சி இல்லை.

### பட்டோலை

பட்டோலை கொள்ளுதல் என்பது ஒரு வைணவ வழக்கு. ஆசாரியர் திருவாய் மலர்ந்து அருள்வதை மாணாக்கர் அவ்வப்போது எழுதி வைத்தார்கள். வியாக்கியானங்களும் உபதேச மொழிகளும் இவ்வாறு எழுதி வைக்கப்பெற்றன. சாதாரணப் பனையோலைதான் எழுதப் பயன்பட்டது. பட்டோலை என்று தனியாக ஓர் ஓலை இல்லை, எழுதிய பொருள் சாத்திரம் ஆகையால், எழுதிய ஓலையைப் பட்டில்பொதிந்து வைத்தார்கள். ஆகவே ஓலையே பட்டோலை ஆயிற்று. எழுதும் தொழிலும் பட்டோலை கொள்ளுதல் என்று பெயர் பெற்றது.

### பண்டாரம்

பொக்கிஷம் என்ற பொருளுடைய ஒரு சொல்; பண்டார என்ற வட சொல்லிலிருந்து வந்தது என்பர். பரிபாடலிலும் சிறுபஞ்ச மூலத்திலும் இச்சொல் பயில்கிறது. சரக்கறை என்று பொருள் சொல்லலாம், 'மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே' என்ற திருவாசக வரியின் பொருள் இதுவே. 'ஆடையாபரணம் பண்டாரத்தே எனக்குப் பணித்து அருள வேண்டும்' என்பது சுந்தரர் பாடல். பிற்காலத்தில் அரசாங்கத்தை குறிக்கும் சொல்லாகச் சாஸனங்களில் காணப்படுகிறது. பொதுச் சொத்து, அரசின் சொத்து என்ற பொருளில் பல தொடர்களில் இச்சொல் பயில்கிறது. பண்டாரமேளம், பண்டார வாடை, பண்டார வாரியம் என்றெல்லாம் வரும். பண்டார வாடை என்ற பெயரில் பல ஊர்கள் அமைந்துள்ளன.

வடமொழியில் பண்டாரம் என்று வேறொரு சொல் உண்டு; அதன் பொருள் பரதேசி, சைவத்துறவி என்பதாகும். சைவர்களில் குருபதவி வகிக்கும் தேசிகர் இனத்தாருக்கும், அரிசன வகுப்பில் குருபதவி வகிக்கும் வள்ளுவன் இனத்தாருக்கும் பண்டாரம் என்ற பெயர் இன்றும் வழங்குகிறது. பிச்சைக்காரராயுள்ள சந்நியாசி களுக்கும் பண்டாரம் என்ற பெயர் வழங்குவதுண்டு. இது பிண்டாரன் என்ற சொல்லிலிருந்து வந்தது என்று அகராதி கூறும். அதைவிட, ஞானச் செல்வமாகிய பண்டாரத் திருவைப் பெற்றவர் என்று கருதுவது பொருத்தமாயிருக்கும்.

(தொடரும்)



# துணுக்குத் தோரணம்

**1. தினமலர் 4.5.2012 அன்று வெளிவந்த செய்தி.**

தமிழகத்தில், கோயில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம் ஆகியவற்றுச் சொந்தமான நிலங்களை விலைக்கு வாங்கி, அவற்றில் அடுக்குமாடி குடியிருப்புகளை கட்ட, வீட்டு வசதி வாரியம் திட்டமிட்டு உள்ளது. முதல் கட்டமாக, இதற்காக, 92.97 ஏக்கர் நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளன. தமிழகத்தில் இதுவரை, வருவாய்த் துறை வசம் உள்ள நிலங்களை கையகப் படுத்தி, அதில் மட்டுமே, வீட்டு வசதி வாரியம் குடியிருப்புத் திட்டங்களை நிறைவேற்றி வந்தது. இவ்வாறு கிடைத்த நிலங்களைவிட புதிய குடியிருப்புத் திட்டங்களுக்கு தேவைப்படும் நிலங்களின் அளவு அதிகமாக உள்ளது.

**புது முடிவு:** இதையடுத்து அரசின் வேறு துறைகள் வசம் உள்ள காலி நிலங்களை விலைக்கு வாங்கி, அதில் குடியிருப்புத் திட்டங்களை மேற்கொள்ள, வீட்டு வசதி வாரியம் முடிவு செய்தது. இதற்காக, இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள கோவில்களுக்கு சொந்தமான காலி நிலங்களையும்; கதர் கிராமத் தொழில் வாரியத்துக்குச் சொந்தமான காலி நிலங்களையும் வாங்க, முடிவு செய்யப்பட்டு உள்ளது. இவ்விரு துறைகளுக்குச் சொந்த மாக உள்ள காலி நிலங்கள் குறித்த விவரங்கள், வீட்டு வசதி வாரிய கோட்ட அலுவலகங்களில் இருந்து பெறப்பட்டன.

**நிலங்கள் தேர்வு:** இதுகுறித்து, பெயர் குறிப்பிட விரும்பாத வீட்டு வசதி வாரிய உயர் அதிகாரி ஒருவர் கூறியதாவது: வீட்டு வசதி வாரியத்தின், ஜே.ஜே., நகர் கோட்டத்தில், கோயில் பதாகை, திருமுல்லைவாயல், எழும்பூர், புலியூர், ஏகாடு பகுதிகளில் உள்ள கோவில்களுக்குச் சொந்தமான, 57.51 ஏக்கர் நிலங்கள். பெசன்ட் நகர் கோட்டத்தில், 7.66 ஏக்கர் நிலம்; திருச்சி கோட்டத்துக்கு

உட்பட்ட பெரம்பலூரில், மூன்று கோயில்களுக்கு சொந்தமான, 27.80 ஏக்கர் நிலம் என, மொத்தம், 92.97 ஏக்கர் நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளன. கதர் வாரியத்தில்....: இதேபோல, கதர் கிராம தொழில் வாரியத்துக்கு சொந்தமாக, சென்னை மாதவரம்; கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல்; கடலூர் மாவட்டம், திருப்பூர் தொட்டிபாளையம்; நெல்லை மாவட்டம், குலவணிகர்புரம்; தூத்துக்குடி மாவட்டத்தின் நகரப் பகுதிகளில் இருந்து, மொத்தம், 44.31 ஏக்கர் நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு உள்ளன. இந்த நிலங்களை சந்தை விலையில் விற்பது குறித்து, இந்து சமய அறநிலையத்துறை, கதர் கிராம தொழில் வாரிய துறைகளின் கருத்துக்களைக் கேட்டு, வீட்டு வசதி வாரியம் தனித்தனி கடிதங்களை அனுப்பி உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

இதில், கதர் கிராம தொழில் வாரிய அதிகாரிகளுடன் நடந்த முதல் கூட்டத்தில், தற்போது நடைமுறைக்கு வந்துள்ள புதிய வழிகாட்டி மதிப்புகளின் அடிப்படையில், சந்தை விலையை ஆய்வு செய்து நிலங்களுக்கான விலையை முடிவு செய்வது என முடிவாகி உள்ளது.

**கருத்து கேட்பு:** இதுகுறித்து, பெயர் குறிப்பிட விரும்பாத இந்து சமய அறநிலையத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: வீட்டு வசதி வாரியம் தேர்வு செய்துள்ள நிலங்கள், எதிர்காலத்தில் ஏதாவது பயன்பாட்டுக்காக ஒதுக்கப்பட்டு உள்ளதா, இதை விற்பனை செய்வதால் சட்டச் சிக்கல் வருமா என்பது குறித்து, ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இதுதவிர, அந்தந்த கோவில் நிர்வாகி மற்றும் அரசின் கருத்தை பெற்ற பிறகே, இதில் இறுதி முடிவெடுக்க முடியும். இவ்வாறு, அந்த அதிகாரி கூறினார்.

**கோயில் நிலங்கள் விவரம்:** குடியிருப்பு கட்டும் திட்டங்களுக்காக, வீட்டு வசதி வாரியம் மாவட்டவாரியாக தேர்வு செய்துள்ள நிலங்களின் விவரம்.

**மாவட்டம், கோயில், நிலத்தின் அளவு (ஏக்கரில்)**

| | | |
|---|---|---|
| திருவள்ளூர் (அம்பத்தூர்) | சுந்தரபெருமாள் கோவில் | 25.40 |
| திருவள்ளூர் (அம்பத்தூர்) | மாசில்லாமணீஸ்வரர் கோவில் | 28.17 |
| சென்னை (எழும்பூர்) | ஏகாம்பரேச்வரர் கோவில் | 0.80 |
| சென்னை (மாம்பலம்) | தீர்த்தீஸ்வரர் கோவில் | 3.14 |
| சென்னை (வேளச்சேரி) | தண்டீஸ்வரர் | 7.66 |
| பெரம்பலூர் | மதன கோபாலசாமி கோயில் | 11.25 |
| பெரம்பலூர் | மணிகண்டேஸ்வரர் கோவில் | 6 |
| பெரம்பலூர் | ஒப்பில்லாதம்மன் கோவில் | 10.55 |



மொத்தம் 92.97

ஆக்கிரமிப்பு நிலங்கள்.....? தமிழகம், கோவில் நிலங்கள் தனியார் ஆக்கிரமிப்பு மற்றும் அபகரிப்பதால், மோசடி செய்யப்பட்டு உள்ளன. இப்போது, எந்த வில்லங்கமும் இன்றி, காலியாக உள்ள நிலங்கள் மட்டுமே, குடியிருப்பு திட்டத்துக்காக தேர்வாகி உள்ளன. ஆக்கிரமிப்பாளர்களிடம் இருக்கும் கோயில் நிலங்களையும் மீண்டு பயன்படுத்த, அரசு முன்வர வேண்டும்.

**2. தினமணியில் 9.5.2012 அன்று வெளிவந்த செய்தி.**

### ஹஜ் மானியத்தை 10 ஆண்டுகளில் நீக்க உச்ச நீதிமன்றம் ஆணை

அடுத்த 10 ஆண்டுகளுக்குள் ஹஜ் பயணிகளுக்கான மானியத்தை படிப்படியாக குறைத்து முற்றிலும் நீக்க வேண்டும் என செவ்வாய்க்கிழமை மத்தியஅரசுக்கு உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது. நீதிபதிகள் அஃப்தாப் ஆலம், ரஞ்சனபிரகாஷ் தேசாய் ஆகியோரைக் கொண்ட அமர்வு தனது தீர்ப்பில் கூறியதாவது: 2011ஆம் ஆண்டு ரூ. 685 கோடி ஹஜ் மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது. குர்ஆன் படி பார்த்தால் கூட மானியம் வழங்கப்படக் கூடாது. தங்கள் உழைக்கும் பணத்திலேயே ஹஜ் யாத்திரையை மேற்கொள்ள குர் ஆன் கூறுகிறது.

இந்தத் தொகையை முஸ்லிம்களின் சமூக, கல்வி மேம்பாட்டுக்கு ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தியிருக்கலாம். இப்போது ஒரு ஹஜ் பயணிக்கு ரூ. 38 ஆயிரத்தை விமானப் பயணக் கட்டணமாக மத்திய அரசு தருகிறது. கடந்த ஆண்டு மட்டும் 1.25 லட்சம் முஸ்லிம்கள் ஹஜ் யாத்திரை மேற்கொண் டுள்ளனர். அடுத்த 10 ஆண்டுக் காலத்துக்குள் ஹஜ் மானியத்தை படிப்படியாக குறைத்து முற்றிலும் நீக்க வேண்டுமென மத்திய

அரசுக்கு இந்த அமர்வு ஆணையிடுகிறது. இதற்கேற்றபடி இன்றிலிருந்தே மானியத் தொகையைக் குறைத்து 10 ஆண்டுகளுக்குள் நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற மத்திய அரசு பாடுபட வேண்டும். ஹஜ் பயணத்துக்காக ஹஜ் கமிட்டிக்கு விண்ணப்பிக்கும் பெரும்பாலான முஸ்லிம்களுக்கு தங்கள் பயணத்துக்குப் பின்னாலி ருக்கும் பொருளாதாரம் குறித்துத் தெரியாது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

ஹஜ் பயணிகளுடன் அரசுப் பிரதிநிதிகளை அனுப்புவதை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். ஹஜ் புனித யாத்திரையை முன்னிட்டு சவூதி அரேபியாவுடன் தங்கள் நல்லெண்ணத்தை காட்டும் இந்திய அரசின் சிந்தனை பாராட்டுக்குரியது. ஆனால், அதேநேரத்தில் 27பேரை அங்கு அனுப்புவதன் மூலம் நோக்கம் நிறைவேறியதா என்பதைக் காணத் தவறி விட்டோம். எனவே, ஹஜ் நல்லெண்ண தூதுக் குழுவை அனுப்பும் வழக்கம் இத்துடன் நிறுத்தப்பட வேண்டும். சவூதி அரேபிய அரசுக்கு ஹஜ் நல்லெண்ணச் செய்தியைத் தெரிவிக்க ஒரு தலைவரையோ அல்லது துணைத் தலைவர் ஒருவரையோ அனுப்பினால் போதுமானது. இதில் ஆச்சரியம் என்னவென்றால், ஒரு குறிப்பிட்ட நபரே பலமுறை நல்லெண்ண தூதுக் குழுவில் இடம்பெறுவதும் நிகழ்ந்துள்ளது. இவ்வாறு உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தீர்ப்பை மதத்தலைவர்களும் முஸ்லிம் அமைப்புகளும் வரவேற்றுள்ளன.

**ஆசிரியர் குறிப்பு:**

***சிறுபான்மையினரின் வாக்கு வங்கியைக் குறிவைத்து அனைத்து அரசியல் கட்சிகளும் (இதற்கு பாரதீய ஜனதா கட்சியும் விலக்கல்ல.) ஹஜ் பயணத்திற்கும், ஜெருசலெம் யாத்ரைக்கும் உதவித்தொகை வழங்குகின்றன. இது ஒரு மோசடி. 2011ஆம் ஆண்டு தற்போதைய முதலமைச்சர் ஜெயலலிதா தான் வெற்றி பெற்றால் இந்துக்கள் சாளக்ராமம் மற்றும் அமர்நாத் சென்று வருவதற்கு உதவித்தொகை வழங்குவதாக வாக்குறுதி தந்திருந்தார். பதவியில் அமர்ந்து ஒரு வருடமாகியும் அம்மா இதுபற்றி வாய்த் திறக்கவில்லை......***

***



# திருவிருத்தத்தில் அகஇலக்கியக் கோட்பாடுகள்

இதழ் 156இன் தொடர்ச்சி. ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர்.

**வரைதல் வேட்கை**

**வரைதல் வேட்கை: தலைவன் தன் ஊருக்கு வரச் சில இடையூறுகள் ஏற்பட்டமையின் அவன் தன்னை வரைந்து கொள்ளுதல் நலம் என்ற விருப்பத்தால் தலைவி சில கூறல்.**

இராக்காலத்தில் வந்து போய்க் கொண்டிருந்த தலை வனுக்கு கீழ்க் கூறிய இடையூறுகளினால் வழக்கம்போல் வர இயல வில்லை. அதனால் தலைவியின் முகம் ஆதித்தனைக் காணாத் தாமரையென கூம்பிற்று. அதன் காரணத்தை அறிய தோழியின் மனம் விழைந்தது. அதையறிந்த தலைவி தோழியைப் பார்த்து, ''நீர் வேட்கையைத் தணித்துக் கொள்ள வந்தவர் போன்று நம் வீட்டை நோக்கி வந்த தலைவரைக் கண்டவுடன் உன்முகம் பின் வருவதை யறியாது நாணத்தினால் கவிழ்ந்தது. அக்குறிப்பினால் நம் களவை செவிலி அறிந்திருக்கக் கூடும் எனக் கருதுகிறேன். அன்றியும் நிலவு, கூகையின் ஒலி முதலியன அவரை இவண் வாராதவாறு தடுக்கின்றன. ஆதலின் நாம் இருவரும் அவர் ஊருக்குச் செல்ல லாமெனத் தோன்றுகின்றது. ஆயினும் அவர் ஊரை அவர் வெளிப் படையாகச் சொன்னாரில்லையே! இனி என் செய்வோம்,'' என வருந்தினள். இத்தலைவியின் துயரைக்கண்ட தோழியின் மனம் இரங்கிற்று. தோழியின் சொற்கள் தலைவர் இரக்கமற்றவர் எனப்பழித்தன. இதைப் பொறாத் தலைவி தன் ஆற்றாமையை அவர் அறியாமலிருந்ததற்குக் காரணம் தன் ஊழ்வினையே எனத் தன்னைத் தானே வெறுத்துக் கொண்டாள்.

**பத்தாம்நாள் செய்கை முடிந்தது.**

தலைவி அன்றிரவு தலைவனோடு இன்பந்துய்த்ததாகக் கனவு கண்டனள். விழித்தவுடன் அது பொய்யாயிற்று. அதனால் தலைவனைக் காணவேண்டும் என்னும் வேட்கை அவள் மேனியின் அழகு நலத்தைக் குலைத்தது. ஆகவே தலைவி தோழியை நோக்கி, ''என் நோயைத் தலைவர்க்கு உரைப்பார் யாரேனும் உளராயின் என் உயிர் தங்கும். உரைத்தவர்க்கும் புகழுண்டாகும்,'' எனப் பகர்ந்தனள். ''உன் துயர் தலைவர்க்குத் தெரியாததன்றே! வருகிறேன் எனப் பகர்ந்த வாக்கை அவரே பிறழ்ந்தாரெனின் பிறர் சொல்லக் கேட்பரோ! நீயே சென்று குறை யிரத்தல் நலம்,'' எனத் தோழி விடையிறுத்தனள். பலர் தன்னைக் கண்டு கூறும் அலர் மொழிகளும், தலைவன் வரும் வழியின் அருமையும் தலைவி மனத்தைப் பெரிதும் வருத்தின. ஆதலின் அவள் கழிகளில் உள்ள புள்ளினங்களை நோக்கி, ''நீங்கள் என் தலைவரைக் கண்டீரோ! அங்ஙனமாயின் துணையற்றுத் துன்புறும் எனக்கு ஒரு சொல்லேனும் கூறுதல் கூடாதோ? ஈதோ உங்களுக்கு என் மாட்டுள்ள அன்பு!'' எனப் பெரிதும் இறங்கினள். (திருவய்மொழி. 1-5 பதிகம் மற்றும் 2-1 பதிகம் இவற்றிற்கு உதாரணங்களாகும்.)

பின்னும் தலைவன் இருளின்கண் தன்னை நோக்கி வருதல் துன்பமெனத் தலைவிக்குத் தோன்றிற்று. ஆதலின் அவனை வாரா வண்ணம் தடுத்தல் நலமென்றும், அவள் தினைப்புனங்காக்க வருங்காலம் நெருங்கினமையின் அப்போது காணலாமென்றும், அவற்றைத் தலைவனுக்குத் தெரிவித்தல் நலமென்றும் தலைவி தோழிக்கு வற்புறுத்தினள். தலைவியின் மயக்கம் அவள் தமருக்கு அச்சத்தை யூட்டியது. அவளைப் பேய் தீண்டியதென்பது அவர்கள் எண்ணம். அதனால் சுற்றத்தார் வேலனைக் கொண்டு முருக வேளை வழிபட்டு உயிர் பலியிடுதலை மேற்கொண்டனர். அதைத் தடுக்கும் முயற்சியை மேற்கொள்ளுமாறு தலைவி தோழியை இறைஞ்சினாள். தலைவியை மணம் பேச வந்தவர் கூட்டம் நாளுக்கு நாள் மிகுந்தது. இச்செய்தியைத் தலைவனுக்குத் தெரிவிக்குமாறும், தலைவன் வரைவு விரும்புங்கால் தமர் தடுக்காமல் ஏற்றுக் கொள்ளுமாறும், இருதிறத்தாரையும் வசப்படுத்தத் தலைவி தோழியை வேண்டிக்கொண்டனள். (திருவாய்மொழி 4-6 பதிகம் வெறிவிலக்குத் துறையில் அமைந்துள்ளது. அவ்வாறே திருவாய்மொழி 8-9 பதிகம். தோழி அறத்தோடு நிற்றல் பதிகமாக அமைந்துள்ளது. இந்த இரண்டு



பதிகங்களும் இங்கு கூறப்பட்ட செய்திகளுக்கு இலக்கிய மேற்கோள்களாகக் கொள்ளலாம்.)

**பதினொன்றாம் நாள் செய்கை முடிந்தது.**

வரைதல் வேட்கை, அஃதாவது, இவ்வாறு இடையீடு பட்டதனாற் பத்தா நாள் தலைவி வரைதல் வேட்கையாற கூறுவது.

*''அச்ச முவர்த்த லாற்றா மையென*
*மெச்சிய வரைதல் வேட்கைமூ வகைத்தே.''*

என்னுஞ் சூத்திரவிதியால் வரைதல்வேட்கை மூவகைப்படும்.

**துறை:**

**202. தலைமகளைப் பாங்கி பருவரல்(துன்பம்) வினவல்:**

வண்டார் குழலி, நின் தாயர் தம்மாலுண்டாகிய முனிவோ? அல்லது நின் ஆயக்கூட்டத்தாரால் வந்த இடையூறுண்டோ? உன் மனத்திடை நிகழ்கின்ற துன்பம் யாதோ? சொல்வாயாக என்றவாறு.

**203. அருமறை(அரிய களவொழுக்கம்) செவிலி யறிந்தமை கூறல்:**

அருமறை செவிலி அறிந்தமை கூறல் என்பது, தலைவி யரிய களவொழுக்கத்தைச் செவிலி யறிந்தமை பாங்கிக்குக் கூறல்.

**204. தலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றல்:**

தலைமகன் வருந்தொழிற்கு அருமை சாற்றல் என்பது, தலைவி தலைமகன் வருந்தொழிற்கு அருமையைப் பாங்கிக்குக் கூறுதல்.

**205. தலைமகனூர்க்குச் செலவொருப்படுதல்:**

கரும்பு போன்ற மொழியினை உடைய கோமளமே! நம்மிடத்து இன்பத்தையுண்ட நம்முடைய பாதகர் இருக்கும் நகரம் வினவி இருவரும் உடன்சென்று அவர் தம்பாற் சேர்குவம், நீ யஞ்சலை என்றவாறு.

**206. பாங்கி யிறைவனைப் பழித்துரைத்தல்:**

அவர்தாம் அறிந்தவதனால் நெருப்பின் பொறிபோன்ற உயிர்ப்பையுடைய வெய்ய நாகம் ஈன்ற மாணிக்கத்தையும்

புதைக்கப்பட்ட இருள்செறிந்த நெறியில் வரப்பட்டவரது அருளைப் பெற நாம் இடையாமமாகிய வெள்ளத்திடையே நீந்துவம் என்றவாறு. அவரது அருளைப் பெறவேண்டி நாம் இறந்துபடாது துன்பப்படுவோம் எனவே, இயற்பழித்த லாயிற்று.

**207. இறைவி இறையோன்தன்னை நொந்தியற்பட மொழிதல்:**

இறைவி .......... இயற்பட மொழிதல் என்பது, பாங்கி இயற்பழித்தது பொருளாய்த் தலைவி இயற்பட மொழிதல். நம் ஊழ்வினையாதலால் அவர்மேற் குறையின்று என்றவாறு.

**இத்துணையும் பத்தாநாட் செய்தியென் றுணர்க.**

**208.கனவுநலிபுரைத்தல்:**

கனவு நலிபு உரைத்தல் என்பது, தலைவன் கனவிற் கூடினானாக, விழித்தபின்பு பொய்யாய்ப்போன துன்பத்தைப் பதினொன்றா நாள் பாங்கியுடன் தலைவி கூறல்.

**209.கவினழிபுரைத்தல்:**

கவின் அழிபு உரைத்தல் என்பது, விரகத்தால் தலைவி தன் நலனழிந்ததனைப் பாங்கியொடு கூறல்.

**210. தன் துயர் தலைவற் குணர்த்தல் வேண்டல்:**

தன் துயர் தலைவற்கு உணர்த்தல் வேண்டல் என்பது, தலைவி தன் துயரைத் தலைவற்கு அறிவிக்க வேண்டும் என்று பாங்கியொடு கூறல்.

**211. துன்புறல் பாங்கி சொல்லெனச் சொல்லல்:**

துன்புறல் பாங்கி சொல்லெனச் சொல்லல் என்பது, யான் துன்புறலைத் தலைவர்க்கு நீ சென்று சொல்லெனத் தலைவி கூறியதற்குத் தலைவியை நோக்கிப் பாங்கி சொல்லல்.

**212. அலர்பார்த்துற்ற அச்சக்கிளவி:**

அலர்பார்த்து உற்ற அச்சக்கிளவி என்பது, உற்றாருஞ் சொல்லும் அலரைக் கருதி அதனாலுற்ற அச்சத்தால் தலைமகள் கூறுஞ்சொல்.

(தொடரும்)



# பன்னிரு பாட்டியலும் ஆழ்வார்கள் அருளிச் செய்த அந்தாதி மற்றும் மடல் இலக்கியங்களுக்கான இலக்கணங்களும்

இதழ் 153இன் தொடர்ச்சி. ஆசிரியர்: மு. அருணாசலம்பிள்ளை.

நூல் கூறும் சில கருத்துக்களை இங்கு குறிப்பிடுதல் தகும். கணக்கு மேற்கணக்கு கீழ்க்கணக்கு என இருவகை எனப் பின்னால் (344-8) கூறுகிறது. பதினெண் கீழ்க்கணக்கு ஒழித்துப் பத்துப் பாட்டும், எட்டுத் தொகையும் மேற்கணக்கு என்பதற்கு இதுவே இலக்கணமாகும். ஆண் பிள்ளைக்கும் பெண் பிள்ளைக்கும் இந்நூல் கூறும் உவமைகள் (193-4), ஏனையவற்றையும் தழுவி விரிந்து, பின்னால் உவமானங்களை எடுத்துரைக்கும் தனி நூற் பிரிவாகப் பிரிந்தன (14 நூ.). உவமை கூறுமிடத்து, பெண்க ளுக்கும், ஆண் பிள்ளைகளுக்கும் இப்பாட்டியல் ஏழு பருவம் கூறுகிறது. ஆண்பாற் பருவம் வழக்கில் இல்லை. சில இடங்களில் வேறோர் மதம் என்று கூறிக் கொள்கிறது.

ஒரே கருத்தைச் சொல்லுகின்ற சூத்திரங்கள் இரண்டிரண் டாக நூலெங்கும் காணப்படுகின்றன. பின்வரும் எடுத்துக்காட் டுக்களைக் காண்க.

அந்தணர் சாதி (மறையவர் சாதி) சூ. 6,7:

*நறுமலர்த் திசைமுகன் ஈசன் நாரணன்*
*அறுமுகன் படைத்தன அந்தணர் சாதி.*

*திருமால் அரனே திசைமுகன் குமரன்*
*மரபிற் படைத்தன மறையவர் சாதி.*

இரண்டும் பொருள் ஒன்றே. ஆனால் இரண்டும் பரணர் பாடியன

என்பது போலக் குறிப்பு உள்ளது. இப்படியே அவிநயனார் பெயருள்ள இரு சூத்திரங்கள் (170, 171):

*வெள்ளையும் அகவலும் விருத்தமும் கலியும்*
*வஞ்சியும் எஞ்சா மங்கலம் பொருந்தும்.*

*வெள்ளை அகவல் விருத்தம் கலியே*
*வஞ்சி என்றிவை மங்கலப் பாவே.*

கதிப் பொருத்தம் கூறும் மூன்று சூத்திரங்கள் 19, 20, 21 காண்க; மூன்றும் அதே பொருள் கூறும். 20, 21 இந்திர காளியார், பரணர் என முறையே குறிப்பிட்டுள்ளன. 19 பெயர் விடுபட்டது போலும்; இத்தகைய எடுத்துக்காட்டுக்களை ஆராயும்போது, இரண்டும் ஒருவரே பாடியன அல்ல, வெவ்வேறு ஆசிரியர் பாடிய வேறு வேறு நூல்களிலிருந்து எடுக்கப் பெற்றவை, எப்படியோ பெயர்கள் விடுபட்டுப்போயின என்றுதான் கருத வேண்டியிருக்கிறது.

தமிழ்ச்சங்கப் பதிப்பில் 98 மிகைச் சூத்திரங்கள் அடிக் குறிப்பில் தரப்பட்டுள்ளன. முன் கூறியது போல, நூலிலேயே சூத்திரங்கள் மிகுதியாக இருப்பதால், இவையும் மூலத்தோடு சேர்ந்தவை என்று கொள்வதில் இழுக்கில்லை.

நூல் முழுமையும் நூற்பாவில் இயன்றிருப்பினும், கல்லாடனார் பெயரால் 11 குறட்பாக்கள் (61-71) இதனுள் வருகின்றன; ஒருகால் கல்லாடர் குறட்பாவில் ஒரு பாட்டியல் செய்திருந்தார் போலும்.

பாட்டியலானது, பாவியல் என்றும் வழங்கப் பெற்றது; பாட்டு-பா. ‘பாவியல் பாடப் பழியது முடியும்’ என்பது தொல்காப்பியனார் பெயரில் நவநீதப் பாட்டியல் உரை (21) காட்டும் ஒரு மேற்கோள்; கலாவியல் என்றே கல்லாடர் பாட்டியலை அது வழங்குகிறது; கல்லாடனார் கலாவியல், பொய்கையார் கலாவியல் என்ற தொடர்கள் காண்க. கவியியல் என்ற பாடபேதமும் உண்டு.

இந்நூலில் எழுத்தின் பிறப்புக்கு தெய்வங்கள் இவரிவர் என்று குறிப்பிடுவது பிற நூல்களில் காணப்படாத செய்தி.



இப்பகுதி பொய்கையார் பாட்டியலில் சொல்லப்பட்டுள்ளது. ஆசிரியர் ஓரிடத்தில் (149) பெயர்ப் பொருத்தத்தின் கீழ் ஒரு குறிப்புத் தருகிறார். பெயர்கள் எண் வகை-குலம், குடி, கோத்திரம், குணம், மணம், ஆணை, சிறப்பு, இயற்பெயர் என்பன. இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனி சூத்திரம் உள்ளது. மனப் பெயர் என்பதைக் குறிப்பிடு மிடத்து,

*மனப்பெய ராவன தனக்குத் தானே*
*எனக்கிது வேண்டும்என் றெய்தும் பெயரே.*

என்று சொல்லி, ‘இஃது இராசாக்கள் நாயன் அடியார் தோழன்’ என்று எழுதுகிறார். இதைப் பார்க்கும்போது, இது போல்வன தொகுப் பாசிரியர் எழுதியன என்றும், இவரே சில சூத்திரங்களைச் செய்து வைத்தார் என்றும் கருதத் தோன்றுகிறது.

**ஆசிரியர்**

இந்நூலில் தொகுத்துள்ள பாட்டியல் ஆசிரியர்களின் பெயர்கள் பின் வருவனவாகும்: அகத்தியர், அவிநயனார், இந்திர காளியார், கபிலர், கல்லாடர், கோவூர்கிழார், சீத்தலையார், செயிற்றியனார், சேந்தம் பூதனார், நற்றத்தனார், பரணர், பல்காயனார், பெருங்குன்றூர் கிழார், பொய்கையார், மாபூதனார் என்னும் பதினைவர். இவர்களுள் அவிநயனார் இந்திர காளியார் என்ற இருவரும் முத்தமிழ் இலக்கணம் செய்திருந்தார்கள். அவ்விலக்கணங்கள் தொல்காப்பியர் நெறியினின்றும் வேறுபட்ட நெறியினை உடையவை என்று உரைக் குறிப்புக்களால் அறிகின்றோம். இந்திர காளியார் எழுதிய நூல் இந்திர காளியம். இவரது இயற்பெயர், யாம..ந்திரர் என்று அடியார்க்கு நல்லார் கூறுகின்றார், செயிற்றியனார், நற்றத்தனார் என்ற இருவரும் சிறப்பான இலக்கண நூல் செய்திருந்தார்கள். கல்லாடர், பரணர், பொய்கையார், என்ற மூவரும் பெருஞ்சிறப்புடைய பாட்டியல் நூல்கள் செய்திருந்தார்கள். அப்படியே கபிலரும், பல்காயனாரும், பாட்டியலும் பிறதுறை இலக்கணங்களும் செய்திருந்தனர் போலும். மற்று, கோவூர் கிழார், சீத்தலையார், சேந்தம்பூதனார், பெருங்குன்றூர் கிழார், மாபூதனார், பன்னிரு பாட்டியலை அன்றி வேறிடத்தில் இலக்கண நூல் செய்ததாக வழக்கில்லை. இப்பெயர்கள் பிழையாக

எழுதப்பட்டனவோ என்று ஐயுறத் தக்கன. பரணர் பாட்டியல் என்பது பரணர் வருணர் என்றும் சொல்லப்படும். கல்லாடர் நூலும், பொய்கையார் நூலும் நவநீதப் பாட்டியல் உரையிலும், செயிற்றியம் பல்காயம் என்பவை யாப்பருங்கல உரையிலும் சொல்லப்படும். இவற்றால் அக்காலத்தில் மிகப் பலவான பாட்டியல் நூல்கள் வழக்கில் இருந்தனவென்று அறிகிறோம். அன்றியும் பாட்டியல் கலாவியலென வழங்கவும் பட்டது. பரணர், கபிலர், கோவூர் கிழார், பெருங்குன்றூர் கிழார், பொய்கையார், சேந்தம்பூதனார் என்போர் சங்க காலத்துப் புலவர்கள். சீத்தலையார், மணிமேகலை செய்த சீத்தலைச் சாத்தனார் ஆகலாம். சீத்தலை என்பது இவரது ஊர். அன்றியும் இந்நூலில் காட்டிய சூத்திரங்கள் சிலவற்றை வச்சனந்தி மாலை உரை ஆசிரியரும், நவநீதப் பாட்டியல் உரைகாரரும் எடுத்துத் தருகின்றனர். சில பாடலுக்கு வேறு ஆசிரியர் பெயர் சொல்லப்பட்டுள்ளதையும் காண்கிறோம். ஆசிரியர்களையும் அவர்கள் பெயருள்ள சூத்திரங்களின் தொகையையும் காட்டும் அட்டவணையொன்று பின்னே சேர்க்கப்பட்டுள்ளது.

**தொகுப்பாசிரியர்**

பன்னிரு பாட்டியல் ஒரு தொகுப்பு நூல் என்பது முன்னமே சொல்லப்பட்டது. ஒருகால் இவ்வாசிரியர் செய்த நூல்கள் எக்காரணத்தாலே இறந்துபோகவே, இப்பாட்டியல் தொகுத்த புலவர், கிடைத்த நூற்பாக்களை மட்டும் தொகுத்து இப்படியொரு நூலாக்கினாரோ என்று கருத இடமுண்டு. தொகுத்த ஆசிரியர் பெயர் வரலாறு எதுவும் விளங்கவில்லை. எனினும், இவர் சைவ சமயத்தினர் என்பதைச் சொற்களுக்குத் தெய்வமாக அட்ட மூர்த்தங்களைக் கூறுவதால் அறியலாம்.

*நீடிய மானன் திங்கள் நிலநீர்*
*சூரியன் வானம் அங்கி காற்றென*
*இயம்பினர் தெய்வ நலம்பெறு புலவர்.* *104*

*நீரே நிலமே வானே நீள்மதி*
*சீரிய மானன் செந்தீத் தெறுகதிர்*
*காற்றெனக் கிளர்ந்த கூற்றன என்ப.* *114*

(தொடரும்)

# திருமங்கையாழ்வார் பாசுரங்களின் விளக்கவுரையில் எடுத்தாளப்பட்டுள்ள உவமைகள்

*இதழ் 153இன் தொடர்ச்சி. கட்டுரையாசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.*

**31. ஆனைக் கன்று போலே.**

செங்காலமடநாராய்! இன்றேசென்று
திருக்கண்ணபுரம்புக்குஎன்செங்கண்மாலுக்கு*
என்காதல்என்துணைவர்க்குஉரைத்தியாகில்
இதுவொப்பதுஎமக்கின்பமில்லை* நாளும்
பைங்கானமீதெல்லாம்உனதேயாகப்
பழனமீன்கவர்ந்துண்ணத்தருவன் * தந்தால்
இங்கேவந்துஇனிதிருந்துஉன்பெடையும்நீயும்
இருநிலத்தில்இனிதின்பமெய்தலாமே.
*(திருநெடுந்தாண்டகம் 27)*

பரப்பை உடையதான கடற்கரைச் சோலையை உடைய, பிரிந்தார் இரங்கும் இடம் நெய்தல் நிலம் ஆகையாலே, கடற்கரையிலே தான் இருக்கிறபடியாலே, பைங்கானம் ஈதெல்லாம் என்கிறாள். ''என் செல்வம் முழுதும் உனக்குத் தருவன்'' என்கிறாள். இவள் உடைமை இரண்டு உலகங்களும் ஆதலின் உலகங்கள் இரண்டையும் கூடக் குறிக்கலாம். ''பொன்உலகு ஆளீரோ புவனிமுழுது ஆளீரோ' (திருவாய்மொழி 6-8-1) என்பர் அல்லரோ? உனதே ஆக - எனக்கும் உனக்கும் பொதுவாக அன்றி, உனக்கே உடைமையாம்படி தருவன். பழனமீன்- நீர் குறையாமல் இருத்தலின் மீன்கள் ஆனைக்கன்று போல இருக்கும் அல்லவோ?

**32. இடர்படுவார் இருந்த இடங்களுக்குத் தாமே நீர்ப்பாத்திரத்தைக் கொண்டு வந்து தாகம் நீங்கப் பருகும் நீரைக் கொடுப்பவரைப் போல.**

கொற்றப்புள்ளொன்றேறி மன்றூடேவருகின்றானென்கின்றாளால் *
வெற்றிப்போரிந்திரற்கும் இந்திரனேயொக்குமாலென்கின்றாளால் *

*பெற்றக்கால்அவனாகம்பெண்பிறந்தோமுய்யோமோ! என்கின்றாளால் **
*கற்றநூல்மறையாளர் கண்ணபுரத்தம்மானைக்கண்டாள்கொலோ?*
பெரிய திருமொழி 8-1-8

கொற்றப் புள் ஒன்றேறி மன்றூடே வருகின்றான் என்கின்றாளால் - சாதாரணப் பொது மனிதர்கள் தாகத்தால் இடர்ப்படுவார் இருந்த இடங்களுக்குத் தாமே நீர்ப்பாத்திரத்தைக் கொண்டு வந்து தாகம் நீங்கப்பருகும் நீரைக் கொடுப்பார்கள். அதுபோல எல்லாருக்கும் உதவும் ஒப்பற்றவன் ஊர்தியில் ஏறி எல்லாப் பொதுமக்களும் கூடியிருக்கும் இடத்திலே வருகிறான். ''இவனை யார் பற்றிக் கொண்டுபோகப் போகிறார்களோ? யார் கையில் எம்பெருமான் அகப்படப்போகிறானோ! என்று அறிகிலேன்'' என்கிறாள்.

**33. இடிவிழுந்தவர் உடனே உயிர்துறப்பது போல**

*ஏதுசெய்தால்மறக்கேன்? மனமே! தொழுதும்எழு **
*தாதுமல்குதடம்சூழ்பொழில் தாழ்வர்தொடர்ந்து * பின்*
*பேதைநின்னைப்பிரியேன் இனிஎன்று அகன்றானிடம் **
*போதுநாளும்கமழும் பொழில்சூழ்ந்தபுல்லாணியே.*
*(பெரிய திருமொழி 9-3-3)*

''பின் பேதை நின்னைப் பிரியேன் இனி என்று அகன்றான்'' - தன் பிரிவில் இவள் உருகி நைந்துவிடுவாள் என்னுமாறு கூடிப்பின் தன்னைச் சேய்மையன் ஆக்கிக்கொண்டான். நின்னை - ''பிரிந்தால் பின்னையும் கூடி மகிழலாம் என்ற மனஉறுதி உடையவரைத்தான் பிரியலாம். உன் மென்மையை நன்கு உணர்ந்தும் உன்னைப் பிரிவேனோ? பிரியேன் இனி'' என்று அகன்றான்; விரைவாகப் பிரிந்து விட்டால் இடி விழுந்தவர் உடனே உயிர் துறப்பதுபோல் இவள் உயிரைத் துறத்தலும் கூடும்'' என்று பார்த்துப் பிரிவு சிறிதுசிறிதாகச் செரிக்கைக்காக, மறுதலைமொழியால் பிரிவைப் பற்றிப் பேசினான். இவன் கலவிக் காலத்தில் பேசின வார்த்தை இது.

**34. இடையே இழந்ததை மீண்டும் கண்டாற்போல**

*நிதியினைப்பவளத்தூணை நெறிமையால்நினையவல்லார் **
*கதியினைக்கஞ்சன்மாளக் கண்டுமுன் அண்டமாளும் **



*மதியினைமாலைவாழ்த்தி வணங்கிஎன்மனத்துவந்த **
*விதியினைக்கண்டுகொண்ட தொண்டனேன்விடுகிலேனே.*
*(திருக்குறுந்தாண்டகம் 1)*

கண்டு கொண்ட - எம்பொருமானிடம் திருவெட்டெழுத்தை உபதேசம் கேட்டது ஆழ்வாருக்குக் கண்டாற்போல இருக்கிறது போலும், ஆழ்வார் ஆன்ம இயல்பிற்குரிய அறிவு தம்மிடம் பிறக்கப் பெற்றவர் ஆகையாலே பண்டே தம்மிடம் இருந்ததாய் இடையே இழந்ததை மீண்டும் கண்டாற்போல அவருக்குத் தோன்றியது, அவன் மால். நான் தொண்டன். இனி இதனை விடுவதற்கு வாய்ப்பு உண்டோ? எம்பெருமானுக்கு என் பக்கல் நட்புறவு இல்லை என்ன ஒண்ணாது. அடியேனுக்கு எம்பெருமான் பக்கல் ஈடுபாடில்லை என்ன ஒண்ணாது. இத்தகைய நிலை ஏற்பட்ட பிறகு யாதனைச்சொல்லி எம்பெருமான் தொடர்பை விடுதல் இயலும்?

**35. இடையே வைக்கப்பட்ட சுவர்போல**

*ஏழைஏதலன்கீழ் மகனென்னாது*
*இரங்கி மற்றவற்குஇன்னருள்சுரந்து**
*மாழைமான்மடநோக்கிஉன்தோழி*
*உம்பிஎம்பியென்றொழிந்திலை* உகந்து*
*தோழன்நீஎனக்குஇங்கொழியென்ற*
*சொற்கள்வந்து அடியேன்மனத்திருந்திட **
*ஆழிவண்ண! நின்னடியிணையடைந்தேன்*
*அணிபொழில்திருவரங்கத்தம்மானே!*
*(பெரியதிருமொழி 5-8-1)*

**பாசுர நுழைவாயில்:** இவ்வாழ்வார் அறிவுநூல்களைக் கற்ற சுவட்டினாலோ தவத்தினாலோ, சித்து-அசித்து-ஈசுவரன் என்ற மூன்று தத்துவங்களையும் உள்ளவாறு கண்டு அறிந்தவர் அல்லர்; எம்பெருமானுடைய திருவருளினாலேயே மூன்று தத்துவங்களையும் உள்ளவாறு உணர்ந்தவருள் ஒருவராவர். மேலாய பரம்பொருளின் சிறப்பியல்பினை உள்ளவாறு அறிதலாவது: திருமகள்கேள்வனாய், எல்லா இழிவுகளுக்கும் பகைவனாய், எல்லா நற்பண்புகளையும் உடையவனாய், அந்நற்பண்புகளையும் விளக்கிக் கொண்டிருக்கும் எழில் மென்மை முதலியவற்றிற்கு இருப்பிடமாய் அமைந்த இறைமைநலம் சான்ற வடிவினை உடையவனாய், இவ்வுலகம் வீட்டுலகம் என்ற

இருவகைச் செல்வங்களுக்கும் தலைவனாய், எல்லையிட முடியாத இன்பனாய் இருக்குமதனை அறிதலாம். தன் இயல்பினை உள்ளவாறு அறிதலாவது; எம்பெருமானைத் தவிரப் பிறர்எவருக்கும் உடைமை அல்லாததாய்த் தன்னைக் காத்துக்கொள்ளும் உரிமையின்றி எம்பெருமானுக்கே இட்ட வழக்காம்படி இவ்வான்மா இருக்க வேண்டியது என்பதனை அறிதலாம். அறிவற்ற மூலப்பகுதியின் இயல்பினை உள்ளவாறு காண்டலாவது; ஆன்மா, தன்இயல்பையும் மேம்பட்ட இறைவனுடைய சிறப்பியல்பையும் உள்ளவாறு கண்டு அறிய ஒண்ணாதபடி, இடையே வைக்கப்பட்ட சுவர் போலத் தடுத்துநின்று, ஆன்மாவுக்குப் பகையாயிருத்தலையே தன் சிறப்பியல்பாகக் கொண்டிருப்பது என்று அறிதலாம். மூலப் பகுதியாகிய பகைமை நீக்கி இவ்வறிவுப்பொருளாகிய ஆன்மா மேம்பட்ட பரம்பொருளை அடையும்போது அதற்கு ஏற்றதாயிருப்பதொரு வழியினைக் கைக்கொள்ளவேண்டுமன்றோ? சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூன்றன் சிறப்பியல்புகளையும் எண்ணிப்பார்த்தால் இறைவனையே பற்ற வேண்டும்.

**36. இந்த மலையில் மேகம் படிந்திருக்குமென்றால் மழை தவறாது பெய்யும் என்று இருக்குமாப்போலே.**

*முளைக்கதிரைக்குறுங்குடியுள்முகிலை, மூவா*
*மூவுலகும்படந்துஅப்பால்முதலாய்நின்ற **
*அளப்பரியஆரமுதைஅரங்கம்மேய*
*அந்தணனை அந்தணர்தம்சிந்தையானை **
*விளக்கொளியைமரதகத்தைத்திருத்தண்காவில்*
*வெஃகாவில்திருமாலைப்பாடக்கேட்டு **
*வளர்த்ததனால்பயன்பெற்றேன்வருகவென்று*
*மடக்கிளியைக்கைகூப்பிவணங்கினாளே.*
*(திருநெடுந்தாண்டகம் -14)*

குறுங்குடியுள் முகிலை - இந்த மலையில் மேகம் படிந் திருக்கிறது என்றால் மழை தவறாது பெய்யும் என்று இருக்குமாறு போல, திருக்குறுங்குடியிலே நின்றான் என்றால் உலகமெல்லாம் உய்யும் படியாய் அன்றோ இங்கு உள்ளான்? உள்முகிலை - வந்து மழை பெய்துவிட்டு நீங்கிப் போகும் மேகம் போலல்லாமல், குறுங்குடியில் எம்பெருமான் நிலையாக உள்ளான். **(தொடரும்)**



## துணுக்குத் தோரணம்

From

Thiru. V. Rajanarayanan,
Secretary, SriVaishnava Maha Sabha,
"Narayanadhanam"
43, Anna Nagar, Chennai-600 040

To

HER EXCELLENCY. Tmt.PRATIBHA PATIL,
PRESIDENT OF INDIA,
RASHTRAPATHI BHAVAN,
NEW DELHI. - 110 004.

Your Excellency,

Sub: H.H President of India, Secretariat
SriVaishnava Maha Sangam - Reg

Ref: H.H. President of India, Secretariat, New Delhi.

1. Letter No: Dy. No: P2/B/160411063
2. Govt. of Thamizh Nadu L.No-15432/AN 1-1/11-1
Dated 22.07.2011.

***

We are grateful to your Excellency for taking appropriate action on the Sangam's 2011 conference resolutions and using your good offices for the same. The Sangam places on record on behalf of the SriVaishnava community the sincere heart felt thanks & appreciation for the same.

**However the Sangam also wants to place on record the reply given by the office of the commissioner H.R.&C.E. Tamilnadu is not satisfactory, on the other hand they are only trying to give a wrong picture.**

**The sangam's resolutions and suggestions are only intended for the welfare of the country. If the commissioner is really interested he would have given a reply when a copy of the resolution was sent to them earlier to do the needful. On the other hand the commissioner's office has now only woken up and they are trying to give evasive answers.**

The Sangam once again thanks Her Excellency for the yeoman services rendered in building the Nation and in respecting the feelings of the SriVaishnava Community.

Thanking you,

Always At Your Service,

(V. RAJA NARAYANAN)

Copy to:

1. Office of the President Secretariat,
   Rastrapathi Bhavan, New Delhi.

2. Secretary, Hindu Religious & Charitable Endow ment Board, Fort St George, Chennai - 600 009.

3. Commisioner, Hindu Religious & charitable Endowment Board, Mahathma Gandhi salai, Nungambakkam, Chennai-600 034.



**ஆசிரியர் குறிப்பு:**

இந்துசமய அறநிலையத்துறையினரின் பதில் கீழே தரப் பட்டுள்ளது. விலைமோரில் வெண்ணெய் எடுப்பதைப் போன்றது தான் இந்துசமய அறநிலையத்துறையினரிடமிருந்து முழுமையான பதிலைப் பெறுவது என்பது. பூசி மொழுகும் கலையில் கை தேர்ந்தவர்கள் இந்தத்துறையைச் சார்ந்த அதிகாரிகள். அரசவையில் மன்னர் அமர்ந்து கொண்டு மந்திரிகளைப் பார்த்து, 'மந்திரிகளே மக்கள் நலமுடன் இருக்கிறார்களா? மாதம் மும்மாரி பொழிகிறதா? என்று கேட்பாராம். உடனே மந்திரிகள் அனைவரும் மன்னா! 'தங்கள் ஆட்சியில் எந்தக் குறையும் இல்லை. மாதம் மும்மாரி பெய்து கொண்டிருக்கிறது' என்பார்களாம். அதைப்போலத்தான் கீழே காணப்படும் **இந்த அறம் நிலையாத் துறையின் பதில்கள்.**

தீர்மானம் 11, தீர்மானம் 13 ஆகியவற்றிற்கான பதில்கள் மழுப்பல் பதில்கள். நடைமுறையில் வசூல் வேட்டையில் ஈடுபட்டிருக்கும் இந்தத் துறையின் பேராசை காரணமாக பெரிய பெருமாள் தற்போது மாலை 3 மணிக்குத்தான் மதிய அமுதுபடியான 'பெரியஅவசரம்' கண்டருளுகிறார். திருக்கோயிலில் எல்லாத் துறையிலும் ஊழலும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கு ஒவ்வாத ஆசார அநுஷ்டானங்களும் காணப்படுகின்றன. திருமடைப் பள்ளியில் தளிகையில் ஈடுபட்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களில் சிலர் பஞ்சகச்சம் கட்டிக்கொள்வதோ, சிகையுடன் காணப்படுவதோ, நெற்றியில் திருமண்காப்பு அணிந்து கொள்வதோ கிடையாது. இதை ஒரு முறையீடாகச் செய்தால் சிலநாட்கள் நெற்றியில் திருமண்காப்பு இருக்கும். இடுப்பில் பஞ்சகச்சம் இருக்கும். அதாவது நான்கு நாட்களுக்கு மட்டும்தான். பிறகு பழைய நிலைதான். அமுதுபடிக்கு உபயோகப்படுத்தப்படும் பொருட்கள் தரம் தாழ்ந்தவை. நம்பெருமாள் புறப்பாடு கிராமக் கோயில்கள் போல எந்தவிதக் காலநியதிக்கும் உட்பட்டதல்ல. வாகனங்கள் பொலிவு இழந்து காணப்படுகின்றன. புறப்பாடு காலங்களில் கூட அவை சுத்தம் செய்யப்பட்டு மெருகு ஊட்டப்படுவதில்லை. பெரியகோயில் நிர்வாகம் பல்வகையிலும் (அம்மாவின் தொகுதி யில் அமைந்துள்ள கோயில்) சீரழிக்கப்பட்டுள்ளது. இந்தக் குறைகளைப்பற்றி யாருக்கும் கவலையில்லை. சென்றவருடம் உண்டியல் வசூல் X என்றால் இந்த வருடம் X+25 சதவிகிதம் கூடுதல் என்றால் அவரே சிறந்த செயல் அலுவலர். வசூல்! வசூல்!! வசூல்!!! இந்து திருக்கோயில்களை வைத்து வியாபாரம் நடத்துகிறது அரசாங்கம்.

ஆணையர் அலுவலகம்,
இந்துசமய அறநிலையத்துறை,
சென்னை-34.

ந.க.எண்.42354/2011/ஐ1 நாள்.23.4.2012

**அய்யா,**

**பொருள்:** மேதகு குடியரசு தலைவர் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட மனு-ஸ்ரீ வைணவ மகா சங்கம் - தொடர்பாக.

**பார்வை:** 1. மேதகு குடியரசு தலைவரின் தலைமைச் செயலகம், புதுடில்லி கடித எண். Dy. No: P2/B/160411063, நாள் இல்லை.

2. அரசு க.எண். 15432/அநி1-1/11-1 நாள் 22.07.2011.

***

பார்வை 2இல் காணும் அரசு கடிதத்துடன் பெறப்பட்ட ஸ்ரீவைணவ மகா சங்க செயலரின் மனுவில் குறிப்பிட்டுள்ள பெறப்பட்ட தீர்மானங்கள் 1 முதல் 101 முடியகுறிப்பிடப்பட் டுள்ளதில் இத்துறையைச் சார்ந்த கீழ்க்காணும் தீர்மானங்கள் மீது கீழ்க்காணும் விவரம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**தீர்மானம் எண்: 11.**

This Conference requests the Government of Tamilnadu and H.R.&C.E. Department to Honour the "Bhajanai Ghosti's: who are rendering Bhajan's at the time of "Brahmotsavam" at the temples in par with the "Ghosti's Honour".

இத்துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பெரிய திருக்கோயில்களில் நடைபெறும் பிரம்மோற்சவத்தில் பஜனை செய்யும் பஜனை கோஷ்டிகளுக்கு அந்தந்த திருக்கோயில் நிர்வாகத்தால் மரியாதை செய்யப்பட்டு வருகிறது.



**தீர்மானம் எண்: 13.**

This Conference requests the Government of India & other State Government to protect famous temples with Heritage, which are getting destroyed due to lack of maintenance and improper usages. The temple at Kalahasthi, Srirangam, Azhagar Koil and Perumal Pattu are some of the examples.

தமிழ் நாடு அரசு கட்டுப்பாட்டில் உள்ள பழமைவாய்ந்த ஸ்ரீரங்கம் மற்றும் அழகர்கோயில் நல்ல முறையில் பராமரிக்க கால முறைப்படி அந்தந்த திருக்கோயில் நிர்வாகத்தினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**தீர்மானம் எண்: 14.**

This Conference requests to take an immediate action in a "war footing manner" to protect the Temples.

திருக்கோயில் பாதுகாப்பு நலன்கருதி முன்னாள் இராணுவத் தினர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் அனைத்து சன்னதிகளிலும் கள்வர் எச்சரிக்கை மணி பொறுத்தப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. திருக்கோயில்கள் பாதுகாப்புக்கும், பராமரிப்புக்கும், அவ்வப்போது திருப்பணி மேற்கொண்டு குடமுழுக்கு நடத்திட அனைத்துவித நடவடிக்கைகளும் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

**தீர்மானம் எண்: 28.**

This Conference suggests that several temples are closed to worship on account of non-availability of hereditary Archagas, some caste oriented Archagas have left the place temporarily or permanently to seek for their livelihood to distance places, in such temples the Archagas trained at the Govt. Archaga School can be appointed and the worship can be restored.

அர்ச்சகர் பயிற்சி பள்ளியில் பயின்றவர்களுக்கு நியமன உத்தரவு வழங்க தற்போது இயலாத நிலை உள்ளது. உச்ச நீதி

மன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நிலுவையில் உள்ளது.

**தீர்மானம் எண்: 29.**

This Conference requests the archagas at the temple to strictly follow the "Agama Niyamam" and to wear with the traditional dress and style at the workshipping places.

திருக்கோயிலில் பணிபுரியும் அர்ச்சகர்கள் ஆகம விதி களின்படி அர்ச்சனை செய்து வருவதையும் திருக்கோயில் வளாகத்தில் மரபின் அடிப்படையிலேயே ஆடை உடுத்துவதையும் திருக்கோயில் நிர்வாகம் ஒழுங்கு படுத்துகிறது.

**தீர்மானம் எண்: 30.**

This Conference places its displeasure as the trained students of Govt. Archagas Schools are not given the appointment till today.

அனைத்து, சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற தமிழக அரசு பிறப்பித்த ஆணையை எதிர்த்து ஆதிசைவ சிவாச்சாரியார்கள் நலச்சங்கமும் தென்னிந்திய திருக்கோயில் அர்ச்சகர்கள் பரிபாலன சபையும் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளனர். இவ்வழக்கில் அரசு தாக்கல் செய்துள்ள எதிர் வாதுரையில் மேற்படி பயிற்சி நிலையங்களில் முறைப்படி பயிற்சி பெறவே மாணவர்கள் சேர்க்கப்பட உள்ளனர் என்றும் இவர்களை திருக்கோயில்களில் அர்ச்சகர்களாக நியமிக்கும் உத்தேசம் இல்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உச்ச நீதி மன்றத்தில் இவ்வழக்குகள் மீதான விசாரணை நிலுவையில் உள்ளது.

**தீர்மானம் எண்: 31.**

This Conference requests the Govt. of Tamilnadu to give postings to the students of Govt. Archagar School immediately as they have completed their course and waiting for more than two years.



உச்ச நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. வழக்கு முடிந்து, பெறப்படும் தீர்ப்புரையின் அடிப்படையிலேயே நட வடிக்கை மேற்கொள்ள இயலும்.

**தீர்மானம் எண்: 32.**

This Conference resolves to request the Hon'ble Chief Minister and the Commissioner of HR&CE of Tamilnadu to make arrangements, in many of the Divya Desams the traditional way of worship of "Tamizh Vedham" of "Nalayira Divaya Prabandham: is not conducted due to the non availability of people of caste oriented "Gosties" Even at such places the service of "Nalayira Divya Prabandha Sevai" should be restored without the discrimination of caste.

தமிழ் நாட்டில் உள்ள அனைத்து திவ்ய தேசங்களும் இத்துறையின் கட்டுப்பாட்டில் இயங்கவில்லை. மேலும் கட்டுப் பாட்டில் உள்ள திவ்ய தேசங்களில் அந்தந்த திருக்கோயில் பழக்க வழக்கங்களின் அடிப்படையில் நாலாயிர திவ்ய பிரபந்த சேவை நடைபெற்று வருகிறது.

**தீர்மானம் எண்: 37.**

This Conference resolves and requests the Hon'ble Chief Minister of Tamil Nadu and HR&CE Department to restore the traditional "Araiyar Sevai" at Thiruvallikeni enabling the Thamizh Custom of Worship and Services rendered to Lord in an unique way.

அனைத்துத் திருக்கோயில்களிலும் (வைணவ திருக் கோயில்) அரையர் சேவை இல்லை. திருக்கோயில்களின் பழக்க வழக்கங்களுக்குட்பட்டு மட்டுமே மேற்படி அரையர் சேவை உள்ளது. எனவே திருவல்லிக்கேணி திருக்கோயிலில் அரையர் சேவை இல்லை.

**தீர்மானம் எண்: 38.**

This Conference requests the Commissioner of HR&CE to make arrangements for worship the Sannadhi's at Thiruvallikeni of

Sri Ramanuja, Sri Manavala Mamunigal, and Lord Mannadhar the deity of the Tiruppathi in all days which are closed & never opened. When enquired it is said that there is no archagas. The new archagas can be appointed from the Govt. Archaga School & can be utilized in such temples and sannathis.

பெரிய திருக்கோயில்களில் உள்ள ஒவ்வொரு சன்னதிகளுக்கும் தனித்தனியே அர்ச்சகர்கள் நியமனம் செய்யப் படுவதில்லை. இரண்டு சன்னதிகளுக்கு ஒரே அர்ச்சகர் பணி செய்து வருவார் மேலும் முக்கிய சன்னதிகளில் உள்ள சுவாமிகளுக்கு முக்கிய திருவிழா நாட்களில் பக்தர்களுக்கு தரிசனம் செய்து வைக்க தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும். மேலும் எந்த சன்னதிகளும் மூடி வைப்பது கிடையாது.

**தீர்மானம் எண்: 39.**

This Conference places on record the Thiruppavai competitions held at Arulmigu Sri Parthasarthy Swamy Thirukoil which encourages younger Generation.

தமிழ் நாட்டில் உள்ள பெரிய திருக்கோயில்களில் ஒவ்வாரு ஆண்டும் மார்கழி மாதங்களில் திருப்பாவை மற்றும் திருவெம் பாவை போட்டிகள் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டு வருகிறது.

**தீர்மானம் எண்: 40.**

Sri Nammazhwar Sannidhi at Sri Parthasarathy Swamy Thirukoil is being used as "Vahana Mantapam". Which is highly condemnable. This conference requests the authorities to immediately to restore the sannidhis for devotees worship and to put a Board highlighting the Sannidhi.

திருக்கோயில் செயல் அலுவலருக்கு உரிய நடவடிக்கை மேற்கெள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**தீர்மானம் எண்: 41.**

This Conference also requests the Executive Officer



Arulmigu Parthasarathy Swamy, Thirukoil at Thiruvallikkeni to repaint the Pasurams with the pictures in front of the Sannadhis as before the samprokshanam was held.

உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**தீர்மானம் எண்: 43.**

This Conference requests the Govt. of Tamil Nadu and HR&CE to take safety arrangement to avoid robbery and murders at the temples.

திருக்கோயில்களில் பகல், இரவு காவலர்களும் திருக் கோயில் பாதுகாப்புப்படையினரும் பணிபுரிந்து வருகின்றனர். முக்கிய திருக்கோயில்களில் களவு எச்சரிக்கை மணி கண்காணிப்பு கேமிராக்கள் பொறுத்தப்பட்டுள்ளது. இதர திருக்கோயில்களிலும் களவு எச்சரிக்கை மணிபொருத்தத் துறையால் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**தீர்மானம் எண்: 44.**

This Conference requests the Govt. of Tamil Nadu and HR&CE Department to issue proper guidelines in the appointment of Executive officer, trustees who must possess and be a person with the qualification of accepting the principles the sentiments the traditions and the customs of the temples.

நிர்வாக அதிகாரிகள் மற்றும் அறங்காவலர்கள் இந்து சமய அறநிலையத்துறை சட்டவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள தகுதி களின் அடிப்படையில் நியமனம் செய்யப்படுகின்றனர்.

**பாஞ்சஜன்யம் ஆசிரியரின் சிறப்புக் குறிப்பு:**

'இந்துசமய அறநிலையத்துறையினரின் பகற்கொள்ளை. புள்ளி விவரங்களுடன்' என்ற நூல் வெளியீடு பற்றி இதழ் எண்கள் 155, 156, 157 மற்றும் 158 ஆகியவற்றில் செயல் அலுவலர் நியமனம் குறித்து விரிவான குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. **மேலும் 'திருடனும், தலையாரியும் ஒருவனேயானால் ஊரைக்**

**கொள்ளையடிப்பது மிகவும் சுலபம்' என்ற பழமொழிக் கிணங்க செயல் அலுவலரும் தக்காரும் ஒரே நபரே. ஏன் ஊரில் யாருமே இல்லையா? இந்த அநியாயத்திற்கு துணை போகின்றது அரசும்.**

**தீர்மானம் எண்: 48.**

This Conference requests the Govt. of Tamil Nadu to reorganize "Thirukoil Variam" to function a war footing manner and in a useful way.

''திருக்கோயில் வாரியம்'' அமைப்பது அரசின் கொள்கை முடிவாகும்.

**தீர்மானம் எண்: 51.**

This Conference resolves to request the Govt. of Tamil Nadu on a war footing Movement to retreive the properties belonging to temples to steamline the temple economy. This conference also requests the HR&CE to publish the names of persons those who are in arrears to the temples.

திருக்கோயில் நிலங்கள் கண்டறியப்பட்டு திருக்கோயில் வசம் எடுக்கப்பட்டு வருகிறது. திருக்கோயிலுக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகைகள் வசூலிக்கப்பட்டு வருகிறது. நிலுவைத்தொகை உள்ளவர்களின் பெயர்களை திருக்கோயிலில் அறிவிப்புப்பலகைகளில் வெளியிட அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**பாஞ்சஜன்யம் ஆசிரியரின் சிறப்புக் குறிப்பு:**

நாட்டை இராவணன் ஆண்டாலும், இராமன் ஆண்டாலும் திருக்கோயில்களுக்கு விடிவு காலம் வரவேண்டுமானால் இந்துசமய அறநிலையத்துறைச் சட்டம் திரும்பப் பெறவேண்டும். கோயில் நிலங்களை கொள்ளையடிப்பதில் நாட்டை ஆளும் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒரே கொள்கையைத்தான் பின்பற்றுகின்றன. Swiss Bankகளில் கோடிக்கணக்கில் கறுப்புப் பணத்தை வைத்திருப்பவர்கள் பட்டியலை வெளியிடவேண்டுமென்று பாரதீய ஜனதா கட்சி மத்திய அரசிடம் போராடிக்கொண்டிருக்கிறது.

(இதன் தொடர்ச்சியை பக்கம் 7இல் கண்டு கொள்க.)



## "The song sung by some individual"- என்று திருமங்கை ஆழ்வாரைக் குறிப்பிட்டோரைக் குறித்த ஓர் அடியவரின் மனக்குமுறல்

கட்டுரை ஆசிரியர்: பெரியநம்பி K. ஸ்ரீநிவாஸன், திருக்குறுங்குடி.

**இதழ் 154இன் தொடர்ச்சி.**

1938ஆம் ஆண்டு வரை திருக்குறுங்குடியைச் சார்ந்த வானமாமலை அய்யங்கார் ஸ்வாமி, திருமாலிருஞ்சோலைமலையில் ஜீயராக எழுந்தருளியிருந்தார். அப்போது அடியேனுடைய திருத்தகப்பனாரின் சிறிய தாயார் அங்கு அம்மையார் கைங்கர்யம் ***(செல்வம் இருந்தும் குழந்தை இன்மை, தனி இருப்பு காரணமாக)*** செய்து வந்தார். இந்த ஜீயர் ஸ்வாமி பரமபதித்த பிறகு அந்த ஸ்வாமியின் திருவத்யயனம் அவரது பூர்வாச்ரம திருக்குமாரர் ஸ்ரீ.அழகர் அய்யங்காரால் நடத்தி வைக்கப்பட்டது. ஆழ்வார் திருநகரியைச் சார்ந்த தெலுங்கு ஸ்ரீவைஷ்ணவர் (வானமாமலை மடத்து சிஷ்யர்) திருமாலிருஞ்சோலை ஜீயரானார். அழகர் கோயிலில் ஆலயப்ரவேசம் செய்வதற்கான ஏற்பாடு தீவிரமாயிற்று. ஹரிஜன ஆலயப்ரவேசமும் நடைபெற்றது. அப்போது தான் நெல்லை மாவட்டம் வானமாமலை மடத்தின் 27ஆவது பட்டம் ஜீயர் சின்ன ராமானுஜ ஜீயர் ஸ்வாமி (மிகச் சிறந்த தர்க்க வித்வான். வித்வத் தேஜஸ்ஸூடன் திருமேனி தேஜஸ்ஸும் நிரம்பப்பெற்றவர்.) ஆஸ்தானத்தில் எழுந்தருளிய பிறகு, இனி அழகர் கோயிலில் எப்படி கைங்கர்யம் செய்வது என அந்த வானமாமலை ஜீயர் ஸ்வாமியிடம் அழகர் கோயில் ஜீயர் ஆலோசனை கேட்க, ''இனி அங்குப் பணி புரிவது தகாது'' என்று அழகர் கோயில் ஜீயருக்குத் தெரிவிக்க, அவரும் ராஜினாமா செய்துவிட்டதால் அழகர் கோயில் ஜீயர் ஸ்தானம் அன்றோடு பூர்த்தி செய்யப்பட்டு விட்டது. அதன்பிறகு, திருமாலிருஞ்சோலையில் எந்த ஜீயரும் எழுந்தருளியிருக்கவில்லை.

**(பாஞ்சஜன்யம் ஆசிரியர் குறிப்பு:** ***திருமாலிருஞ்சோலையில் ஜீயர் ஒருவர் எழுந்தருளியிருந்தது பற்றிய விபரங்களை தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் கேட்டபோது, ''இந்தத் திருக்கோயிலில் ஜீயர் ஒருவர் எழுந்தருளி யிருந்தது பற்றிய எந்த ஆவணங்களும் கோப்புகளில் காணப்படவில்லை என்று அந்தக் கோயில் செயல் அலுவலர் பதில் தந்துள்ளார். இந்துசமய அறநிலையத்துறையின் நிர்வாகத் திறமை***

*யின்மைக்கு இது ஓர் எடுத்துக்காட்டு. இது பற்றிய முழுமையான செய்திகள் 2012 செப்டம்பர் மாதத்தில் வெளிவரவுள்ள இந்துசமய அறநிலையத் துறையின் ''மோடிமஸ்தான்'' வேலைகளும் பகற்கொள்ளைகளும் என்ற புத்தகத்தில் இடம்பெறும்.)*

ராஜினாமா செய்த ஜீயரும் ஆழ்வார் திருநகரிக்குச் சென்று அங்கேயே நித்யவாஸம் கொண்டார். ''ஆழ்வார் ஸந்நிதியில் மாதுகரமாக வழங்கப்பட்ட நித்ய ப்ரஸாத ஸ்வீகாரத்துடன் அற்றபற்றருகந்த தனிமை யில் எழுந்தருளியிருந்தார். பட்டாபி ஜீயர் ஸ்வாமி என்பது அவருடைய திருநாமம். 1964ஆம் ஆண்டு திருவரங்கம் ஸ்ரீரங்க நாராயணஜீயர் ஸ்வாமி ஸ்தானத்தில் எழுந்தருளியிருந்தார். இளமையிலிருந்தே அடியேனை நன்கறிந்தவர். அப்போது அடியேன் அரியலூர் 'ஸ்டேட் பாங்கில்' பணிபுரிந்து வந்தேன். ஞாயிறுதோறும் திருவரங்கன் ஸேவை, உறவினர்களான பெரியநம்பி திருமாளிகை விருந்துகளுடன், எங்களது திருக்குறுங்குடி மடத்திற்கென ஸ்ரீமான் பராங்குச ராமானுநுஜதாஸர் (ஸ்ரீவரயோகி ஸ்வாமியுடன்) இணைந் திருந்து கருத்து வேற்றுமை காரணமாக கோர்ட் வரை சென்றவர். கோயில் தென்னாசார்ய ஸம்ப்ரதாய சபைத் தலைவராக இருந்த ஸ்ரீ.திருவேங்கடராமானுஜதாஸரின் தாய்மாமன்) செட்டில் மெண்டாக எழுதிக் கொடுத்திருந்த கீழ உத்தரவீதி 169எண்ணில் மிகப் பெரிய வீடு. ''ரங்க யாத்ரா, தினே தினே'' எனச் சொல்ல வைத்த காலம். அதற்காக திருக்குறுங்குடி மடத்தின் ஆளுமைக்குட்பட்ட இந்தத் திருமாளிகையில் அடியார்கள் பலர் தங்கியிருந்து ஸ்ரீரங்கநாதனை தரிஸித்து வந்தனர். இந்த இடம் ஆஸ்திக ச்ரேஷ்டராகத் திருக்குறுங்குடி வாழ் ''விமானார்ச்சன கல்பலக்ஷ ணங்களைத் தலைகீழ்ப்பாடமாகக் கற்று நிற்பதோடன்றில், புதினம் படைக்க விரும்பும் ஸ்வாமியும்'', ''ஹிட்லர்'' ஸ்வாமியும் சேர்ந்து ஒரு Trust Deed- அதுவும் ஒரு மாடாதிபதிக்கு திருமடத்திற்காக மடம் கட்டிக் கொள்ள எழுதிக் கொடுத்த Settlement Deed மூலம் திருமடத்திற்கு ஸமர்ப்பித்த இடத்தில் - அடுக்கு மாடிக் கட்டிடம் கட்டுவதற்கு வழி செய்தனர். வேடுபறி உத்ஸவத்தில், ''நம் பண்டு பண்டாரங்கள் எல்லாம் சில கள்ளர்களாலே பறி போச்சுது'' என நம்பி எம்பெருமானிடம். 'நம்பி செய்வார்' விண்ணப்பிப்பார். அது இன்று உண்மையாகி விட்டது.

ஆனால் ''பறிபோன பதார்த்தங்கள் எல்லாம் ஸ்ரீபண்டாரக் கணக்குப்படி ஒப்புவிக்கிறோம் என்று ஆழ்வார் எழுந்தருளியிருக்கிறார்'' என்று விண்ணப்பித்து நிற்பதும் இன்று தான். ஆனால் திருவரங்கத்தில் கீழை உத்தர வீதியில் 169 மற்றும் 170 எண்கள் கொண்ட இல்லம் எங்களது கனவு இல்லங்களாகி விட்டன! ''அமைவுடை நாரணன் மாயையை அறிபவர் யாரே!'' என ஆழ்வாரே கலங்கியுள்ளபோது நம் நிலை என்ன?

*(திருவரங்கத்தில் பட்டாபி ஜீயர் ஸ்வாமி ஸ்ரீரங்க நாராயண ஜீயர் மடத்தில் எழுந்தருளியிருந்த காலத்தில் அவருக்கு உசாத் துணையாக இருந்தவர்கள் ஸ்ரீ.உ.வே. அரையர் சடகோபாசார்யர் ஸ்வாமியும் அவரது ஜ்யேஷ்ட குமாரரான அரையர் ஸ்ரீ.உ.வே. நாதமுனி ஸ்வாமியும் ஆவர்.)*

சில தினங்களுக்கு முன்பு பெரிய திருவத்யயன உத்ஸவத்தன்று ''எங்ஙனேயோ'' மட்டும், பாசுரம், அபிநயம், வ்யாக்யானத்துடன் நம்பி திருமுன்பு அரையரால் ஸேவிக்கப் பட்டது. இதுபோலச் சிறிய திருவத்யயன உத்ஸவம் (பகல் பத்து) ''அக்கும்புலியனதளும்'' (பெரியதிருமொழி 9-6-1) பாசுரம், அபி நயம், வ்யாக்யானத்துடன் நம்பி திருமுன்பு அரையரால் ஸேவிக்கப் பட்டது. இவ்வண்ணம் சிந்தை எல்லாம் நம்பி அழகிலும், இவ்வை பவங்களிலும் மேலாக ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ ஸ்வாமியோடும் என்றால் மிகையாகாது. ''வளையாத செங்கோலை இதுகாறும் காப்பாற்றி வருவதுபோல என்றென்றும் வளையாதபடி அருள்புரிவான் என்று நம்பிக்கை கொண்டிருக்கிறேன்.

பாஞ்சஜன்யம் இதழ் 152இல் ''திருக்குறுங்குடியில் சிவன் உள்ளே இருந்தால் என்ன? வெளியே இருந்தால் என்ன?'' என்ற நீதிமன்றக் கேள்வியைக் கண்டேன். மனிதர்கள் மனம் மாறலாம், ப்ரமாண ப்ரஸித்தவர்கள் கூட மாறலாம்! என்றானாலும் கூட, இறைவன் மனம் மாற மாட்டான்? முன்பு இருந்தபடியே மறைத்துக் கொண்டு, சில அடிகள் முன்னே வந்து "Rest in Peace" என்ற நிலை யில் உடல் புழுங்கினாலும் உருகினாலும் திடமான சித்தத்துடன் உள்ளேதான் இருந்து வருகிறான். ''புநஸ் ஸத்யம் புநஸ் ஸத்யம்'' என்ற சொல் பழுது ஆகாதவாறு, தனது பிடியில் இறுக்கமாக இறைவன் என்றென்றும் இருப்பான். கலங்கல் இல்லாப் புகழ் கொண்ட கலியன் ஒலிமாலை, நிலையார் பாடலாகவும் பொய்யில் பாடலாகவும் ஏக கண்டமாகப் பழமைமாறாதிருக்கும்.

Demi god temples, தெய்வீக, ஆர்ஷ மானுஷ, ரிஷிகள், சுயம்பு என அகலக்கால் வைத்து ஒன்றைத் தீர்மானிக்கும் a high level committee, "For this, the song sung by some individual cannot be taken as guidelines" என்று தனது அறிக்கையில் கூறியுள்ளதாக ஒரு அறநிலையத்துறை J.C. கூறியிருப்பது பற்றி அறிந்தேன். ஆழ்வா ராதிகளும், ஆண்டாள், மதுரகவியும், ஏன் நாயன்மார்களும் எப் போது Some individual ஆனார்கள்! Songs sung by some Individual என்று என்ன காரணம் கொண்டு சொன்னார்கள்? இந்த எண்ணம் இவருக்கு இருக்குமேயானால், ஆழ்வாராதிகள் நாயன்மார்கள் பாடல் பெற்ற திருத்தலங்களில் இவர்கள் பணிபுரியலாகாது. தலையிடவும் கூடாது. ✱✱✱

### ஆசிரியர் குறிப்பு:

திருக்குறுங்குடி ''பக்கம்நின்றார்'' பெயர்த்தெடுக்கப்பட்ட அநியாயச் செயலுக்குத் துணை போனவர்கள் இன்றும் பெரிய மனிதர்களாகக் கொண்டாடப்பட்டு வருகிறார்கள். சிவனுடைய சீற்றத்தை அந்த ஊர் மக்கள் உணர்ந்து வருகிறார்கள். அவனுடைய கோபம் திடீர் திடீர் சூறாவளிக்காற்று மூலமாகவும், சிறுகுழந்தைகளின் அதிக சதவிகித இறப்பு மூலமாகவும் வெளிப் படுகிறது. சென்ற சில நாட்களில் தேர்த்திருவிழாக்களின்போது அதிக அளவில் மக்கள் அகால மரணம் அடைந்து வருகிறார்கள். இது ஆட்சியில் அமைந்துள்ளவர்களுக்கு வரப்போகின்ற பெரியதொரு ஆபத்தை உணர்த்துகின்றது. ஏதோ ஒரு இலட்சம் இரண்டு இலட்சம் நிதி அளித்திடுவதால் மட்டும் இந்த ஆபத்தை மறைக்கவும் முடியாது, தடுத்து நிறுத்தவும் முடியாது. அதேபோல் தான் வறட்டு பிடிவாதத்தின் பிடியில் சிக்கி தவிக்கும் திருக்குறுங்குடி ஜீயரும் அவருக்குத் துணைபோகும் T.V.S. நிறுவனமும், உச்ச நீதி மன்றத்திற்கு வழக்கை எடுத்துச்செல்ல வேண்டிய அவசியமே இல்லை. கோடிக்கணக்கில் பணம் விரயமாக்கப்படுகிறது. தற்போது ஜீயர் பட்டத்தை அலங்கரித்து வரும் இந்த ஸ்வாமி தான் பூர்வாச்ரமத்தில் எங்களோடு சேர்ந்து சிவன் பெயர்த்தெடுக்கப் பட்டது ஆகம விதிகளுக்கும், ஆழ்வார் பாசுரத்திற்கும் முரணான செயல் என்று உயர்நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்தவர். ஆனால் அதே ஸ்வாமிதான் தற்போது இந்த வழக்கை உச்சநீதி மன்றத்திற்கு எடுத்துச்சென்றுள்ளார். திருவரங்கத்தில் கீழை உத்தர வீதியில் உள்ள வீட்டை மோசடி செய்து யாருக்கோ விற்றதற்காக திருவரங்கம் கோயில் இணை ஆணையர் தினமலர் திருச்சி பதிப்பு 9.8.1999 தேதியிட்ட இதழில் பெரியதொரு விளம்பரம் செய்துள்ளார். மேலும் திருவரங்கம் கோயிலினுள் அமைந்துள்ள தொண்டரடிப்பொடியாழ்வார் ஸந்நிதி பற்றிய உரிமை வழக்கினை, எந்த இணை ஆணையர் இந்த ஜீயர் மோசடி செய்துள்ளார் என்று குற்றஞ்சாட்டி பத்திரிகையில் விளம்பரம் செய்தாரோ அவருடன் இணைந்து தொடுத்துள்ளார். ஒரு புகழ்பெற்ற திவ்யதேச மடாதிபதி இத்தகைய மனச்சாட்சிக்கு விரோதமான செயல்களில் ஈடுபடுவது குறித்து அனைவரும் நெஞ்சில் துன்பச் சுமையை ஏற்றிக் கொள்ள வேண்டியுள்ளது. திருக்குறுங்குடிநம்பி என்று எப்போது எப்படி யார் மூலம் நீதிவழங்கக் காத்திருக்கிறாரோ? காலம்தான் பதில் சொல்ல வேண்டும். திருமங்கையாழ்வாரே Some Individual ஆனபிறகு மற்றைய ஆழ்வார் ஆசார்யர்கள் என்ன 'கதியை' அடைவார்களோ? சமூகமும் அதனை வழிநடத்திச் செல்வோரும் இதுபற்றி எந்தக் கவலையும் கொள்வதில்லை? ★★★



## "Daylight Robbery Committed by the Tamilnadu HR & CE Department proven with facts and figures - How Hindus are cheated - A detailed study."

இதழ் 156இன் தொடர்ச்சி.

### மோசடி 3 :

இந்தத் துறையை அறக்கட்டளைத் துறை என்று தான் அழைக்க வேண்டும். இஃது அறநிலையத்துறையன்று.

முதற் காரணம் Hindu Religious and Charitable Endowments Act என்பதன் சரியான மொழி பெயர்ப்பு 'இந்துசமய அறக் கட்டளைகள் சட்டம்' என்பதுதான். ''Charitable Endowments" என்பன அறக்கட்டளைகளைத்தான் குறிக்கும். அறநிலையங்களை குறிப்பிடமாட்டா. சட்டத்தின் தலைப் பிலேயே மோசடி தொடங்கி விட்டது. அறக்கட்டளைகளை மட்டும் தான் நிர்வாகம் செய்யப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டு வந்தவர்கள் இன்று கோயில்களையே கபளீகரம் செய்து விட்டார்கள்.

### மோசடி 4 :

அறநிலையங்கள் - அதாவன கோயில்கள், மடங்கள், சத்திரங்கள், பாடசாலைகள் முதலியனவற்றை நிர்வாகம் செய்ய சட்டத்தில் வழி செய்யப்பட்டிருக்கின்றதே என்று நீங்கள் வினவக் கூடும்.1951, 1959ஆம் ஆண்டுகளில் இயற்றப்பட்ட அறக்கட்டளை சட்டங்களில் இச்சட்டத்தின் வரையறை குறித்து அவற்றின் முன்னுரைகளில் (preamble) இச்சட்டங்கள் அறநிலையங்களுக்கும் பொருந்தும் எனக் கூறப்பட்டுள்ளது.

1951ஆம் வருட சட்டத்தில் பிரிவு - 20 மூலமாக அறக்கட்டளைகளை மேற்பார்வை செய்யவும் கட்டுப்படுத் தவும் ஆணையருக்கு (Commissioner) அதிகாரம் வழங்கியது. அறநிலையங்களை அவ்வாறு கட்டுப்படுத்த அந்தச் சட்டத்தில் அதிகாரம் வழங்கப்படவில்லை.

அவ்வாறு அதிகாரம் வழங்கப்படாத அந்த அளவிலேயே இது மிகை அதிகாரம் என்று 1951ஆம் வருடம் உயர்நீதி மன்றத்தால் பிரிவு 20 ரத்து செய்யப்பட்டது. உச்ச நீதிமன்றம் வேறு விதமாக இப்பிரிவைப் பார்த்தது. 1951ஆம் வருடச் சட்டம் பிரிவு 91க்கு உட்பட்டு தான் பிரிவு 20ஐ செயல்படுத்த முடியும். அதனால் இப்பிரிவு அத்துணை மோசமானதன்று என உச்சநீதி மன்றம் உயிர் பிச்சை அளித்தது.

'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று இல்லாமல் மதராஸ் அரசு பிரிவு 20இன் அதிகாரங்களை 1959ஆம் வருடச் சட்டத்தில் விரிவு படுத்தியது. புதிய சட்டப்பிரிவு 21 மூலம் ஆலயங்கள் உள்ளிட்ட அறநிலையங்கள் ஆணையரின் கட்டுப்பாட்டில் இருக்கும் என்ற அநியாயத்திருத்தத்தைச் செய்தது. இத்திருத்தம் மூலம் அறக்கட்ட ளைத்துறை மிகப் பெரிய முறையற்ற செயல்களைக் கோயில்க ளில் வெளிப்படையாகச் செய்யத் தொடங்கியது.

**மோசடி 5 :**

1951ஆம் வருடச் சட்டத்தில் இருந்த செயல் அலுவலர் நியமனம் குறித்த அனைத்து சட்டப் பிரிவுகளும் உயர்நீதி மன்றத்தால் ரத்து செய்யப்பட்டன. அவற்றுள் 58 (3) (b) என்ற பிரிவை மாத்திரம் ரத்து செய்யத் தேவையில்லை, இப்பிரிவிற்கு மேல் முறையீடு பாதுகாப்புகள் உள்ளன. மேலும் இப்பிரிவின் மூலம் நியமிக்கப்பெறும் செயல்அலுவலர் அறங்காவலரின் **வேலைக்காரர்** என்ற அளவில் தான் பணியாற்ற முடியும் என்று உச்சநீதிமன்றம் எடுத்துரைத்து, இப்பிரிவு சட்டத்தில் தொடர்ந்து இருக்கலாம் என்று அனுமதித்தது.

உச்ச நீதி மன்றத்தால் நீக்கப்பட்ட பிரிவுகளை மோசடிகள் புரிந்து திரும்பக் கொண்டு வந்த மதராஸ் அரசு. சட்டத்தில் இடம் பெறலாம் என்று அனுமதி அளிக்கப்பட்ட 58 (3) (b) என்ற பிரிவை 1959ஆம் வருடம் புதிய சட்டம் கொண்டு வந்தபோது நீக்கி விட்டது. என்ன.....? வியப்பாக இருக்கின்றதா!

இந்த அறம் அற்ற துறை செய்யும் செயல் அலுவலர் நியமனம் குறித்து கேள்வி எழுப்பும் உரிமை எவருக்கும் இருக்கக்



கூடாது என்பதே இத்துறையின் நோக்கம். மேலும் தன்னால் நியமிக்கப்பட்ட அலுவலர் அறங்காவலர்களை ஏவலாட்கள் போல் நடத்த வேண்டுமே தவிர அவர்கள் அறங்காவலருக்குப் பணிந்து நடப்பது என்பதை இத்துறை ஒரு நாளும் ஒத்துக் கொள்ளாது.

1951ஆம் வருட சட்டத்தின் பிரிவு 58இல் ஒரு சிறிய பகுதி (செயல் அலுவலர் நியமனம்) மட்டுமே நீக்கப்பட்டு அதற்கு இணையான சட்டப் பிரிவு 64, 1959ஆம் வருடச் சட்டத்தில் இடம் பெற்றது. இந்தப் பிரிவு 64இல் செயல் அலுவலர் நியமனம் குறித்து எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை.

அதற்காக சும்மா இருந்துவிடுமா இந்த அறம் அற்ற துறை? பிரிவு 64ஐ பயன்படுத்தி கோயில்களின் நிர்வாகத் திட்டத்தை மாற்றுவதாக ஆணையிடும். மாற்றப்பட்ட நிர்வாகத் திட்டத்தில் (SCHEME) ஒரு புதிய செயல் அலுவலர் நியமிக்கப்பட்டு அறங்காவலரிடம் இருந்த அதிகாரங்கள் பிடுங்கப்பட்டு அவ்வதிகாரமும் கூடுதல் அதிகாரமும் செயல் அலுவலருக்கு வழங்கப்படும்.

**இப்படி சட்ட அடிப்படை ஏதுமின்றி செயல் அலுவலர்கள் நூற்றுக்கணக்கான கோயில்களுக்கு நியமிக்கப் பட்டுள்ளனர். இச் செயல் அலுவலர்களுக்கு இக்கோயில் நிர்வாகிகளாக செயல்பட எந்த சட்ட விதியும் இடம் கொடுக்க வில்லை.** எப்படிப்பட்ட மோசடி! இந்தச் செயலை ஒரு ஜனநாயக அரசு எப்படித் தொடர்ந்து செய்து வருகின்றது? ஆட்சிகள் மாறுகின்றன ஆனால் அறக்கட் டளைத்துறையின் மோசடிகள் தொடர்ந்த வண்ணமே இருக் கின்றன. இராமன் ஆண்டாலும் இராவணன் ஆண்டாலும் இந்துக் கோயில்களுக்கு விடிவு காலம் தோன்றாது. ஏனெனில் இராமானுடைய பார்வைக்கு இந்த அக்ரமங்கள் சென்று சேர்வதில்லை.

இப்படி இத்துறை 1959ஆம் வருட சட்டத்தில் செய்த பல மோசடிகளை அடுக்கிக் கொண்டே செல்லலாம்.1959ஆம் வருடம் புதிதாக இயற்றப்பட்ட சட்டத்தில் செய்யப்பட்ட மோசடிகளோடு இத்துறை நின்று விடவில்லை. தொடர்ந்து பலசட்ட மோசடி களையும் செய்து வந்தது/வருகின்றது.

திருவாரூர் தியாகராஜசுவாமி திருக்கோயில் தமிழ் நாட்டின் மிகப் பெரிய கோயில்களுள் ஒன்றாகும். அக்கோயிலின் முக்கிய கட்டளையாகிய ராஜன் கட்டளைக்கு செயல் அலுவலர் நியமனத்தை நீட்டிப்பதை எதிர்த்து அக்கட்டளை நடத்த முழு உரிமையுள்ள தருமபுர ஆதீனம் வழக்கு ஒன்றைத் தொடுத்தது. உச்சநீதி மன்றம் வரை சென்று ஆதீனம் வெற்றியும் பெற்றது. இந்திய திருநாட்டின் மிக உயர்ந்த நீதிமன்றத்தின் தீர்ப்பு செல்லாமல் போகச் செய்ய வேண்டும் என்று அன்றைய தமிழ்நாடு அரசு 75 -அ என்ற சட்ட திருத்தத்தை முன் தேதியிட்டு கொண்டு வந்தது. அத்துடன் 75 - ஆ, 75 -இ என்ற நியாயமற்ற திருத்தங்களும் புதுப் பிரிவுகளாக புகுத்தப்பட்டன.

இச் சட்டத்திருத்தத்தை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. உயர்நீதி மன்றம், உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பைச் செயல்படுத்தக் கூடாது என்ற ஒரே நோக்கத் தில் தான் தமிழக அரசால் இச் சட்டத் திருத்தம் அநியாயமாக செய்யப்பட்டது என்று கண்டித்து தீர்ப்பு வெளியிட்டது. ராஜன் கட்டளையையும் அதன் சொத்துக்களையும் கைப்பற்ற இந்த அறநிலயாத்துறை செய்த முயற்சிகள் மண்ணைக் கவ்வின. ஆனால் உயர்நீதி மன்றத்தின் கண்டனத்திற்கு உள்ளான பின்பும் - இன்றளவும் - அச்சட்டத் திருத்தங்கள் உயிரோடுதாம் உள்ளன.

**கோயில்களை அபகரிக்க இத் துறை செய்யும் ஏமாற்று வேலைகள் பற்பல. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்:**

அப்பாவிகளையும், துணை அற்றவர்களையும் மிரட்டி, ஏமாற்றி நில அபகரிப்புச் செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுப்போம் என்கிறது தற்போதைய தமிழக அரசு. இந்த நில அபகரிப்புச் செய்யும் அக்கிரமக்காரர்களும், அவர்களுடைய கூலிப்படையினரும் அறம் அற்றத் துறையின் கால் தூசுக்குக்கூட பெற மாட்டார்கள்.

ஒரு கோயில், பரம்பரை தர்மகர்த்தாக்களின் நிர்வாகத்தில் இருந்து வந்தால், அக்கோயிலை எடுத்துக் கொள்வதாக அறம் அற்ற துறை நோட்டீஸ் ஒன்றை அக்கோயிலுக்கு அனுப்பும். இந்த 'நோட்டீஸ்' பொதுவாக, சுமாரான கூட்டம் வருகின்ற, நன்றாக நடத்தப்படுகின்ற, சொத்துக்கள் உள்ள கோயில்களுக்கு அந்த



வட்டாரத் துறை ஆய்வாளர் (INSPECTOR) 'பரிந்துரை' பேரில் அனுப்பப்படும்.

நோட்டீஸ் பெற்றுக் கொண்ட அறங்காவலர்கள் அப்பாவி களாக இருந்தால் கோயிலை ஒப்படைப்பது தம் கடமை என்று எண்ணி ஒப்படைத்து விடுவார்கள். விவரம் அறிந்தவர்களும், மன உறுதி கொண்டவர்களும் 'ஏன் ஒப்படைக்க வேண்டும்' என்று கேட்பார்கள். உடனே அது சரியில்லை, இது சரியில்லை என்று மேலும் ஒரு நோட்டீஸ் கணை பாயும். விசாரணைக்கு வரும்படி தாக்கீது வரும். விசாரணை தொடங்கு முன்பே அல்லது விசாரணை நடந்து வரும்போதே திடீரென்று செயல் அலுவலர் ஒருவர் அக் கோயிலுக்கு நியமிக்கப்படுவார். அச் செயல் அலுவலருக்கு சட்டப்படி அளிக்க முடியாத அதிகாரங்கள் பலவற்றையும் ஆணையர் கொடுப்பார்.

இதுநாள்வரை கோயிலைக் காப்பாற்றி வந்த அறங்காவ லர்கள் நீதிமன்றத்தை நாடுவார்கள். நீதிமன்றத்தில் அறக்கட்டளைத் துறை, கோயில் நிர்வாகத்தை எடுத்துக் கொள்வது குறித்து அறங்காவலருக்கு ஆக்ஷேபம் இருந்தால் அதை ஆணையரிடமே முறையிடலாம் என்று வாதம் செய்யும். நீதிமன்றங்கள் இந்த வாதத்திற்கு பல சமயம் செவி சாய்ப்பதுதான் மிகப் பெரிய வயிற் றெரிச்சல். 'என் சொத்தை நீ திருடுவது தவறு' என்று திருடனிடமே முறையிட வேண்டும் என்பது எந்த நியாயத்தைச் சேர்ந்தது?

அல்லது நீதிமன்றம் அறக்கட்டளை சட்டம்- பிரிவு 114இன் கீழ் அரசுக்கு முறையிடலாம் என வழக்கை முடித்து விடும். அறக் கட்டளைத் துறைக்கு இஃதும் உடன்பாடுதான். கோயிலை எடுத்துக்கொள்வது சரிதான் என்று ஆணையருக்குப் பதிலாக இப்பொழுது அரசு செயலர் தீர்ப்பளிக்கப் போகிறார். அவ்வளவு தான் வித்தியாசம். இந்தச்செயல் துச்சாதனன் துகில் உரிந்தான் என்று துரியோதனனிடம் முறையிடுவதை ஒக்கும்.

செயல் அலுவலர் நியமனத்தை எதிர்த்து அறங்காவலர்கள் தொடுக்கும் வழக்குகளில் அரசியல் சாஸனம் அளித்த அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படுவதைக் குறித்து அவர்கள் எடுத்துக் கூறுவர். அத்தகைய அடிப்படை உரிமை மீறல்கள் விசாரிக்க முழுத் தகுதி படைத்தவை உயர் நீதிமன்றங்களும், உச்சநீதி மன்றமும்

தாம். அத்தகைய பொறுப்பு உடைய உயர்நீதி மன்றம் மீண்டும், மீண்டும் உரிமை மீறல்கள் செய்யும் அறம் அற்றத் துறையின் செயல்களை அவ்அறம் அற்றத் துறைக்கே விசாரணை செய்யும்படி உத்திரவு (Remand) இடுவது தன்னுடைய அரசியல் சாஸனக் கடமையிலிருந்து வழுவும் செயல் ஆகும். மேலும் அடிப்படை உரிமை மீறல்கள், போன்றவற்றை விசாரித்து தீர்ப்பளிக்க அரசாங்க வேலைக்காரர்களான (Government Servants) ஆணையரோ, அரசுச் செயலாளரோ தகுதி படைத்தவர் அல்லர். நீதி முறைச் சார்பு என்று சொல்லப்படும் Quasi judicial அதிகாரிகளுக்கு அரசியல் சாசன விஷயங்களில் விசாரணை செய்யும் உரிமை கிடையாது.

மேலும் அத்தகைய உரிமை மீறல், விதி மீறல் செய்த வர்களே அவை குறித்த வழக்கை எவ்வாறு விசாரிக்கலாம்? ஒருவரும் தாம் சம்பந்தப்பட்ட வழக்கில் தாமே நீதிபதியாக இருக்க முடியாது என்பது அடிப்படை நீதியாகும். இந்த அடிப்படை நீதி தமிழ்நாட்டில் தடம் புரள்வது மட்டுமன்றி இந்த அறம் நிலையாத் துறையின் செயல்பாடுகளினால் 'தர்மதேவதை' தரையில் போட்டு மிதிக்கப்படுகிறாள்.

ஆணையரிடமோ, அரசு செயலரிடமோ நீதிமன்றத்தால் 'ரிமாண்ட்' செய்யப்பட்ட வழக்கில் தீர்ப்பு அறங்காவலருக்கு சாதகமாக வருவது மிகஅரிதான செயலாகும். அது ஒரு குதிரைக் கொம்பைத் தேடி அலைதலை ஒக்கும். மீண்டும் நீதிமன்றத்தை அணுகுவார் கோயில் தர்மகர்த்தா. தன் பணபலத்தைக்கொண்டு பெரிய வழக்கறிஞர்களையோ அல்லது அரசு வழக்கறிஞர் களையோ வைத்து அறக்கட்டளைத் துறை அறங்காவலரை எதிர் கொள்ளும். பொய்யான வாதங்களை தைரியமாக முன் வைக்கும். நீதிமன்றங்களின் பழைய தீர்ப்புகளை மறைத்தோ வேறு அர்த்தம் கற்பித்தோ வாதிடும். அறங்காவலர் தப்பித் தவறி வழக்கில் வெற்றி பெற்றால் மேல் முறையீடுகளை சந்திக்க வேண்டியிருக்கும். கோடிக் கணக்கில் பணம் செலவழிக்கும் அறக்கட்டளைத் துறையுடன் கோயில் அறங்காவலர்களால் எவ்வாறு மோத முடியும்?

சிதம்பரம் ஸ்ரீசபாநாயகர் கோயில் வழக்கில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு அனுமதிக்கப்பட்ட போதும், கோயிலில் ஒரு பழைய கட்டடத்தை மாற்றி அமைக்க அறக்கட்டளைத் துறை



முற்பட்ட போதும் விசாரணை நடைபெற்ற இரு நாட்களுக்கு அரசு ஏற்பாடு செய்திருந்த சிறப்பு மூத்த வழக்கறிஞருக்கு அரசு கொடுத்தது எவ்வளவு தெரியுமா? ரூபாய் 17.5 லட்சங்களாகும்.

**உச்ச நீதிமன்றம் உள்ளிட்ட நீதிமன்றங்கள் பலமுறை தங்கள் தீர்ப்புகளின் மூலம் தெளிவுபடுத்தியுள்ள முடிவுகள்:**

(1) ஒரு கோயிலுக்குச் செயல் அலுவலரை நியமிப்பது அசாதாரண செயலாகத்தான் இருக்க வேண்டும். கோயிலோ, அறநிலையமோ மிக மோசமாக நிர்வாகம் செய்யப்பட்டு அந்த அறநிலையமே அழியக் கூடிய ஆபத்து ஏற்பட்டால் தான் செயல் அலுவலரை அரசு நியமிக்க முடியும்.

(2) செயல் அலுவலர் நியமிக்கப் பெறுவதால் அறங்காவலர் பொறுப்பு என்பது வெற்றுப் பொறுப்பு ஆகிறது. இஃதை எல்லா சந்தர்ப்பங்களிலும் அனுமதிக்க முடியாது.

(3) கொள்கை முடிவு (Policy Decision) என்ற காரணத்திற்காக எந்த அறநிலையத்தையும் அரசு கையகப்படுத்த முடியாது.

(4) செயல் அலுவலரை நியமிக்க முற்படும் போதும், அறங்காவலரை நீக்க முற்படும் போதும், இயல்பான அடிப்படை நீதியை (Natural Justice) இத்துறையும், அரசும் பின்பற்ற வேண்டும்.

இத்தகைய தெளிவான நீதிமன்றத் தீர்ப்புகளும் வழி காட்டுதல்களும் இருந்த போதிலும் அவற்றைப் பின்பற்றாமல் சட்ட விதிகளை மீறி ஆயிரக்கணக்கான கோயில்களைக் கைப்பற்றி யுள்ளது இவ்வறமற்றத் துறை.

மேலும் அரசியல் நிர்ணயச் சட்டம், வழிபாட்டுத் தலங்கள் சட்டம் ( Places of Worship Act ,1991), தமிழ்நாடு கோயில் நுழைவு அதிகாரச் சட்டம் 1947 ( T.N.Temple Entry Authorisation Act,1947), இந்தச் சட்டத்தை தொடர்ந்து 1948ஆம் ஆண்டு வரையறையறுக்கப்பட்ட விதிகள், தன்னுடைய துறைக்கு ஏற்பட்ட சட்டம் ஆகிய இந்து சமய அறக் கட்டளைகள் சட்டம், 1959 ஆகிய சட்டங்களின் முக்கிய விதிகளை இத்துறை நாள்தோறும் மீறி வருகிறது.

**உதாரணங்களுக்குச் சில:**

1. கோயில் நிர்வாகத்தை இத் துறை மேற் கொண்டால் மூன்று ஆண்டுகளில் நிர்வாகத்தைச் சீர் செய்து மீண்டும் அறங்காவலரிடமே ஒப்படைக்க வேண்டும். எப்பொழுதும் கோயிலை தன் வசம் வைத்திருக்க உரிமை கிடையாது.

**2. இரு சமயப் பிரிவுகளுக்கிடையே மதச் சம்பந்தமான, வழிபாட்டு பிரச்சனை சம்பந்தமான எந்த வழக்குகளையும் நீதி மன்றங்கள் உள்ளிட்ட யாரும் விசாரிக்கக் கூடாது. 1947ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி எந்த எந்த பிரிவினருக்கு எவ்வெவ்வுரிமைகள் இருந்தனவோ அவ்வுரிமைகள் அவ்வாறே தொடர வேண்டும். நீதி மன்றங்களுக்கே இவ்வதிகாரங்கள் இல்லையெனின் அறக்கட்டளைத்துறைக்கு நிச்சயமாக அவ்வதிகாரங்கள் கிடையாது.** *(திருவரங்கத்தில் முன்னாள் செயல் அலுவலர் ஐயராமன் சமுதாயப் புரட்சி என்ற பெயரில் பட்டர்கள் மற்றும் அரையர்களுக்கான பிரம்ம ரதத்தை ஒழித்தது சட்டவிதிகளின் படி செல்லாது. 63 eஇன் கீழ் முறையீடு செய்து கொள்ளலாம் என்பது இயற்கை நீதிக்கு அப்பாற்பட்டதாகும். விரைவில் இந்தக் கொடுமைகளுக்கு நாட்டின் உச்சநீதி மன்றத்தில் தீர்வு காணப்படும்.)*

3. ஒரு கோயிலில் உள்ள வழிபாட்டு முறைகளையோ, உத்ஸவங்களையோ, திருவிழாக்களையோ, பூஜை முறைகளையோ நிறுத்தவோ, மாற்றவோ, புதுவழி முறைகளை அறிமுகப்படுத்தவோ அறங்காவலர்களோ, அறக்கட்டளைத் துறையோ, அரசோ எதுவும் செய்யக் கூடாது. இவை யாவும் கோயிலில் 1947ஆம் ஆண்டு நடைமுறையில் இருந்து வந்தது போல் தொடர வேண்டும். எவ்வித சமய உரிமைகளிலும், வழிபாட்டு உரிமைகளிலும், இவ்வறக்கட்டளைத் துறையோ, அரசோ எக்காலத்திலும் எந்தவித குறுக்கீடுகளும் செய்யக் கூடாது. *(ஆனால் இன்று உட்துறை விவகாரங்களில் தலையிடுவதுதான் தன்னுடைய தலையாய கடமையாக இத்துறை கொண்டுள்ளது. இது இந்த நாட்டில் வாணிபம் செய்ய வந்த ஆங்கிலேயர்கள் நாட்டை அடிமைப்படுத்திய செயலுக்கு ஒப்பாகும். மேலும் இந்த அநியாயச் செயலுக்கு நெய்யை வார்ப்பவர்கள் நம்மவர்களே. ஒரு தனி நபர் மீது கொண்ட வெறுப்பை சமுதாய வெறுப்பாக மாற்றிய பெருமை திருவரங்கத்தில் 'கைங்கர்யம்' 'கைங்கர்யம்' என்று சொல்லித் திரியும் ஸ்ரீவைஷ்ணவர்களையே*



*சாரும்(!) ஒரு சுதந்திரப் போராட்டம்போலே ஆன்மீக விடுதலைக்குத் தற்போது போராட்டம் நடைபெற வேண்டும். கோயில்களை அரசாங்கத்தின் அசுரப் பிடியில் இருந்து என்று விலக்குகிறோமோ அன்றே நாம் உண்மையான ஆன்மீக சுதந்திரத்தை அடைந்தோம் என்று கொண்டாட முடியும். 'சங்கே முழங்கு' என்று முழக்கமிட்டு இனிவரும் காலங்களில் மக்களுக்கு உணர்ச்சியூட்ட வேண்டும்.)*

4. ஒரு கோயிலில், அதன் வழிபாடு, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றிற்கு தொடர்பில்லாத கட்டிடங்களை கோயிலில் எழுப்புவதோ கட்டுவதோ கூடாது.

5. அறங்காவலர் பதவிகள் காலியாக இருக்கும் போது நியமிக்கப்படும் தக்கார் ஒரு வருடத்திற்கு மேல் நியமிக்கப்பட கூடாது. இதில் ஒரு பெரிய அக்கிரமத்தை கூசாமல் செய்து வருகிறது அறக்கட்டளை துறை. தன் துறை அதிகாரிகளையே 'தக்காராக' பல கோயில்களுக்கு நியமனம் செய்து வருகிறது. இதை விட பெரிய அநியாயம் என்னவென்றால் அந்த கோயில் செயல் அலுவலரே அந்தக் கோயிலுக்குத் தக்காராக நியமிக்கப் படுவதுதான். **'திருடனும் தலையாரியும் ஒன்றானால் விடிய விடியக் கொள்ளை அடிக்கலாம்' என்ற பழமொழியை நன்கறிந்து வைத்திருக்கும் துறை அறக்கட்டளைத் துறை தான்.**

6. கோயில்களுக்கும் அறக்கட்டளைகளுக்கும் நியமிக்கப் படும் செயல் அலுவலருக்கு அவ்வற நிலயத்தின் சொத்துக்களை நிர்வகிக்கும் அதிகாரங்கள் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

7. மதச் சமூகக் கோயில்களை (உதாரணம் சைவம், வைணவம்) அம் மதத்தைச் சார்ந்த பெரியோர்களே நிர்வாகம் செய்ய வேண்டும். இக் கோயில்களில் அரசு அதிகாரிகள் அதிகாரம் செலுத்தக் கூடாது. இஃதை உச்சநீதி மன்றம் தெளிவாகக் கூறியுள்ளது.

8. எல்லாத் திரு மடங்களும் (ஆதீனங்களும்) தனி மதச் சமூகங்கள் எனக் (Religious Denomination) கருதப்பட வேண்டும். இம் மடங்களில் மட்டுமன்றி, இம்மடங்களைச் சார்ந்த கோயில்கள், கட்டளைகள், அற நிலையங்கள் என எவற்றிலுமே இத் துறை எந்த

வித அதிகாரத்தையும் செலுத்த முடியாது. இஃதை இத் துறைச் சட்டமே (பிரிவு 107) தெளிவாகக் கூறுகிறது. மடங்களில் நிர்வாகக் குறுக்கீடுகள் செய்யத் தடை செய்யப்பட்ட இத்துறை எப்படி நிர்வாகக் கட்டணம் வசூலிக்கலாம்? அந்த சட்ட விதிகளை படித்தால் இந்த உண்மை வெளிப்படும்.

"107. **Act not to affect rights under Article 26 of the Constitution. -** Nothing contained in this Act shall, save as otherwise provided in section 106 and in clause (2) of Article 25 of the Constitution, be deemed to confer any power or impose any duty in contravention of the rights conferred on any religious denomination or any section thereof by Article 26 of the Constitution.

இவ்விதி மீறல்களையெல்லாம் சர்வ சாதாரணமாகச் செய்து வரும் இவ் அறம் அற்றத் துறை இனியும் கோயில்களில் ஆதிக்கம் செலுத்தலாமா என்பதே நாம் எழுப்பும் கேள்வி!!!

**அறக்கட்டளைத் துறை செய்யும் நிர்வாகத்தின் அழகு :**

வியாபாரம் செய்ய வந்த கிழக்கு இந்திய கம்பெனியர், கிஸ்தி, வரி வசூல் முதலியவற்றில் முதலில் ஈடுபட்டனர். பிறகு நாட்டையே தமதாக்கிக் கொண்டனர். இருப்பினும் அவர்கள் நிர்வாகத்தில் பல நன்மைகள் விளைந்தன. இந்தியாவில் பிரிட்டிஷர் செய்த ஆட்சி மிகப் பெரும்பாலும் ஊழலற்ற ஆட்சியாகவே இருந்து வந்தது.

அறக்கட்டளைகளை நிர்வாகம் செய்கிறோம் என்று கூறிக் கொண்டு கோயில் உள்ளே வந்த இந்து சமய அறக்கட்டளைத் துறை ஆட்சியோ இதற்கு நேர்மாறாக இருக்கின்றது.

சாதாரணமாக ஓர் அரசுத் துறையில் காணக் கூடிய கொள்ளைகளும் ஊழலையும் விட இத் துறையில் மிக அதிகமாகக் காணலாம். சந்தேகம் இருந்தால் உங்கள் ஊர் கோயிலுக்குக் கும்பாபிஷேகம் செய்ய வேண்டும். எல்லாச் செலவுகளையும் நீங்கள் பார்த்துக் கொள்வதாகச் சொல்லிப் பாருங்கள். இத் துறையிடம் நீங்கள் படுகின்ற பாட்டினாலும், நீங்கள் சிறிதும் நினைத்துப் பார்க்காத 'செலவினங்களாலும்' உங்களுக்குக் கடவுள் நம்பிக்கையே போய்விடும்.



இவர்களுடைய நிர்வாகத் 'திறனை' சிறிது பார்ப்போமா ?

1. கோயில் நிர்வாகம் செய்வதற்கு இத் துறை 12சதவிகிதமும் தணிக்கை செய்ய 4சதவிகிதமும் கோயிலின் மொத்த வருவாயி லிருந்து எடுத்துக் கொள்கிறது. சட்டப்படி இம் மொத்த வருவாயில் ஆண்டுதோறும் வரும் வருவாய் வருமானங்களை மட்டுமே (Revenue Receipts) சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆயினும் நில புலன்கள், தங்கம், வெள்ளி முதலியன விற்றத் தொகை, நன் கொடைகள் முதலியனவும் (Capital Receipts) சென்னை உயர் நீதி மன்றத் தீர்ப்பிற்கு விரோதமாக, அநியாயமாகச் சேர்க்கப் படுகிறது.

2. நிர்வாக, தணிக்கை கட்டணமாக 16சதவிகிதம் எடுத்துக் கொண்ட பின் கோயில் ஊழியர் சம்பளத்திற்கு மொத்த வருவாயில் 25சதவிகிதம் முதல் 40சதவிகிதம் வரை இத்துறை செலவழிக்க அனுமதிக்கிறது. செல வழிக்கவும் செய்கின்றது. அதாவது கோவில் வருமானத்தில் பாதிக்கு மேல் நிர்வாகச் செலவுகளுக்குப் போய் விடுகிறது. ***(கோயில் வருவாயில் 40சதவிகிதம் வரை சம்பளச் செலவு செய்தாலும் பல கோயில்களில் அர்ச்சகர்கள், ஓதுவார்கள் போன்ற வழிபாடு தொடர்புடைய கோயில் பணியாளர்களுக்கு அரசினால் நிர்ணயக்கப்பட்ட சம்பளம் வழங்கப்படுவதில்லை. இன்னும் சொல்லப் போனால் பல பெரிய கோயில்களில் அர்ச்சகருக்கு சம்பளமே வழங்கப்படுவதில்லை. அர்ச்சனைச் சீட்டுப் பணத்தில் பங்கு மட்டுமே இத்துறை அதிகாரிகளால் அளிக்கப்படும்.)***

கோயில் எந்த காரணத்திற்காக ஏற்பட்டதோ, அந்த காரணத்திற்காக -- அதாவது நித்ய வழிபாட்டிற்காக செலவு செய்யப்படும் தொகை பெரிய கோயில்களில் கூட 1-2சதவிகி தத்தைத் தாண்டுவதில்லை. சுண்டைக்காய் கால் பணம் - சுமை கூலி முக்கால் பணம் என்பதை விட இங்கு நிலைமை மிக மோசம்.

1. சரி, - கோயில் சொத்துக்களை பராமரித்து வருமானத்தைப் பெறவும் கட்டளைகளை ஒழுங்காக நடத்தி அவை எந்த காரணங்களுக்காக உருவாக்கப்பட்டனவோ அவற்றை நிறை வேற்றவே இச் சட்டம் என்று வழக்குப் பேசும் இத் துறை அவற்றையாவது, ஓரளவாவது ஒழுங்காகச் செய்கின்றதா என்றால் அப்படிச் செய்வதும் இல்லை. அது குறித்து எந்தக் கேள்வி கேட்டாலும் 'ஆவணங்கள் இல்லை' என்ற பதில்தான் வரும்.

கோயில்களுக்கும், கட்டளைகளுக்கும் உள்ள நிலங்கள் 4.75 லட்சம் ஏக்கர்கள். மேலும் ஆயிரக்கணக்கில் மனைகள், கட்டடங்கள் உள்ளன. இச்சொத்துக்களில் இருந்து பெறுகின்ற வருமானம் எவ்வளவு? எவ்வளவு வருமானம் வசூலிக்கப்படாமல் இருக்கின்றது? எத்துனை வருடங்களாக இப்பாக்கித் தொகைகள் நிலுவையில் உள்ளன? இவற்றிற்கான நடவடிக்கைகள் என்ன? எவ்வளவு வழக்குகள் போடப்பட்டுள்ளன? பாக்கித் தொகைகளை கட்ட வேண்டும் என்று நீதி மன்றங்கள் தீர்ப்பளித்த பின் வசூலிக்கப்பட்ட தொகை என்ன - போன்றன கேள்விகள் தகவல் அறியும் சட்டம் மூலமாகக் கேட்கப்பட்டன. இந்தத் தகவல்கள் எல்லாம் எங்களிடம் இல்லை என்று இத் துறை தகவல் அலுவலர் கூறி விட்டார். இஃது ஒன்றே போதும். நாம் இவர்களைப் பார்த்து - **''நீங்கள் நிர்வாகம் செய்த லட்சணம் போதும். கோயில்களை விட்டு வெளியேறுங்கள்' என்று சொல்வதற்கு. சுதந்திர போராட்டத்தின்போது 'வெள்ளையனே வெளியேறு' (Quit India) என்ற முழக்கம் நாடெங்கும் எதிரொலித்தது. வெள்ளையர்களும் நாட்டை விட்டு வெளியேறினார்கள். இந்து மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு (இது ஒரு பகற்கனவாகக் கூட இருக்கலாம்.) 'அரசே கோயில்களை விட்டு வெளியேறு. எங்கள் கோயில்களை நாங்களே நிர்வகித்திடும் உரிமையை அளித்திடு' என்று முழக்கமிட்டால் இது நடைபெறும்.**

1. இத் துறையிலிருந்து தகவல் அறியும் சட்டம் மூலம் தகவல்களைப் பெறுவது விலை மோரில் வெண்ணெய் எடுப்பதை விட கடினம். தகவல் அறியும் சட்டத்தின் கீழ்க் கேட்கப்படும் தகவல்களைத் தராமல் இழுத்தடிப்பதை ஒரு கலையாக வளர்த்து வைத்து அதில் தன் துறை அலுவலர்களை அற்புதமாகப் பயிற்சி அளித்து வைத்துள்ளது இவ்வறக்கட்டளைத் துறை.

நீங்கள் ஒரு கோயிலைக் குறித்தோ, அல்லது இத்துறையைக் குறித்தோ வினாக்கள் எழுதி அனுப்பினால் அவற்றிற்கான விடைகள் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட 30 நாட்களுள் வருவது அருமையிலும் அருமை. 30 நாட்கள் கழித்து நீங்கள் மேல் முறையீடு செய்ய வேண்டி வரும். மேல் முறையீடு யாருக்குச் செய்ய வேண்டும் என்பதை பரம ரகசியமாக இத் துறை இன்றளவும் வைத்துள்ளது. நீங்கள் உத்தேசமாக ஆணையருக்கு மேல்



முறையீடு செய்வீர்கள். அதற்கும் ஒரு மாத கால அவகாசம் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ளது. ஒரு மாதம் கழித்து எந்த பதிலும் வராததால் நீங்கள் மாநில தகவல் ஆணையத்திற்கு மற்றொரு மேல் முறையீடு செய்ய வேண்டி வரும்.

அதன் பிறகு ஒரு மாதமோ, இரண்டு அல்லது மூன்று மாதங்கள் கழித்தோ தகவல் ஆணையம் உத்திரவு அளித்த பின் போனால் போகிறது என்று அறக்கட்டளைத் துறை அரை குறையாகச் சிலத் தகவல்களைத் தரும். இவ்வாறுதான் இந்நாட்டு குடிமகன்களின் தகவல் பெறும் உரிமை அறக்கட்டளைத் துறையால் சர்வ ஜாக்கிரதையாகப் பேணப்பட்டு வருகின்றது.

1. தகவல் அறியும் சட்டம் 2005இன் கீழ் ஒவ்வொரு துறையும் சில முக்கியத் தகவல்களையும், ஆவணங்களையும் தாமே முன் வந்து தர வேண்டும். அப்படித் தர வேண்டிய தகவல்கள் யாவை என அச் சட்டத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. மேலும் ஒவ்வொரு துறையும் அத் துறையின் தகவல் வழங்கு அதிகாரிகளின் பெயர், மேல் முறையீட்டு அலுவலர் பெயர் முதலியவற்றை பலரும் அறியும்படிச் செய்ய வேண்டும். ஒரு தகவல் அறியும் விண்ணப்பத்தைப் பரிசீலித்து கேட்கப்படும் தகவலை கொடுக்காமல் இருக்கும் போதோ அல்லது மறுக்கும் போதோ காரணங்களை விளக்குவதோடு, அது குறித்து யாருக்கு மேல் முறையீடு செய்யலாம் என்ற விபரமும் தரப்பட வேண்டும். இவை அனைத்தையும் பின்பற்றாத ஒரே தமிழக அரசுத் துறையாக இந்த அறம் நிலையாத துறை பல வருடங்களாக விளங்குகிறது.

1. தான் வசூலிக்க வேண்டிய குத்தகைத் தொகைகளையும் கட்டட, நில வாடகைகளையும் வசூலிக்காமல் கோயிலின் நலன்களையும், பழக்க வழக்கங்களையும், ஆகம விதிகளையும் புறந் தள்ளி விட்டு வேறு வழிகளில் பணம் பெற முயல்கின்றது இத் துறை. கோயிலுக்கு வெளியே தயார் செய்யப்பட்டு, ப்ரசாதம் என்ற பெயரில் பக்தர்களை ஏமாற்றி விற்கப்படும் உணவுப் பொருட்கள் பிரசாதங்களே அல்ல. ஒருவரே பல கோயில்களில் ''ப்ரசாதக்' கடை வைத்திருப்பவராக இருப்பார் . இவருக்கும் இத் துறை அதிகாரிகளுக்கும் எழுதப்படா உடன்படிக்கைகள் சில இருக்கும். அவ்வுடன்படிக்கைகள் காரணமாகவே அந்த நபர் தொடர்ந்து இம் மோசடிக் கடைகளை நடத்தி வருவார்.

1. பணம் கொடுப்பதால் முன்னுரிமைப் பெற்று கோயிலுக்கு வருபவர்கள் அதர்ம தரிசனம் செய்வது பெரும்பாலும் தமிழ் நாட்டிலும் ஆந்திர மாநிலத்திலும் தான் காணப் பெறுகின்றது. பணம் பெற்று முன்னுரிமை அளிக்கும் இச்செயல் அரசியல் சாஸன அடிப்படை உரிமை 25க்கு விரோதமானது. லட்சக்கணக்கில் பக்தர்கள் வரும் சபரிமலைக் கோயிலிலோ அல்லது குருவாயூர் கோயிலிலோ இத்தகைய அநியாயத்தைக் காண முடியாது. தரிசனக் கட்டணங்கள் போதாவென்று ரூ.5 லட்சம் கொடுத்து ஒரு தங்க அனுமதிச் சீட்டு (GOLD CARD - இதற்குப் பெயர் புரவலர் திட்டமாம்) இவ் அறமற்ற துறையிடம் இருந்து வாங்கினால் அந்நபரும் அவரைச் சேர்ந்தவர்களும் (ஐந்து பேர்)தமிழ்நாட்டில் எந்தக்கோயிலிலும் வரிசையில் நிற்காமல் சன்னிதிக்கு நேராகச் செல்லலாம். பணத்திற்காக இன்னமும் கடவுள் சிலைகளை வாடகைக்கு விடவில்லை என்ற அளவில் நாம் சந்தோஷப்பட்டுக் கொள்ளலாம். அண்மையில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இந்தத் திட்டத்தைப் பற்றிய சில கேள்விகளுக்கு பெறப்பட்ட பதில்; திருப்பணிகளை மேற்கொள்வதற்கென 55 புரவலர்களிட மிருந்து 2.65 கோடி பெறப்பட்டது. அந்தப் பணத்தில் 2.5 கோடி வைப்புநிதியிலும் 0.15 கோடி சேமிப்பு கணக்கிலும் வைக்கப் பட்டுள்ளது. திருப்பணி செய்வதற்கு கோயில்களே இல்லையா? இந்து சமய அறநிலையத்துறை வட்டி ஈட்டும் ஒரு வியாபார நிறுவனமா? ஏன் இந்த நிதிகொண்டு மிகவும் பாழ்பட்ட நிலையில் காணப்படும் திருக்கோயில்களின் திருப்பணிகளை மேற்கொள்ளக் கூடாது?

2. அறங்காவலர்களுக்கு எந்தச் சிறப்புத் தகுதியும் வேண்டியதில்லை என்று பார்த்தோம். தமிழக அளவில் விரல் விட்டு எண்ணக்கூடிய சில பெரிய மனிதர்களை ஸம்பிரதாயத்திற்காக முக்கிய கோயில்களுக்கு அறங்காவலராக நியமிக்கும் தமிழக அரசு, மற்ற அறங்காவலர் பதவிகள் எல்லாம் ஆளும் கட்சியினருக்கே தரும். அறங்காவலர், அதிகாரிகள் இருவருமே ஆட்சி செய்வோர் சொற்படி கேட்பது இவ்வாறு உறுதி செய்யப்படுகிறது. பிறகு என்ன.... கோயில் முழுக்க முழுக்க ஓர் அரசுத் துறை ஆகி விடும். அரசு வைத்ததுதான் சட்டம் அந்தக் கோயிலுக்கு. கடவுளாவது, ஆகமமாவது, ஈ.வெ.ரா. பாஷையில் வெங்கயாமவது ...

(தொடரும்)